உ

சிவமயம்.

பெரியபுராணம்

அறுபத்துமூன்று நாயன்மார்களில் ஒருவராகிய

திருநாளைப்போவாரென்னும்

நந்தனார் சரித்திரக்

கீர்த்தனை.

சிதம்பரக்கும்மியும்

லெத்தகிராப் படங்களுள்ளது

தக்கோலம்

இராமசாமி நாயுடு & சன்ஸ்

அவர்களாற்றமது

ஸ்ரீ லட்சுமி நாராயண விலாச அச்சுக்கூடத்திற்

பதிப்பிக்கப்பட்டது

1916

இதன் விலை] [அணா 4

ஈஸ்டிரன்போமேட்
சிராரோக்கியதைலம்.

உயர்ந்த மூலிகை வஸ்துக்களால் செய்யப்பட்ட இத்தைலத்தை தலையில் தடவினால் மனோல்லாசமும சரீரகுளிர்ச்சியும் உண்டாகும் தலைமயிர் வெகு மிருதுவாயும் பளபளப்பாயு மிருக்கும் கண்டெப்படை நீங்கி கண் குளிர்ச்சிபெரும் இரவில் நித்திரைக்குபோகுமுன்பு ஒருமுறை தலையில் தேய்த்துக்கொண்டால் ஆரோக்கியமான நித்திரையுண்டாகும்.

முகப்பருவு கண்கட்டி இவைகளுக்குத் தடவ நிவர்த்தியாகும் பிரதிதினமும்உபயோகித்துவருபவர்களின்முகம் வசீகரத்தையடையும்.

புட்டி 1-க்கு விலை 0—6—0

புஷ்ப எண்ணைகள்.

மல்லிகைப்பூ எண்ணெய்
மனோரஞ்சித எண்ணெய்
தாழம்பூ எண்ணெய்
மருக்கொழுந்து எண்ணெய்
சம்பங்கி எண்ணெய்
ரோஜாப்பூ எண்ணெய்

இப்புஷ்ப எண்ணெய் முறைகள் சுதேச டாக்டர்கள் என்கிற பிரக்யாதி பெற்ற இந்திய வைத்திய நிபுணர்களால் கண்டுபிடிக்கப்பட்டு உலகமெங்கும் விற்பனைசெய்துவரப்படுகிறது இவைகளில் ஏதேனு மொன்றை கூந்தலில் ஒருமுறை பூசினால் சுமார் 15 நாள் பரியந்தம் பரிமளம் நீங்காமலே இருக்கும்.

புட்டி 1-க்கு விலை அணா 12.

டேட் ஸ்டாம்புகள்.

இதில் மாதம், தேதி, வருஷம் முதலியவைகள் சேர்ந்திருக்கின்றது பிரதிதினம் அதிசுலபமாய்திருப்பிகார்டு கடிதம முதலியவைகள் எழுதும்பொழுது தே[illegible] எழுதுவதற்கு பதில் ஸ்டாம்பு போட்டுக்கொள்ளலாம் முக்கியமாய் ஷாப்புகளுக்கும் ஆபீஸ் களுக்கும் தேவையானது. விலை அணா 8.

இங்கிலீஷ் ரப்பர்எழுத்து

உயர்ந்த ரப்பரினால் செய்யப்பட் ஓர் அழகிய பெட்டியில் தகுதியா யெழுத்துகளை இங்கி பாட், பின்ச வோள்டர் முதலியவைகளோடு ச ருக்கும் உபயோகப்படும் வண்ண அமைக்கப்பட்டிருக்கிறது.

இந்த ஒருபெட்டியினால்எத் பேர்களாவது அடுக்கி புஸ்தகங் கும் துவாலை முதலிய வைகளுக் அதிகசுலபமாய் முத்திரைப்போட் கொள்ளலாம்.

1-நெ.	65-எழுத்துள்ளது	0	12
-நெ.	110-எழுத்துள்ளது	1	0
3-நெ.	140-எழுத்துள்ளது	1	4

ராஸ்கோப் கெடியார



இக்கெடியார மாவி உறத்த சாமான்கல் செய்யப்பட்டு, பா வ க்கு வெகு கம்பீர ம் அழகாயும் உள்ள ற ட்டு வேலை செய் க ளுக்கு வெகு அனு ல மானது இதை தரித்துக்கொண் வ்வித முறட்டான வேலை செய் யும் நிற்காமல் போகும் விலை 2 0

படைகள் சங்காரம்

இதுசரீரத்தின் இடுக்கான டங்களாகிய அக்குள், துடையினிருக்கு, வஸ்திரங்கட்டுமிடமாகிய இடுப்பிலும், இடுப்பைச்சுற்றிலும், அடிவயிற்றிலும் சிறுக ஜனித்து வரவர விசேஷமாய் படர்ந்து ஒயாத நமைச்சலைக்கொடுத்து நித்திரையைபங்கப்படுத்தி கஷ்டத்தை யுண்டுபண்ணும்படியானது. சாதாரண மேகப்படை, மேககாரிகப்படை, தடிப் புப்படை என்று தென் தேசங்களில் வண்டுகடி யென வழங்கும் கொடிய வியாதியையும், சொரி, சிரங்கு, தேமல் முதலிய இதர சர்ம வியாதிகளையும் போக்கிமனதைகளிக்கச்செய்யக்கூடிய அதி அற்புத சுகந்த வாசனையுள்ளது.

1-அவுன்ஸ் புட்டி விலை அணா 12.

டி. ஆர். கன்னைய நாயுடு அண்டு கோ,
சூளை போஸ்டு, மதராஸ்.



உ

சிவமயம்.

கதையின் வரலாறு.

திருவெண்ணீறு தரித்த பரமசிவனார் திருக்கொலுவீற்றிருக்கும் வெள்ளிமலையானது இம்மலையின் பக்கத்திலிருக்கின்றது அது பெரியோர்கள் பரிசுத்த மனம்போலும் படிகம்போலும் பலவுலகிற் புண்ணியங்களெல்லாந்திரண்டுருண்டொருவடிவாகப் பிரகாசிக்கின்றதுபோலுமிருக்கிறது அதில் இருக்கு யஜுர்சாமம் அதர்வணம் என்னும்நான்குவேதங்களின் ஓசையும், வித்தியாதரர்கள் வீணையோசையும் யானைகளுடைய முழக்கமும், வானதுந்துபி முழக்கமும் இடைவிடாதிருக்கின்றன அன்றியும் தேவர்கள் சிரமாலைகளும், கற்பகமாலைகளும் கண்டு பதுபலமுனிவர்களஞ்சலிசெய்து சார்த்து மலர்மாலைகளும் அம்மலைப்பக்கங்களெங்கு நெருங்கியிருக்கின்றன அது அமரர்சித்தர் அசுரர் தைத்தியர் கருடர் கிந்நரர் முனிவர் உரகர் ஆகாயவாசிகள்போக பூமியர் என்னும் இப்பதினெண்கணங்களுந் துதிக்கப்படத் தக்கது, அக்கயிலாயமலையின்மேல் கோடானுகோடி சூரியப்பிரகாசம்போலும் விளங்குகின்ற நவமணிகள் பதிப்பிக்கப்பட்ட திருக்கோயிலுக்கு முதற்கோபுரவாயிற் காவற்றலைவர் நந்திதேவர் அவர்பரமசிவனுடைய திருப்பணிவிடைகளும் திருக்கொலுவிற்கும் அதிகாரத்தலைவர், அவர் உடைவாளும்திருப்பிரம்பும் பெற்றுக்கைலையைக் காக்கப்பட்டவர் தேவர்முதலான யாவருக்குமேலானவர், பரமசிவனிடத்து அதிக பக்தியும் அன்புமுடையவர் இவரால் இரவும்பகலும் இடைவிடாமல் காக்கப்பட்ட வெள்ளிமலையென்னும் கைலாயத்தின் அடிவாரத்தில் எச்சமயங்களிலும் நிச்சயசமயம் சைவசமயமென்றும் எக்கடவுளிலும் பரமசிவனே மெய்க்கடவுளென்றும் அறிந்தவர், உபமன்னிய மகாமுனிவர் இவர்கிருஷ்ணனுடைய தலையின்மேல் தம்முடைய திருவடிகளைச் சூட்டினவர் இறப்பற்றிருக்கின்றவர், சிவனுடைய கிருபையால் திருப்பாற்கடலை குடித்தவர் சிவனிடத்திடைவிடா தன்புள்ளவர் இந்தஉபமன்னியமகாமுனிவர் தம்மிடத்தில் அடியார்களும் முனிவர்களும் புடைசூழ்ந்திருக்கிற சமயத்தில் அவ்விடத்தில் ஆயிரஞ்சூரிய கிரணங்கள் ஒன்றாகத்திரண்டாற்போலும் ஒருபிரகாசந்திரண்டுதோன்ற அங்கிருந்தவர்களெல்லாரும் உபமன்னிய மகாமுனிவரைநோக்கி இதென்ன ஆச்சரியம் இப்படிப்பட்ட பிரகாசந் தோன்ற வேண்டிய காரணமென்னவென்றுகேட்க உபமன்னியர் சிவனைத்தியானித்துச் சொல்லுகிறார், தென் திசையில் ஆதனூரில் அவதரித்த திருநாளைப்போவார் என்னும் திருநாமம்பெற்றவர் சிவனது திருவருளால் வருகிறாரென்று இருகரமுஞ்சிரமேற்குவி

த்து அத்திஸபையைநோக்கி வந்தனஞ்செய்து ஆனந்தக்கண்ணீர் அங்கமெங்குஞ்சிந்த உபமன்னியர் துதிக்கும்போது மற்றவர்கள் தங்களுக்குண்டாகிய சந்தேகந்திருப்படி கேட்கத்தொடங்கினார்கள்.

எங்களாண்டவராகிய சிவனுடைய திருவடிகளை யல்லாமற்றொரு தெய்வத்தினடிகளையும் வணங்கமாட்டோமே இப்பொழுது வணங்கவேண்டிய காரணமென்னவென்று முனிவர்கள் கேட்க உபமன்னியர் சொல்லுகிறார் கேளுங்கள் பெரியோர்களே முனிவர்களே மற்றுமுள்ளவர்களே பரமசிவன் தரிக்கப்பட்ட திருமாலையையும் திருவெண்ணீற்றினையும் அணிகின்றனர் எள்ளி — விடமில்லாது நிறையுங்கொள்ளி — நதிசூழ்ந்த சோழவளநாட்டிலிருக்கும் மேற்காநாட்டில் ஆதனூரில் தீண்டப்படாதவர் குலத்திலே சேற்றிற் செந்தாமரை யுற்பத்தியானாற்போலும் நந்தனொருவர் பிறந்தார், அவர் விவேகசூட்சியும் வெட்டிமைத்தனமாகிய காணியாட்சியும் உடையவர் இவர் குலாசாரத்தன்மையும் நன்மையுஞ்செய்து மலர்சொய்துதாஞ் சிவபூசைசெய்து சிவாலயங்களுக்கு அறையும்பேரிகை மத்தளங்களுக்குத்தோலும் வாருந் யாழுக்கு நரம்பும் சுவாமிக்குக் கோரோசனையும் முறையாகவும் இறையாகவுங்கொடுத்துவருவார், சிவாலயத்தில் அங்கு சந்நிதியிற்போய்த் தூரத்திலிருந்து மனங்கசிந்துருகிச் சிவனைப்பாடியாடி வருகிறநாளில் திருப்புன்கூரில் பரமசிவத்தைத் தரிசிக்க ஆதனூரிலிருந்துவந்து திருக்கோயிலின் திருவாயலினின்று சிவலிங்கத் தரிசனைக்காண ஆவலாகவும் காவலாகவும் வணங்கிப் படுக்கையில் பரமசிவனார் சந்நிதிக்கு முன்னிருக்கும் நந்திகேசுரரை விலகப்படிசெய்து காட்சிகொடுத்தருளினார்

நந்தனார்சுவாமி தரிசனைசெய்து வரும்வழியில் ஒரு பள்ளத்தைக் கண்டு அதைப்பெருங்குளமாக வெட்டித்தம்முடைய ஆதனூரென்னுஞ்சேரிக்குப்போனார் இவ்வாறு பலதலங்களையும் வலஞ்செய்து நலஞ்செய்து ஆத்திமலரணிந்த சிவனையேத்திச் சிதம்பரத்திற்குச்செல்ல மனம்வந்து தம்முடையசாதி கோவிலுக்குட்போக யோக்கியமில்லையென்று விசனமடைந்து நாளைக்குப்போவோமென்று சொல்லியிருந்தார் சிவபணிவிடையாலும் தன்னை வடிமைகொண்டிருந்த வேதியருத்திரவு தடையினாலும் போகக்கூடாமையால் அநேகநாள் சென்றன, நாளைப்போவோமென்றபடியால் அவருக்குத்திருநாளைப்போவாரென்றுபெயர் வந்தது அதன்பிறகு திருநாளைப்போவார் சிதம்பரம்வந்ததும் சுவாமி அவருக்குக் காட்சிதந்ததும் ஆகிய சரித்திரங்களை உபமன்னிய மகாமுனிவர்சொல்லக்கேட்டு யாவரும் பேரானந்த மடைந்தனர் இதனடியில் தொண்டிசிந்தினால் தெரிந்துக்கொள்ளலாம்.

Blank page counted





உ

சிவமயம்.

திருநாளைப்போவாரென்னும்

நந்தனார்சரித்திரக்கீர்த்தனை.

கற்பகவிநாயகர் துதி.

காப்பு—வெண்பா.

கந்தன் தனைப்பயந்த காதலனார் பேருபெற்ற
நந்தன் சரித்திரத்தை நானியம்ப—சுந்தரஞ்சேர்
தில்லையணி கோபுரத்திற் றேடிவளர் கற்பகத்தான்
அல்லும் பகற்றுணையே யாம்.

முக்குறுணிவிநாயகர் துதி.

விருத்தம்.

சித்தணிகரத்தானைத் தில்லை வாயகனைக்குளனைவக்த
நந்தன்முக்குறுணியான்றன் கனிவொடுதாள்வணங்கி
நந்தன்பேருட்பாதுண்ட கற்புகழ்ச்சொல்லிப்பின்போற
நந்தமுற்றுனிறைஞ்சுங் கலைமுடையனாதுவேனே.

சபாபதிதோத்திரம்.

கலிவிருத்தம்.

தக்ககீர்த்திகொள் நந்தன்சரித்திர
மிக்ககாதையை யெடுத்துவியம்பிடச்
செக்கர்மேனியர் தில்லைச்சபைதனிற்
றக்கத்தோமெனும் தாட்கொள்சிரங்கொள்வாம்.

சிவகாமி தோத்திரம்.

விருத்தம்.

பாம்பினைத்தந்தையாகப் படைத்துப்பின்யெவருங்காணப்
பாம்பிணைப்பணியாய்க்கொண்ட பகையருட்பாதமேத்திப்
பாம்பினிற்புலியும்பாம்பும் பார்த்திடநத்தனார்க்கன்
பாம்படிமுத்திதந்த பழங்கதைபகருவேனே.

சுப்பிரமணியன்—தெய்வானை—சரஸ்வதி—இலக்குமி.

விஷ்ணு இவர்கள் துதி.

விருத்தம்.

சச்சிதா னந்த சதாசிவ னருளைச் சார்ந்தநித் யானந்தநந்தன்
உச்சிதக்கதையைக் கீர்த்தனையாகவுலகெலாந் துதித்திடச்சொல்ல
அச்சிலை வேற்கை யறுமுகன் தெய்வ யானைசெங் கலைமகள்கமலை
பச்சைமான் மற்றும் பரவியதேவர் பாதபங் கயம் பணிகுவேனே.

சுகூ—நாயன்மார் தில்லைமூவாயிரவரிவர்கள் துதி.

விருத்தம்.

வாதவூ ரடியாரோடு மற்றறு பத்து மூவர்
பாதமே வணங்கித் தில்லைப் பதிதனி னுறுமேவும்
போத மூவாயிரத்தோர் பொன்னடிக் கமலமுன்னி
நூதுநந் தன்சரித்திர முறைத்திடத் துணிந்த தாமே.

அவையடக்கம்.

விருத்தம்.

சிற்பிகள் காண்போர் சிந்தையும் விழியும்
செப்புநல் லின்புறத்தீட்டும்
விற்பனங் கண்ட வறிவிலா னெழுதும்
விகமெனு முத்தமி ழென்னுஞ்

சொற்புகழ் கல்வித் துறையெலாந் தெரியுந்
தூயநற் புலவர்முன் கருதிப்
பொற்புற விசைக்குங் கீர்த்தன மிதனைப்
புவிமிசை மதிப்பார்க ளம்பா.

விநாயகர் துதி.

பல்லவி.

கணநாதாசரணம் காத்தருள்
கணநாதாசரணம்.

அநுபல்லவி.

பணமார்சேஷன்றாங்கிய பார்மீதினிலே நேருங்
குணமார்நந்தன்சரித்திரங் கூறக்கிருபைக்கண் பாருங்(கண)

சரணங்கள்.

சொல்லும்ப்ரணவமூலா தூயவேதாந்த நாதா
துலங்குமுவர்மன துகளறுத்தருட் போதா
நல்லமேதகமுதல் நாடிநுகர்வி னோதா
நாயேன்சொல்லுந்தமிழை நாடிரட்சிக்குந் தாதா(கண)
அம்பரமானமன்று ளாடும்பர னளிக்க
அரைநொடியினில்வல மாகிமனங் களிக்க
உம்பர்பிரானுகந்தே வுயர்மாங்கனி யளிக்க
உளந்தளராமலுண்ட முதல்வாதுய ரொழிக்க
தேஜோங்குநவரத்னச் சிகரமேலக் கோபுரக்(கண)
தேவீற்றிருக்குமெங்கள் தேவருண் டலாதர
பூஜித்தவர்க்குவரம் புரிந்தருளும் மாதர
பீமிசைநாடகஞ்செய் புநிதவோ மாஅர(கண)

புராணிகர் சொல்-விருத்தம்.

வளம்பெறத் தரும மோங்கிய வாத
னூரினில் வாழ்ந்திடும் புலையர்
உளமகிழ்ந் தெங்கள் குடிப்பெயர் விளங்க
வுதித்தநற் றீபமே மணிவ்ய
களங்கிலாக் கதிரே யெனப்புகழ்ந் தோதக்
கதித்தசீர் நந்தனார் சரித்திரம்
விளம்பின முதலிற் சிறுட்டயம்படித்து
மென்மையு மிகப்புனைந் தனனே.

தோடயம்.

இராகம்—நாட்டை—ஆதிதாளம்.

திருவளர்தருமாத னூரர் செறிபுலைக்குடிலவதாரர்
தருமநெறிநந்தனார்ப் பேரர் சரித்திரமதனைசொலவே ஆ ஆ

அருள்வளர்கஜமுக சாமி அம்பிகைதந்தருளுஞ்சாமி
அங்குசங்கரதல சாமி அம்புயத்தாணிதந் துணையே—ஜெய

வண்டணிமாமலர்த் தாரன் மண்டலம்வாழ்த்தியதீரன்
மண்டுமெளியற்கு தாசன் மன்னுங்கதைசொலவே ஆ ஆ

புண்டரீகபுரத் தீசன் புராரியுளமகிழ்நேசன்
தண்டலர்மாமண வாசன் தாமரைத்தாள்கடுணையே—ஜெய

விருத்தம்.

சங்கரன்றனக்குஞ்சண்முகன்றனக்கும் சதுர்முகபிரமனார்தனக்கும்
பங்கயமாற்கு மவர்மனையாட்கும் பரமகட்பாவலர் தமக்கும்
தயங்கியவட்டவசுக்களானவர்க்குசதுர்மறையோதுமந்தணர்க்கும்
பொங்கியமூவாயிரர்நந்தனார்க்கும் பொதுப்படமங்களம்புகல்வாம்.

இராகம்—அசாவேரி—அடதாளம்.

பல்லவி.

ஆதிமத்தியாந்தனுக்கு மங்களம் எங்கள்
ஆநந்தநந்தனார்க்கு மங்களம்.

அநுபல்லவி.

பார்திமதிநதியும் பாம்பும்புலி யுரியும்
சோதிக்குழையணியுந் துலங்கவருட புரியும்(ஆதி)

சரணங்கள்.

சிலையைவடிவழகிற் சிறந்ததொருபெண் ணாக்கி
சிலைவளைத்தபர சிராமன்கெர்வத்தை போக்கி
மலையைச்சுமந்துபெரு மடுவிலொருகாற் றாக்கி
மாநடனங்கள்செய்த மாயமானினையெய்த (ஆதி)

குருபரநாதனுக்குங் குறமகட்பாக ருக்கும்
அருணகிரிநாதனுக்கும் மருள்செய்விசாக ருக்கும்
ஒருமுருகாவென வுளங்களித்தவ ருக்கும்
உம்பர்கோனுக்குகந்த வுயராசினைத்தந்த (ஆதி)

சக்கரைமுக்கனியவல் தனைநுகர்நா தருக்கும்
சகலதேவர்தமக்குஞ் சகலவசக்க ளுக்கும்

பக்குவமாகவிதைப் பாடுஞ்சங்கித ருக்கும்
பார்மகட்குப்பங்கயப் பாவையர்க்கும்விஜய (ஆதி)

பெரியபுராணச் செய்யுள்.

விருத்தம்.

திருமறையோர் புராணமவை பதின்மூன்று சிவவே
தியரானை வழிபட்ட புராணமீ ரிரண்டு
குரைகுழன்மா மாத்திரரொன் றதுவர்முடி மன்னர்
குறுநிலமன்னவரைவர் வணிகர்குலத் தைவ
ரிருமைநெறி வேளாளர் பதின்மூவ ரிடைய
ரிருவர்சா லியர்குயவர் தயிலவினை யாளர்
பரதவர்சான் றார்வண்ணர் சிலைமறவர் நீசர்
பாணரிவ ரோரொருவ ராம்பகருங் காலே.

உபமன்னியபகவான் ரிஷிகளுக்குச்சொல்லுகிற

வசனம்.

இவ்வுலகில் பெரிதாகிய வேதசாஸ்திரங்களுக்குள்ளே மிகவுஞ்சாரமாகிய பரமசிவபத்தியையுண்டு பண்ணுகின்ற பக்திவிலாசத்தை(உபன்னியபகவானென்னவர்) அநேகம்ரிஷிகள்கேட்கச்சொல்லுகின்றார் (பெரியபுராண) மென்று சொல்லப்பட்டநூல் சேக்கிழார் சுவாமிகளாலே செய்யப்பட்டது ஸ்காந்தபுராணத்திலும் இன்னமநேகபுராணங்களிலுஞ் சொல்லப்பட்டபுத்திமார்க்கங்களாகிறகடலிலே நீரைக்கையாலள்ளிக் குடித்ததுபோலச்சிலதுகீர்த்தனங்களினாலும் விருத்தங்களினாலும் சிலபத்தர்கள்சரித்திரங்களைக்கொண்டாடுவதுபோல உளரிமைனென்று ஆனைதண்டாபுரம் கோபாலகிருஷ்ணையன் பெரியோர் அடிவணங்கி ஆனந்தம் பெருகிச்சொல்லிய திருநாளைப்போவார் சரித்திரத்தையாவரும்வினவக்கேட்கும்படி சிரம்வணங்கி,விஞ்ஞாபினேன், பாரதம், பாகவதம், பகவற்கீதை, சிவரகசியம், ஸ்காந்த முதலாகிய பக்திஞான வயிராக்கிய சாஸ்திரங்களிலே மிகவுஞ் சாரமாகியபரமசிவ பக்பதிண்ணமல், இச்சுரவேத பாராங்கதனா யிருக்கின்றபிராமணனைப்பார்க்கிலும் பரமசிவபாதாரவிந்தபக்தி பண்ணுகிறவன்பறையனாயிருந்தாலும் பதினான்குலோகத்தையும் பரிசுத்தம் பண்ணுவானென்று உபமன்னிய பகவான் சொல்ல அதற்கு ரிஷிகள்சொல்லுகிறார்கள் பக்திஞான வயிராக்கியங்களைதெரியப்படுத்தாநின்ற வேதபுராணங்களைப்பார்க்க அறியா

ராய் அன்றியில் அவிவேகிகளாயிருக்கிற சண்டாளர்களுக்கு எப்போது பத்திவருமென்று ரிஷிகள் கேட்க உபமன்னிய பகவான் சொல்லுகின்றான்.

திருநாளைப்போவார் சரித்திரமுழுதும் நொண்டிச்சிந்தாகப் பாடியிருப்பதால் முன்னம் சிந்துபாடி அதன்பிறகுசரித்திரத்தின் தொடர்ச்சியில் கீர்த்தனங்களோடு இடைநடுவில் சிந்துதுண்டுதுண்டாகச் சேர்ந்துவரும்.

உபமன்னியபகவான் ரிஷிகளுக்குச் சொல்லுகிற

நொண்டிச்சிந்து-இ-ம்-புன்னாகவராளி

பழனமருங்கணையு·புலைப்பாடியதுகூறைவீடுதனில்,சுரையோ படர்ந்திருக்கும் அதைத்சுற்றிலும் நாய்கள் குலைத்திருக்கும் பருந் தோடிவட்டமிடும் இளம் பச்சைபிசிதமே லிச்சைகொண்டுகோழி கூவுங்கூக்குரலும் பாழுங்கொல்லையருகினில்வெள்ளெலும்புமநரம் புங்குவித்திருக்கும் பல நெட்டிமிதந்திடுங் குட்டைகளில்நண்டோ குடியிருக்கும் சிறுநத்தைகமடம் வலுத்திருக்கும்தோலுறுங்கேணி களில் வெகு தொல்லைப்படும்வாடை சொல்லறியாப்பரம்போ அடித்திருக்கும்-வயற்-பக்கங்களில்மெத்த நொக்கெலும்புமிழித் தோல்நரம்புகளும் அவர்க் கீனமில்லைசிறு மீனுலரும் தெருவில் விளையாடிக்கொண்டு அவர் தெந்தினம்பாடுவார் சுந்தரமாய் இலுப்பை மணியரையில்கட்டி இண்டந்தலைகளில் பூண்டிருக்கும் சங்குதோடு காதணியும் அருந் தாவடமேயவர் தூவிடமாய் மணியோதரித்திருப்பார் தெருவாசற்புரத்தினிலேசிக்கொண்டுகொண்டாட்டமாயிருபபார் கையைக் கொட்டிக்கொண்டுதனக் கிஷ்டமுடன் மதுவுண்டு கெக்கலிப்பார் பறைவாத்தியமும்வெகுநேத்தியுடன் இருக்கும் புலைபாடி அதில் ஈசன்திருவடி நேசமுடன் சாரும் ஒருபுலையர் அவர் சாதி முறை தவறா தவறும்நந்தனாரவர்பெயராம்வெகுநல்லவராமிந்தத்தொல்லுலகில் அவரேசிவனடியார் அவர்க்காருமெதிரில்லை தாரணியில் கோடிகோடி சென்மங்களோ முன்னங் குற்றமரச்செய்த நற்றவமே அவதாரமானதுவோ ஈசன் அன்புபுரியும் பேரின்பசுகம் கொள்ளை கொள்ளவோ பிறந்தார் திருக் கோயில்வலஞ்சுழன்றுவலுடன் செய்யும்பணிவிடைகள் ஈசன் சிந்தைமகிழ்ந்து குளிர்ந்திடவே மத்தளபேரிகைக்கும்-இசைவார்களெடுத்துப் புறந்தோல் கொடும்து மறவாமலே தினமும் நல்ல வாசம்பெருகுங்கோரோசனையெடுத்

தேவாலயங்கள்தோறும் வந்துசித்தமுறுகியேபத்திவெள்ளம்புரண் டோடிக்கங்குகரை என்று பேதமறியவொண்ணாது கண்டூர்சாதியி னீசனவர்பேணிச் சாருந்தொழின் முறையாரும் பகல் திருப்புன் கூர்ச்சென்றவனைக்கண்டுசேவித்திசைபாடிபாவித்தபின் தில்லைச்சித ம்பரத்தைக்கண்டு சேவிக்கவேண்டு மென்றவனுடன் நாளைப்போ வேனென்றாராம் தன்னை நாடும்பறையர்களோடிவந்து அண்ணே போகாதே நமக் காண்டைபொல்லாதவன் வேண்டிக்கொள்ளான் பார்ப்பாரசாதியுண்டோ என்ன பாடுபடு முழக்காடுமங்கே நமக்கு ந்திருநாளோ அந்த ஞாயமுண்டோ யென்னமாயமிது வென்றேத டை செய்தார் சிவன் வேடிக்கைதானென்று நாடிக்கொண்டே அ றியாது போலிருந்தசெம்பொன் னம்பலத்தாடியைக் கும்பிடவே ஆதனார் தனிலிருந்திவிடும் அம்புபோலப்பறந் தையமின்றித் தில் லையருகில் வந்தார்மனந்தேறிக்கொண்டார் குறையாறிக்கொண்டா ர்கெண்டாமணியோசை காதில் கேட்குதென்றாரதைப் பார்க்கவெ ண்றேகொண்டாட்டமாகிவந்தார் கையைக் குவித்துக் கொண்டே தனக்கம்பிட்டதோ வென்றேமனமகிழ்ந்தார் தெருவீதியிலேவந்து காதலுடன்கண்டார்களையாறி இருகண்களிலானந்தம்பொங்கிடவே நின்றார் மதிற்புறத்தே வெகு நேத்தியென்றாரிதைப் பார்த்ததில்லை பணிந்தார் பரவசமாய் நல்ல பாக்கியசாலிகளாகு மென்று இது தானோதில்லைப்பதி என்று எக்கலித்ததாரடிக் கெக்கலித்தார் ஐயா வுன் சந்நிதியோநான் ஆசைகொண்டு வந்தேனேசமுடன்தெருவில் பொடித்தூளை அள்ளித்தேகமுழுதினுந்தாகமுடன் தரித்தார்திரு நீறாய் நாலு சாஸ்திரவேதங்கள் பார்த்துணரும்பெரியோரிருக்குமி டம்இந்தப் பேயனிருப்பதுஞாயமல்லநானோபறைச்சாதிதில்லைநாத ன்தரிசன மாதவறாய்ப்பண்ணப்படுபாவி இந்தப்பாரிலிருப்பதுசீர லவே என்றே குளத்தோரம் புக்கி ஏங்கிநின்றார் மிகஏங்கிநின்றார் ஓயாப்பெருங்கவலை கொண்டு உள்ளங்குழைந்திட தெள்ளுமனக்க ண்ணீர் கரைபுரள இருகைதொழுவாரவர் மெய்தொழுவார் கீழே புரண்டழுவார் ஒன்றுங் கேள்விமுறையில்லையோ நாதா வென்றே தலைகுனிந்தார் எந்தன் வேதனையைக்கண்டு ஆதரிக்கும் தெய்வங்கி டையாதோ பாவிசித்தந்தெளிய விரகதிதந்து வாவென்றழைப் பாரோ விண்ணில் வானவர் போற்றுமூனமிலா கனகசபை நடனம் கண்ணிற்காட்டக்களித்திட நாயடியேன் வருந்ததித் துதிப்பேனு எந்தன் வாணாளொழிவது வீணெனவே அடாயிதென்ன வென்று சொல்லி அந்நகர் வீதியைச்சுற்றிவந்தார் இரவும்பகலோயாரதை ஈசன் கண்டுவிசுவாசமுடன் பாலகிருஷ்ணன் பணியும் திருப்பாத

முள்ளதில்லைநாயகரே் கனவிலுமாகிவந்து காக்ஷிகொடுத்துக் கடா க்ஷித்தபின் எரியினிடைமூழ்கி வெகு இன்பம் பெருகிய அன்பர் துதி வேதமுனி வடியாய்த் தில்லைவேதியர்கண்டிருகைதொழுதார் அங்கம்புளகிதமாய்ச் செம்பொன் னம்பலத்தாடிய சம்பிரமத்தை க் கண்டாரறிந்திலரால்.

இ—ம்—எ துகுலகாம்போதி—சாப்புதாளம்.

பல்லவி.

நீசனாய்ப்பிறந்தாலும் போதும்—ஐயா
நீசனாய்ப்பிறந்தாலும் போதும்

அநுபல்லவி.

ஆசையுடனம்பலவனடியிலிருந் தாலும் (நீச)

சரணங்கள்.

கோதிலாத்தவங்கள் புரிந்தாலும் தங்கள்
குலவண்மைதவறாதநெறியி லிருந்தாலும்
வேதமுடியாவுமுணர்ந் தாலும்—மாயை
விலகாதுஒருநாளுந்துலையாது துன்பம் (நீசனாய்)

களவுகொலைசெய்துவந் தாலும்—பழி
காரருடதனந்நேரங்கூடியிருந் தாலும்
வளமறவேவாழ்வுகெட் டாலும் நல்ல
மணிதன்வணிடமாகமறலியணு காது (நீசனாய்)

எத்தனைகருமங்கள்செய் தாலும்—எங்கு
மிடையாதகொடையாளியெனவிருந் தாலும்
கோத்திரக்கீர்த்திமிகுந் தாலும்—எங்கள்
கோபாலகிருஷ்ணன்தொழும் பாதம்நினையாதோன் (நீச)

வசனம்.

அப்படியே பத்திசெய்தால்போதும் மற்றசாதி வருணாசிரமங் களினாலே ஒன்றும்பிரயோசனமில்லையென்றும் ஒருஇந்திகாசத்தை ச்சொல்லுகிறார் பூர்வத்திலே தில்லைவெட்டியா னென்றும் பெற் றான் சாம்பனென்று ஆதனார் நந்தசாம்பனென்கிற திருநாளைப் போவானென்றும்பெயர்பெற்ற இம்மூன்றுபேர்களுந்திருச்சிற்றம்ப லத்தையடைந்தார்கள் இம்மூன்றுபேர்களில் நந்தசாம்பனென்பவ ர்மாத்திரம்தில்லை மூவாயிரம்பேர்களும்பார்க்கச் சபாப்பிரவேசமா னாரென்றுசொல்ல ரிஷிகளெல்லாரும் ஆனந்தமடைந்து உபமன்னி

யமகாரிஷியைப் பிரதக்ஷணஞ்செய்துப்பாடிவணங்கி அஞ்சலிசெய்து ஒப்சுவாமி எல்லோரும்பார்த்திருக்கையில்முத்தியடைந்த திருநாளைப் போவரென்று பெயர்படைத்தும் பேறுபெற்றசிவபக்தருடைய சரித்திரத்தைச்சொல்லுங்களென்றுரிஷிகள்பிரார்த்தித்துக் கேட்கும் போது உடமன்னியமகாரிஷியானவர் மிகவுஞ்சந்தோஷமடைந்து ஈஸ்வரனுடைய குணங்களை வருணிப்பதைப் பார்க்கிலும் ஈஸ்பரபக்தர்களுடைய குணங்களைச்சொல்லுகிறது மெத்தவும்புருஷார்த்தமென்றுசொல்லத் தொடங்கினார் சிதம்பரத்திற்கு நாளைப்போவேனென்று சிலதுநாள் நந்தன் சொல்லிவந்தபடியால் நந்தனுக்குநாளைப் போவாரென்று நாமதேயமுண்டாச்சுது ஆகிலும் ஈஸ்வரனுடைய குணங்களைச் சொன்னாலுஞ்சொல்லாம்பக்தர்களுடைய குணங்களைச் சொல்லயாவர்க்குந்தெரியாது தெரிந்தமட்டுஞ்சொல்லுவோமென்று மயிர்சிலித்து ஆனந்தக்கண்ணீர் வடித்து மனங்களித்துப் பரமசிவனைநினைத்துவாயால்துதித்து ஆத்துமா ஆத்துமிகளாயிருக்கின்ற தாபத்திரயங்களினாலே துன்பப்பட்டிருக்கின்றசெந்துக்களுக்கு அமிர்தவருஷம் வருஷித்தல் போல நந்தனாருடைய புண்ணியகதாமிர்தத்தைவருஷிக்கத்தொடங்கினார்

இராகம்—சங்கராபரணம்—ஆதிதாளம்.

பல்லவி

நந்தன்சத்திரிரமானந்தம் ஆனாலுமத்தி
யந்தம்பக்திரசகெந்தனு சொல்லச்சொல்ல (நந்தன்)

அநுபல்லவி.

நந்தன்சரித்திரம்வெகு அந்தஞ் சிவனாருக்குச்
சொந்தந்துலையும்பவ பந்தங் கேட்டபேருக்கு (நந்தன்)

சரணங்கள்

ஏதுஇவனைப்போலேசாது பூமியிலிருக்
காதுஅரிதுஇருகாது படைத்தபேர்க்கு (நந்தன்)
வாடிமனதிளகிப் பாடி அரகராவென்
றாடிகனகசபை நாடிச்—சேருவேனென்ற (நந்தன்)
அண்டர்கொண்டாடுஞ் சோழ மண்டலநாதனைச்சூழ்
கொண்டமேற்கநாட்டில் விண்ட ஆதனூரில்வாழ் (நந்தன்)

இராகம்-கமாசு ஆதிதாளம்.

பல்லவி

திருநாளைப்போவான் சரித்திரம்
தேனிலும்பாலிலுமினியமினியதுகண்டீர் (திருநா)

அநுபல்லவி.

சித்தமுருகியசிவயோகிகளுக்
கர்த்தமிதுவென்றனுதினபணியும் (திருநா)

சரணங்கள்

மேதினிபுகழுமாதனூர்விளங்க வந்த
மாதவஞ்சாதனைபெருகிய
பேதமிலாதவன்வேதகுருபா
நாதனைப்பணியும் (திருநா)
மனதிற்குற்றம் மில்லாதவன்—நிந்தை
வஞ்சனைமாயை சொல்லாதவன்
கனவிலுநினைவிலும் சிவபதங்குருபதங்
கருத்துறைகளித்திடப் பெருத்திடவரசனும் (திருநா)
சாதிமுறைமைதவ றாதவன் பல
சாகரத்திடை முழுகாதவன்
பூதமாயாதிக ளாகியவுலகம்
பொய்யிதுமெய்யிது வல்லவென்றறிந்திடும் (திருநா

பெரியபுராணச் செய்யுள்.

கொச்சகக்கலிப்பா.

பகர்ந்துலகுசீர்போற்றும் பழையவளம் பதியாகுந்
திகழ்ந்தபுனற் கொள்ளிடம்பொன் செழுமணிக டிரைக்கரைதான்)
முகந்துதர விருமருங்கு முளரிமலர்க் கையேற்கும்
அகன்பணைநீர் நன்னாட்டு மேற்காநாட் டாதனூர்

வசனம்.

கொள்ளிடத்துக்குச்சமீபமாகிய உலகமெல்லாம்புகழும்படிக் குக்கீர்த்திபெற்றிருக்கின்ற அமராபதி அளகாபுரிப்பட்டணத்தைத் தோற்கச்செய்யும் மாடமாளிகை கூடகோபுரத்தோடும் அணிமாதி சித்திகள்நிறைந்துதிரண்டும் செல்வத்தோடும் வேதவேதாந்தத்து ஞானமறிந்து சாட்சாத்காரம் பெற்ற வேதியரோடு மற்றமூன்று வருணாச்ரமங்களாலேசூழப்பட்டு பூலோகத்திலதிகமென்றுசொல் லப்பட்ட ஆதனூரென்னும் கிராமத்துக்கு வெளியில் நஞ்சைலங் நி

ளிலே சூழப்பட்டிருக்கின்ற கடைச்சாதியார் குடியிருக்குஞ் சேரியைக்கொண்டாடிச் சொல்லுவார் ஏனென்றால்ஸ்காந்தபுராணத்தில் அஞ்சபோககண்டத்திலே சிவபத்தன் குடியிருக்குஞ்சேரியைக் கைலாசமென்று வருணித்துச் சொன்னபடியால் உபமன்னிய பகவான் மிகவுங்கொண்டாடிச் சொல்லுகிறார்.

சிந்து.

பழனமருங்கணையும்-புலைப்பாடியது கூறை விடுதனில் சுரைபோபடர்ந்திருக்கும் அதைச்சுற்றிலும்நாய்கள்குலைத்திருக்கும்பருந்தோடி வட்டமிடும்-இளம்பர்சைபிசுதமே மிச்சைகொண்டுகோழி கூவுங்கூக்குரலும்பாழுங்கொல்லையருகினில் வெள்ளெலும்புந்நரம் புங்குவித்திருக்கும் பல நெட்டிமிதந்திடும் குடைகளின் நண்டோ குடியிருக்குஞ்சிறுநத்தைகமடம் வலுத்தசருக்கும் தோலுருங் கேளிகள்வெதுதொல்லைப்படும்வாடை சொல்லறியாப்பாம்போ அடித்திருக்கும் வயற் பக்கங்களில்மெத்த கொக்கெலும்பும் கிழித்தோல் நரம்புகளும் அவர்க்கிணையில்லை சிறும்நுலரும் தெருவில்விளையாடிக்கொண்டு அவர்தெந்தினம்பாடுவர்சுந்தரமாய் இருப்பைமணிவரையில்கட்டு இண்டந்தலைகளில்பூண்டிருக்குஞ்சங்குதோடுகாதணியும் அருந்தாவடமேயவர் தாவிடமாய் மனிமேயாதரித்திருப்பார் தெருவாசற்புறந்தனிலேசிக்கொண்டு கொண்டாட்டமாயிருப்பார்கையைக்கொட்டிக்கொண்டு தனக்கிஷ்டமுடன் மதுவுண்டுகெளிப்பார் பறைவாத்தியமும்வெகு சேத்தியுடன் இருக்கும்புலையாடி அதின் ஈசன்திருவடி நேசமுடன்தரிக்கும் ஒருபுலையர் அவர்சாதிமுறைமை தவறுதவறும் நந்தனரவர் பெயராம்.

வசனம்.

— இவ்விதமாய்க் கடையருப்பின்வரப்பினில்வாழ்வார்இப்பரிவுடன் சிவன்கழற்கெளித்த வுணர்வோடுமந்தராடுத்திலுற்புலமைபாண்டதொழிலறையத்திலெலாம்பிபநந்தனெரன்றொருவருண்டாயிருக்கும் புலைப்பாடியில் பரமசிவன்பாதாரவிந்தத்தில்மிகுந்த அந்தரங்கம்பொருந்தினவபாகிய நந்தனார்மிகுந்தபக்திபுரிந்திருந்தார் விச்சுடன்சேற்றில்விழுந்தாலும் பிள்ளைப்பூச்சிமேலொட்டாதி அத்தன்மைபோல் எத்தனைகாரியமிருக்கினும் முத்திபளிக்குங்கர்த்தனாகிய அத்தனைதனது சுதமாகிய சித்தத்தில் நித்தமும்வைத்து உத்தமபக்திபெற்றிருந்தார் மற்றதுமறந்தார் இப்படியெல்லாமிருந்தும் நலைகுணமில்லாமற்போனல் உலகம்பொல்லாததுசொல்லுமல்லவா,

சிந்து.

இவர்வெகு நல்லவாராமிந்தத் தொனுலகில் அவரேசிவனடியார்

வசனம்.

என்று ஆச்சரியங்கொண்டுசொன்னபடியினாலே இவரைபோலபக்திமார்க்கத்திலிருந்தவராயிருந்தவர் ஆரிருக்கிறார் ஆரிருப்பார் என்று இணைசொல்லப்போகாவணைகடந்த பரசிவபக்திமானென்றுசொல்லப்படும்.

சிந்து.

அவர்க்-காருமெதிரில்லைதாரணியில் கோடிகோடி ஜெனமங்களோமுன்னங்-குற்றைமனதைசெய்தநற்றவமேஅவதாரமானதுவோ ஈசன் அன்புபுரியும்பேரின்பசுகம் கொள்ளைகொள்ளவோபிறந்தவர் திருக்கோயில் வலஞ்சுழன் றுவலுடன் செய்யும்பணிவிடைகள்

பெரியபுராணச் செய்யுள்.

கொச்சலிக்கலிப்பா.

ஊரில்விடும் பறைத்துடவை யுணவுரிமை யாக்கொண்டு
சார்பில்வருந் தொழில்செய்வார் தலைநின்றார் தொண்டினாற்
கூரியலை யமுகுடுமிப் படையண்ணல் கோயிறொறும்
பேரிகையை முதலாய் முகக்கருவி பிறவினுக்கும்.

இதுவுமது.

போர்வெத்தோல் விசிவாரென் றினையனவும் புகலுசை
நேர்வைத்தவீணைக்கும் யாழுக்கு நிலைவகையாற்
சேர்வுற்ற கந்திரியுந் தேவர்பிரா னர்ச்சனைகட்
கார்வத்தி னுடன்கோரோ சனையுமிவை யளித்துள்ளார்

வசனம்.

இந்தப்பிரகாரம் நந்தனார் சிவஸ்தலங்கடோறும்போய்சுவாமியைத் தோத்திரஞ்செய்கிறதெப்படியென்றால்,

இராகம்—காம்போதி—ஆதிதாளம்.

கண்ணிகள்.

செந்தாமரைமலர் சூழோடைகளும் மேடையுஞ்
செறிந்தமாதர் ளாட்டம்—சிறந்தவேளூர்
எந்தைபிரானுக்கபி ஷேககோரோசனைமற்
றீந்தொழிந்தாமண வாட்டம்

சிவசரணமூர்த்தி ஞானசம்மந்தரெனத்
திருவவதார மாக-வந்தசீர்காழி
புவனரக்ஷகன்றிரு நிலைநாயகியையேத்தி
பூரித்தார்வெகு வாக
ஒருபொற்புரமுமதி ளோங்கியமாயூரத்
துவந்தவிஸ்வநா தீசரை-மிகத்தொழு
ஒருமுகக்கருவிக்குந் தோல்நரம்பினைவதந்தா
ருலகிற்புகழவுந்தன் பெயரை
உமையொருபாகத்தி னுயர்ந்தபரன்றரும
னொருபசுவுங்கன் றுக-மாயவேடந்
சமைந்துப்பின்புநீதிச் சோழன்றனக்குக்காட்சித்
தந்தவாரூர்ச்சென்றூரன் பாக

வசனம்.

பின்னும்நந்தனார் தாம்செய்யுந்தருமமேதென்றால் இவர்புலையராணபடியால் சிவஸ்தலங்களுக்குப்போய் வீதியைசுற்றிசந்நிதியில் வந்து தடிவிழுந்துபோல உடல்பணியப்பணியப்பணிந்துபுழுதியில் புரண்டு மயிர்சிலிர்ப்பக் கண்ணீருதிர்ப்பவாய்குளறி உரைதடுமாறி ஒருதரமழுது ஒருதரந்தொழுது எக்கலித்துகெக்கலித்துஒருதரஞ் சிரித்து ஒருதரம்வெறுத்துசகமறந்து அகமிழந்துஅனல்கண்டமெழுகதுபோலுள்ளமுருகி ஆனந்தவெள்ளம்பெருகிகள்ளங்கருகிச்சிவன்சிவனேயென்று வாய்வலிக்கப்பேசிகைவலிக்கக்கொட்டிகால்வலிக்கக்கூத்தாடி நிற்பவரொருமுகூர்த்தஞ்சித்திரத்திலெழுதும்பதுமைபோலகண்ணிமையாமல் வாயசையாமல் ஓசைதெரியாமல் அலையடித்தோலந்தகடல்போல நிறைந்துதன்னைமறந்திருபார் தன்னினைவுவந்துபரவசந்தெளிந்து ஈசனைப்பணிந்துகொண்டு வந்த பணிவிடைசெலுத்தக்கோயிலார் கேட்கக்கும்பிடுபோட்டுச்சொல்லுவார்.

இராகம்-ஆனந்தபைரவி-ரூபகதாளம்.

பல்லவி.

வாரிருக்குதுதோலிருக்குது வாங்கிக்கொள்ளுவீரே-மத்தளங்கள்
பேரிகைக்கும்வீணைக்கும் நல்ல விறுக்கிக்கட்டும்விசை (வாரிருக்)
பேரிருக்குதுபோதுஞ்சிவன் பெருமையைக்கொண்டாடி தினமுஞ்
சீருறைகின்றதில்லைப்பதியில் சேருதற்குபாயந்தேட (வாரிருக்)

சிறியவனுஞ்சாதியொன்று மறியாதவனேழை—சிவ
பெருமானுக்கடியேன்செயயும் பணிவிடையிது (வாரிருக்)

கிர்த்தி.

செய்யும்பணிவிடைகம்-ஈசன்-சிந்தைமகிழ்ந்துகுளிர்ந்திடவே மத்தளபேரிகைக்கும் இசைவார்கொடுத்துப்புறந்தோல்கொடுத்து மறவாமலேதினமும்நல்ல வாசபெருகுங்கோரோசனையுந்தேவலாயங்கள்தோறுந்தந்து சித்தமுறுகியபக்திவெள்ளமபுரண்டோடிக்கங்குகரை என்றுபேதமறியவொண்ணாதுகண்டீர் சாதியில்நீசனவர்.

வசனம்.

இப்படிபத்திசெய்யாநின்ற நந்தனாருடையவரலாறேதென்றால்

இராகம்—துக்கடா—ஆதிதாளம்.

ஆதனூரிலொருவேதியர்க்குள்ளே அடிமைக்காரப்பறையன்
ஆருலாதுமொன்றுந்தெரியாதவன்பரி சுத்தமானபத்தன்
கோதிலாதங்கள் சாதியர்க்குச்சிவ குணங்களைமிகச்சொல்லி
காதலோடுதிருப்புன்கூரீசனைக் கண்டுவருவோமென்றார்.

வசனம்.

நந்தனார் சிவதரிசனஞ்செய்யவேண்டியதற்காகத்தங்கள் சாதியாரைக் கூப்பிட்டிருக்கின்றார்

இராகம்—செஞ்சுருட்டி—ரூபகதாளம்.

பல்லவி.

சிவலோகநாதனைக்கண்டு—சேவித்திடுவோம் வாரீர்

அநுபல்லவி.

பவமயங்களைப்போக்கி—அவர்
பரமபதத்தைக்கொடுப்பாரந்தச் (சிவலோக)

சரணங்கள்.

அற்பசுகத்தைநினைத்தோம் அரன்திருவடிமறந்தோம்
கற்பிதமானபிரபஞ்சமிது கானல்சலம்போலயெண்ணி (சிவ)
ஆசைக்கடலில்விழுந்தோமினி யறிவுக்கறிவையிழந்தோம்
பாசமகலவழிதேடாமல் பரதவிக்கும்பாவியானோம் (சிவ)
மானிடசன்மங்கொடுத்தார் தன்னை வருந்தக்கரங்களளித்தார்
தேனும்பாலும்போலேசென்று தேரடியிலநின்றுகொண்டு (சிவ)

பெரியபுராணச் செய்யுள்.

கொச்சகக்கலிப்பா.

திருப்புன்கூர்ச் சிவலோகன் சேவடிகண் மிகநினைந்து
விருப்பினொடுந் தம்பணிகள் வேண்டுவன செய்வதற்கே
அருத்தியினா லொருபட்டங் காதனூர் தனினின்றும்
வருத்தமுறுங் காதலினால் வந்தவ்வூர் மருங்கணைந்தார்.

வசனம்.

நந்தனாரிப்படிச் சிவலோகநாதனைச் சேவிப்போமென்று நெடு நாளாய்ச்சொல்லி நிச்சயஞ்செய்த நந்தனாருக்கும்பறையர்களுக்கு முண்டான வாக்குவாதம்.

(அவர்கள்) தவஞ்செய்யுஞ் சடங்கிதுவல்லவோ பறையர்கள் செய் தால்பாவமேயென்றார்.

(நந்தன்) தேருந்திருநாளுமிருக்குது போவோம் வாரும் வாருமெ ன்று வருந்தியுமழைத்தார்.

(அவர்கள்) பொறும்பொறுமிதுபுண்யமல்லஎரிக்குப்போவோமென் றிவரையழைத்தார்சேரியை நீங்கிச்சிலதுபேர்வந்தார்

(நந்தன்) பதினொருபேர்கள் பண்புடன்வந்தார்மாரிபோல் ஞான மார்க்கம்பொழிந்து தவமுனிபோலேதானங்கேயன்றார்

(அவர்கள்) சிவலோகநாதனைச் சேவிப்போமென்றார்.

(நந்தன்) வெருங்கையோடே போலாகாதென்று வாருடன் தோ லும் வரிசையாய்க்கொண்டார்.

(அவர்கள்) சேரிதுள்ள சீரிதுவென்றார்.

(நந்தன்) வந்தபுலையருக்குப்பத்திபெருகவேநெற்றியில் நீறிட்டார்

(அவர்கள்) சத்தியந்தானென்று மெத்தவுங்கும்பிட்டார்.

இராகம்—வராளி—சாப்புதாளம்.

இவர்-சிங்காரமானபள்ளுபாடினார்
அவர்-அங்கங்குளிர்ந்து கொண்டாடினான்
இவர்-கோரோசனைப்பையை யெடுத்தார்
அவர்-தாராளமாய்வாரிக்கொடுத்தார்
இவர்-சிவமந்திரனுசொல்லிச்சேவித்தார்
அவர்-தவமிஃதேயெனுச்சரித்தார்

இவர்-ஆசைப்பெருங்கடல்தாண்டினார்
அவர்-ஓசைப்படாமலேவேண்டினார்
இவர்-அளவில்லாதானந்தமடைந்தார்
அவர்-அளவில்லாக்காட்கிப்பெற்றிருந்தார்
இவர்-திருப்புன்கூரிசனைப்பாடினார்
அவர்-விருப்பமோடிவரைக்கொண்டாடினார்

வசனம்.

இப்படி எல்லோருங்கூடிச் சிவனை அடிக்கடிவணங்கி அரகரா வென்றுரைத்திடுஞ் சத்தம் பரமனேயறிவார் இப்படி நந்தனார்பதினெருபேர் பறையரோடு திருப்புன்கூர் வந்துசேர்ந்தார்

சவாயி.

கலம்வந்துவீதி வலம்வந்துகண்கள்
சலம்வந்துசோரும் பலம்வந்துதெங்கள்
குலஞ்சுத்தமாச்சு மலம்வந்துபோச்சு
நலங்கண்டோமென்று நிலங்கொண்டுநின்றார்.


வசனம்.

அந்தஸ்தலத்திலே நந்தி மிகவும்பெரிதானபடியாலேசிவலிங்க தரிசனஞ் செய்வதற்கு நந்தி மறைத்திருப்பதால் நந்தனார் துயரமடைந்து சொல்லுகிறார்.

இராகம்—சங்காராபரணம்-ஏகதாளம்

கண்ணிகள்.

அரகரதிரிபுராந்தகஜீவாதரவெங்கள்
அம்பிகையொரு பாகா-எங்கும்
நிரந்தரமாயெள்ளுளெண்ணெய்போலவிருந்து
நினைப்பவர்க்கருள் போகா
வெள்விடைமேல்வருவிமலநமசிவாய
விளங்கும்வேத முடிவே-நால்வருக்குந்
தெள்ளுறச்சிவஞானபோதமளிக்கவந்த
சிறந்தமெய்த்தவவடிவே
மானுமழுவுந்தமருகவாகுவலயமும்
மருவுஞ்சூல பாணி எனி
பேனுங்காணத்தரிசனைதாவுமையுட
னெழுந்தருள்வீரிங்கு தோணி



ஆலயத்தில் நந்திவிலசல், குளம்வெட்டல் விநாயகர்கூலிவேலைசெய்தல்
நந்தனார் கூலிக்கு நெல்லைக்கொடல், நந்தனார் பறையரோடு தரிசித்தல்

4

மன்னுஞ்சந்நிதிமுனம்மருவுமிடபதேவர்
 மறைந்திருக்கநினைக் காணேனே முன்னம்
என்னவினைசெய்தேனோ கண்பெற்றபாவந்தானே
 உதயத்தில்மகிழ்ச்சி பூணேனே

சவாயி.

சிவலோகநாதன் திருச்சந்நிதானம்
மலையாகியநந்தி மறைத்திடுதிங்கே
பலகாலஞ்செய்த பாழ்வினைகுவிந்து
மலையாகியிப்படி மறைந்ததோவென்றார்.

வசனம்.

என்றுசொல்லிய நந்தனார் பின்னுஞ் சொல்லுகின்றார்.

இராகம்-தேசிகதோடி- ஆதிதாளம்.

பல்லவி.

வழிமறைத் திருக்குதே மலைபோலே-ஒரு
மாடுபடுத் திருக்குதே (வழி)
பாவிப்பறையனிந்த வூரில்வந்துமிவன்
 பாவந்தீரேனோ உன்றன்
பாதத்தில்சேரேனோ யேறேனோ
 சிவலோகநாதாபாடு (வழி)
தோடியில்நின்றுதெரிசித்தாலும்போதும்
 கோயில்வர மாட்டேனே ஐயா
ஓரடிவிலகினால் போதுமங்கேநின்று
 உற்றுப்பார்க்கச்சற்றே விலகாதோமாடு (வழி)

வசனம்.

இப்படி நந்தனார் தரிசனங்காண ஓயாமல் மனம்வருந்தும் போதுசுவாமி நந்தனார்மீதிரங்கி நந்தியைவிலகச்சொன்னார்

பெரியபுராணச்செய்யுள்

கொச்சகக்கலிப்பா.

சீரேறு மிசைபாடித் திருத்தொண்டர் திருவாயி
னேரேது பிடவேண்டு மெனநினைத்தார்க் கதுநேர்வார்
காரேறு மெயிறபுனசூர்க கணனுதலார் திருமுன்பு
போரேற்றை விலங்கவருட் புரிந்தருளிப் புலப்படுத்தார்.

இராகம்-துக்கடா-ரூபகதாளம்.

ஒருநாளும்வாராதபத்தன் திருநாளைப்போவாரெனுஞ்சித்தன்
உலகெங்கும்பிரசித்தங்கண்டு ஒதுங்காமலிருந்ததுகுற்றம்

இராகம்-அங்குசதோனு-ரூபகதாளம்.

பல்லவி.

சற்றேவிலகியிரும்பிள்ளாய் சந்நிதானமறைக்குதாம்-நீ (சற்)

அநுபல்லவி.

நற்றவம்புரியுநம்மிட திருநாளைப்போவார்வந்திருக்கிறார் (சற்

சரணங்கள்

சாதிமுறைமைபேசுகிறான் தன்னையிகழ்ந்துமேசுறான்
கோதிலாதகுண முடையோன் கோபங்கொண்டால் தாளமாட்
வேதகுலத்தைப்போற்றுன் விரும்பிவிரும்பியேற்றுறான் (டோம்
பூதலத்திலிவனைப்போலே புண்ணியபுருஷனொருவனில்லை (சற்)
பத்தியில்கரைகண்டவன் பார்த்துப்பார்த்துவுண்டவன்
சித்தங்குறையில்நமதுசெல்வம்முற்றுகுறையுந்தயவுசெய்து (சற்)

வசனம்.

இப்படி சுவாமிசொல்ல நந்திவிலகினார்.

துக்கடா

நந்திதூரவிலகிநின்றார்—தன்சாமிமனதைக்கண்டார்-இவன்
நல்லபக்தனென்றார்-அடங்காதவெட்கங்கொண்டார்

இராகம்-சாவேரி-ரூபகதாளம்.

பல்லவி.

மற்றதெல்லாம்பொறுப்பேன் (மற்ற)
முத்தினும்கொடுப்பேன்
பத்தனுக்குக்குற்றஞ்செய்தா
லதைப்பொறுக்கமாட்டேன் (மற்ற)
திடுக்கென்றவரைதுடிக்கப்பேசி
அடிக்கப்பொறுக்கமாட்டேன் (மற்ற)
பசிக்குதென்றுவருகையிலொருவன்
புசிக்கப்பொறுக்கமாட்டேன் (மற்ற)

வ ச ன ம்.

இப்படி சுவாமிசொல்லும்போது நந்திமனதுகலங்கி தூரவிலகிநின்றார்.

நந்தன் சிந்தைகுளிர்ந்து அளவில்லாத ஆனந்தமடைந்து துதித்தார் கெலித்தார் கொண்டாடினடித்தார் துதித்தார் திருவடியுள்ளே பதித்தார் எங்குஞ் சிவமாகப்பாவித்தார்.

கடுக்கா.

குதித்தார்ளக்கலித்தார்-உள்ளங்களித்தார்
பள்ளுபடித்தார்-தண்ணீற்வடித்தாற்-பற்களைகடித்தார்
ஒருதரந்துடித்தார்-இருதரம்நடித்தார்
இப்படிதரிசனஞ்செய்தார்-நந்தனார்-தரிசனஞ்செய்தாரே.

துக்கடா ஆதிதாளம்.

சட்டமாகசந்நிதிதானங்கண்டுதுடை தட்டினார் கைகொட்டினார்
அஷ்டமூர்த்தியொருவர்க்குமென்று கூத்தாடினார்பண் பாடினார்
கஷ்டமானசமுசாரசாகரந் தாண்டினார் மெய் வேண்டினார்
இஷ்டதெய்வசிவலோகநாதனை எண்ணினருள்ள நண்ணினார்
மட்டிலாதசந்தோஷகொண்டுதான் பட்டபாடுகளைப்பேசினார்
ஜன்மங்கெட்டதென்றுதன்னை யேசினார்
இட்டமான தன்சனங்களோடவர் கட்டிமுத்தமிட்டுலாவினார்சிங்
கக்குட்டிபோலவே தாவினார்

இராகம்-கல்யாணி—அடதாளம்.

பல்லவி.

தெரிசனஞ்செய்தாரே-நந்தனார்-தெரிசனஞ்செய்தாரே.

அநுபல்லவி.

தெரிசனஞ்செய்தார் தேன்மழைசொரிந்து
வரிசையுடன் அவர்வாழிவாழியென்று (தெரிசனஞ்)

சரணங்கள்

குதித்துக்குதித்துக்கையைக் கும்பிட்டுத்
துதித்துத்துதித்துதன் துன்பங்கள்தீர (தெரிசனஞ்)
போற்றிபோற்றியென்று பொன்னடிவணங்கிப்
பார்த்துப்பார்த்துப்பப்பர் மானந்தங்கொண்டு (தரிசனஞ்)
அச்சமறந்தவ ரறிவினுணர்ந்து
இச்சைமறந்தவ ரேகாந்தமாய்நின்று (தெரிசனஞ்)

வசனம்.

தெரிசனம் பண்ணின்பின்பு கொண்டுவந்தபணிவிடை செலுத்தி அவ்வீதியில் மட்டையூறுங் குட்டையைக் குளமாய்வெட்டவேணு மென்று விசாரமுறறார், சுவாமி இதையறிந்து நாளை

ப்போவாராலே குளம்வெட்ட தாளப்போகாதென்று தன் பிள்ளையை ஆளாகப்போகச் சொன்னார்.

துக்கடா.

மாளாப் பிறவிபோக்கும் பிள்ளையார் வந்தார்

நாளைப்போவார்-நீயாரப்பா வென்றார்
பிள்ளையார்-நானுன்னாளப்பாவந்தே னென்றார்
நாளைப்போவார்-குட்டையைக்குளமாய்வெட்டுவே னென்றார்
பிள்ளையார்-வெட்டினால்மிகுபுண்ணிய மென்றார்
நாளைப்போவார்-அதெட்டுமெட்டு மென்றார்
பிள்ளையார்-குளம்வெட்டுமெட்டு மென்றார்
நாளைப்போவார்-அற்பமாய்ப்பதக்குநெல்லைக் கொடுத்தார்
பிள்ளையார்-அப்பனேயிதுபோதும்போதுமென் றுரைத்தார்
நாளைப்போவார்-களித்துநிருவிகற்பமா யிருந்தார்
பிள்ளையார்-குளத்தை வெட்டுதற் கிசைந்தார்

இராகம்—மோகனம்—ஆதிதாளம்.

பல்லவி.

தடாகமொன்றுண்டாக்கினார் - கணநாயர்
தடாகமொன்றுண்டாக்கினார்.

அநுபல்லவி.

சடாமகுடதரன் சாம்பவியுடன் வர
சகலமுனிவர்மனத் தாமரையு மலர்
கடாட்சமர்க்குகன் கணபதியுடன் மன்ன
காதலாலெவருந்துன்ன போதயனுசிதமென்ன (தடாக

சரணங்கள்.

கந்தமூலாவியதாமரைபூத்து கதிக்க—மிகுத்திடுஞ்சேர்
கண்டைவரானுளுவைக்கணமணங்கு குதிக்க
சுந்தரமிகுந்தபறவைகள்முழுதிலுஞ் சூழ
சோமசூரியர்கள் சுகமுடன்வந்து தாழ
விந்தையுடனேபலவேள்வியந்தணர் செய்ய (தடாக)
விளங்குஞ்சங்கினமுய்யகளங்க டில்லமாற்றும்
ஓதிடுவானயானதுதான்மிப நாண ஆம்பல்மலர்ந்து
ஓதிமமூங்குருகின் குலமும்எதிர் காண

சோதிமருவுந்தேவ தாருநிழலுங்கொடுக்க
சுரபிக்கடம்பைமானும் சூழ்ந்து அங்கே அடுக்க
மாதமலர்க்குழலார் மகிழ்ந்து அங்கேநீராட
வல்வினைகளும்விட்டோடவல்லவர்களுங்கொண்டாட தடா
வாசனை தங்கியமல்லிகைமுல்லையின் சாலைசந்தனச்சாலை
வாசனைபலாக்கமுகுங்கனமாமலர்ச் சோலை
ஆசையாகமயிலழகுறவே நடிக்க
அருமறைப்பூசுரர்களனுதினமும் படிக்க
தேசலாவுந்திவ்யத் தீர்த்தமாகுமென்றெந்த
திசைதேவர்களுமுந்த இசைந்தனார்தஞ்சொந்த(தடாக)
நாளைப்போவார்நிஷ்டைகலைந்துபார்த்தார்
குளம்வெட்டியிருக்கவுளமகிழ்ந்தார்
பிள்ளையாரிருக்கக்கண்களிற்கானார்

வசனம்.

இதெல்லாஞ் சிவன் செயலென்று சந்தோஷங்கொண்டு முன்போலவே கோயிலை வலம்வந்து தன்னுடன்வந்தபதினொருபேர்களுடன் ஆதனூர்வந்து சேர்ந்தார்.

பெரியபுராணச்செய்யுள்.

கொச்சகக்கலிப்பா.

இத்தன்மையிசர்மகிழ் பதிபலவுஞ் சென்றிறைஞ்சி
மெய்த்ததிருத் தொண்டுசெய்து விரவுவார் மிக்கெழுந்
சித்தமொடுந் திருதில்லைத் திருமன்றுட் சென்றிறைஞ்ச
வுய்த்தபெருங் காதலுணர் வொழியாது வந்துதிப்ப.

சிந்து.

பேணிச் சாருந்தொழின்முறை யாரும்புகல்திருப்புன் கூர்ச்சென்றானைக் கண்டு சேவித்திசைபாடி பாவித்தபின் தில்லைசிதம்பரத்தைக் கண்டு சேவிக்கவேண்டுமென் றுவலுடன், நாளைப்போவேனென்றாராம்.

வசனம்.

நந்தனார் திருப்புன்கூர்ச் சிவலோகநாதனைத் தரிசனம்செய்து ஆதனூர் வந்தநாள்முதல் ஊணுறக்க முதலானதும்விட்டார் தில்லையம்பலம் திருச்சிற்றம்பலமென்று சொல்லத்தலைப்பட்டார் சேரியிலுள்ள பெரியோர்களைக் கூப்பிட்டார் வணங்கிக் கும்பிட்டுச் சொல்லுவார்.

இராகம்-பியாகு—ஆதிதாளம்.

பல்லவி.

சிதம்பரம்போவேனான் நாளைச்சிதம்பரம்போவேனான்

அநுபல்லவி.

சிதம்பரம்போவேன் தேறித்தெளிவேன்
பதங்களைப்பாடிப் பார்புகழ்தில்லைச் (சிதம்பரம்)

சரணங்கள்

ஒருதரஞ்சொன்னா லுலகங்களுப்பு
மிருவினைப்பயனில்லை எந்நாளும் (சிதம்பரம்)
பாதிராத்திரியில் பன்மறைபோதி
வேதியர்போற்றி விளங்கியதில்லைச் (சிதம்பரம்)
திறமொன்றறியாத் தீங்குகள்செய்யும்
பறையனாய்ப்பிறந்த பாவங்கள்துலையச் (சிதம்பரம்)

வசனம்.

நாளைப்போவார் தனக்குத் தெரிசனங்கிடைக்க வேண்டிய தாகக் கற்பகபிள்ளையாரை வேண்டுதல்.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய விருத்தம்.

காலனுடல் பூமிபடச் சாய்த்திடுவான செங்கமலக் காலைத்தூக்கி
கோலமுட னடனமிடுந் திருமன்றுள் நாயகனே குறம்தீரப் [த்து
பாலிக்கும்படியெனக்குன்னருள்புரிவாயென்று நற்பழங்கள்வை
மேலைக்கோ புரவாசல் கற்பகத்தைச்சிந்தையுள்ளேவேண்டுவரே

வசனம்.

நந்தனார் சேரியிலுள்ள புலையர்களை அழைத்துக்கொண்டுசி தம்பரம்போய்த் தெரிசனம் பண்ணவேணுமென்று ஆசையுற்று பக்தி மார்க்கங்களைச் சொல்லலுற்றார்.

இராகம்-மாஞ்சை-ரூபகதாளம்.

நாளைப்போகாம லிருப் பேனோ-இந்த
நாற்றநரம்புமின்னஞ் சுமப் பேனோ-நான்
நாளைப்போகாம லிருப் பேனோ-இந்த
நாறுமுடலைக்கண்டு களிப் பேனோ-நான்
நாளைப்போகாம லிருப் பேனோ-இந்த
நாளைவீணாகக் கழிப் பேனோ-நான்
நாளைப்போகாம லிருப் பேனோ-இந்த
நமனார்க்கஞ்சியோடி யொளிப் பேனோ-நான்

நாளைப்போகாம லிருப் பேனோ—சிவ
ஞானத்தைப்பாராம லிருப்பேனோ—நான்
நாளைப்போகாம லிருப் பேனோ—இந்த
நீட்டிவிகழுந்தென்மப்படைப் பேனோ—நான்
நாளைப்போகாம லிருப் பேனோ—தில்லை
நாதனைக்காணமற் புசிப் பேனோ—நான் (நாளை)

ஆனந்தக்களிப்பு

காணாமலிருக்கலாகாது பாழுங்
கட்டைகடைத்தேறவேண்டியிருந்தால் (காணாமல்)
முத்தியளித்திடும் பாதம்-தில்லை
மூவாயிரம்பேர்கள் பூசிக்கும் பாதம்
சத்திக்கிணையான பாதம்-வேத
சாஸ்திரங்கள்நாலுந் தேடிய பாதம் (காணாமல்)
காலனைச்சீறிய பாதம்-சன
காதிகளுக்குள்ளே செலுத்திய பாதம்
மாலயன்தேடிய பாதம்-எங்கள்
மாணிக்கவாசகர்பிடிகை பாதம் (காணாமல்)
ஆசையைப்போக்கிய பாதம்-பர
மானந்தவெள்ளத்திலாடிய பாதம்
வாசம்பொருந்திய பாதம்-தில்லை
மகாளிதாழவே தாங்கிய பாதம் (காணாமல்)
பாலகிருஷ்ணன்தொழும் பாதம்—காட்டிற்
பாம்பும்புலிக்குங்கூத்தாடிய பாதம்
கோலச்சிலம்பணி பாதம்-தில்லைக்
கோவிந்தராயர் தெரிசிக்கும் பாதம் (காணாமல்

வசனம்

நந்தனார் சிவனைக்காணாமல்காலம்வீணாகப் போக்கலாகாதென்று தன்னினத்தாரைக் கூப்பிடுவார்.

இராகம்-பியாகு-ரூபகதாளம்.

துக்கடா.

எல்லோரும் வாருங்கள்-சுக
மிருக்குது பாருங்கள்-நீங்கள் (எல்லோரும்)
நல்லோர்பணிந்திடுந் தில்லையம்பல
நாதன்பாதம் பணிந்துக்கொள்வோம் (எல்லோரும்)

கண்ணிகள்.

வாருங்கள்-பர-மானந்தமிருக்குது-பாருங்கள்.
சடமெடுத்தபின் னேதுமேகண்டிலீர்
விடமெடுத்துண்ட மேனிபன்றேர்வர
வடம்பிடித்திட வாருங்கள் தில்லையில்
இடம்பிடித்துநா மெல்லோரும்வாழலாம் (வாருங்கள்)
சொல்லடாதில்லைச் சிற்றம்பலமென்று
மெல்லடாவாயை சந்நிதிநேரவே
நில்லடாயிந்த மாயாப்பிறவியைக்
கொல்லடாசிவ லோகங்குடிபுக (வாருங்கள்)
கள்ளடாகம தில்லறவாழ்க்கையைத்
தள்ளடாநந்தனூர் சொல்லுறுதியென்று
கொள்ளடாதில்லை யம்பலத்தாண்டவன்
பள்ளடாவென்று பாடிக்கூத்தாடியே. (வாருங்கள்)

வசனம்.

இப்படி வாருங்களென்றழைக்கப் புலையர் வாராமலிருக்க நந்தனூர் நல்லவார்த்தை சொல்லிப் பறையரை சிவநாமத்தைச்சொல்லச் சொன்னார்.

இருச்சோல்லலங்கார வாக்குவாதம்.

நந்தனூர். தில்லையம்பலமென்று சொல்லச்சொன்னார்
புலையர். கள்ளப்பேச்சென்று மெள்ளச்சொன்னார்
நந்தனூர். சங்கரர்வென்று சொல்லச்சொன்னார்
புலையர். இங்கேவாவென்று நிற்கச்சொன்னார்
நந்தனூர். சற்றேயாகிலுஞ் சிவனைத்தியானம் பண்ணென்றூர்
புலையர் நத்தையோடுபாலை பானம்பண்ணென்றூர்
நந்தனூர். திருச்சிற்றம்பலமென்று பிலக்கச்சொன்னார்
புலையர். வெறிச்சகம்பளமென்று பிலக்கச்சொன்னார்
நந்தனூர். சேரியில்நல்ல காரியமீதென்றூர்
புலையர். ஏரியில்நல்ல மாரியீதெறுறூர்
நந்தனூர். விட்டநாள்நினையாம லெட்டுநாள்மறவாமல்
நிஷ்டைபண்ணுதஜெனனம் நஷ்டமென்றூர்
புலையர். விட்டவிரைமுளையாமல் நட்டபயிர்பலியாமல்
கெட்டுதானல்கிராமம் நஷ்டமென்றூர்

நந்தனார். உங்கள்புலைத்தன்மை போகுமென்றார்
புலையர். எங்களைக்கெடுத்தாயே பாவியென்றார்
நந்தனார். தேவாதிதேவனைத் தெரிசிப்பீரென்றார்
புலையர். பாவாடைராயனைப் பாவிப்பீரென்றார்
நந்தனார். அனந்தாளுமீசனுக் கன்புசெய்யென்றார்
புலையர். இனத்தாரைநொந்தவர்க் கின்பமேதென்றார்
நந்தனார். நிதமுஞ்சிவனைப் போற்றிகளிப்போமென்றார்
புலையர். பதரைத்தூற்றிநெல்லை யளப்போமென்றார்
நந்தனார். பெண்ணாசைபொன்னாசை விடுதலேநன்றாம்
புலையர். என்னாளுமுன்னாலே கெடுதலையுண்டாம்
நந்தனார். அப்பனோடுஇஷ்டமுட னிருப்பேன்தடையேது
புலையர். கப்பலேறிப்பட்டகடன் கொட்டைநூற்றுந்தீராது
நந்தனார். பூசத்திருநாளிற் போய்வருவோமென்றார்
புலையர். பேசத்தெரியாது பேயாநீபோவென்றார்
நந்தனார். அழுதுமுறையிட்டா அம்பத்தேகேட்குமென்றார்
புலையர். உழுதுபயிரிட்டா லுள்ளபடிவிளையுமென்றார்
நந்தனார். சித்தமெல்லாம்பலத்தே சென்றுதென்றார்
புலையர். பத்தியெல்லாம்வேறு பட்டுபோச்சுதென்றார்
நந்தனார். குத்தாலத்தீசனைக் கூறுவீரென்றார்
புலையர். கைத்தாளம்போட்டுக் கதறுவீரென்றார்
நந்தனார். தாண்டவத்தெய்வமே தகுந்ததெய்வமென்றார்
புலையர். தூண்டிவீரப்பனே தொழுந்தெய்வமென்றார்
நந்தனார். இஷ்டப்படிக்கு யீசனைத்துதியென்றார்
புலையர். கஷ்டப்படமாட்டோம் கசக்காதேபோவென்றார்
நந்தனார். கொண்டாடித்தெய்வத்தைக் கொள்ளுவீரென்றார்
புலையர். பெண்டாட்டித்தெய்வமே பெருந்தெய்வமென்றார்
நந்தனார். நல்த்தைகொடுக்கவந்த நற்குருவென்றார்
புலையர். குலத்தைக்கெடுக்கவந்த கோடாலிக்காம்பென்றார்
நந்தனார். பலவழக்கம்நானறிவேன் பறையரேபென்றார்
புலையர். குலவழக்கமறியாத குருடாபோவென்றார்
நந்தனார். நாக்கறுப்பேன்சிவனை நவிலுவீரென்றார்
புலையர். மூக்கறுப்பான்கதையை மொழிந்தீரேயென்றார்

வசனம்.

நந்தனார், பெரியோருடைய அனுஷ்டானத்தைப் புலையர்களுக்குச் சொல்லுகின்றார்.

வே று.

நந்தனார். சிவனேதெய்வம் சிதம்பரமேகயிலாசம்
தவமேபெருமை தான்சம்பிரதாயம்
புலையர். சேரியேசொர்க்கம் ஏரியேகயிலாசம்
மாரியேதெய்வம் மதசம்பிரதாயம
நந்தனார். படிப்பதுஞானம் பார்ப்பதுமூலம்
குடிப்பதுமதிப்பால் குலசம்பிரதாயம்
புலையர். பிடிப்பதுநண்டு புசிப்பது இறைச்சி
குடிப்பதுகள்ளு குலசம்பிரதாயம்
நந்தனார். பாழைக்கடப்பார் பரவெளிதாண்டி
கோழையறுப்பார் குலசம்பிரதாயம்
புலையர். ஆழத்திற்குளிப்போம் அருங்கோடைவந்தால்
கூழைக்குடிப்போம் குலசம்பிர்தாயம்
நந்தனார். ஆசையைபோக்கி ஐம்புலனைச்சுட்டு
மாசற்றவாழ்வு மதசம்பிரதாயம்
புலையர். பூசைகள்புரிவோம் பொன்னேருழுவோம்
கூசாமல்வாழ்வோம் குலசம்ரதாயம்
நந்தனார். மையத்திலாடி மனக்கயிறுபூட்டி
வையத்திலிருப்பார் மதசம்பிரதாயம்
புலையர். கையிலேகலையம் காலிலேசேறு
பையிலேபாக்கு பறைசம்பிரதாயம்

வ ச ன ம்.

சிவபத்தி பண்ணினால் அணிமாசித்திகள் அடையலாமென்று நந்தனார் சொல்வார்

இராகம்-நீலாம்புரி-சம்பைதாளம்.

அஷ்டமாசித்திகளைப்பெறலாந் தில்லையி
லானந்தத்தாண்டவன் கோயிலைக்கண்டு
இஷ்டமுடன்வீதிவலம்வந்து ஈசன்
இணையடிதொழுதோர்க்கு இனிப்பிறப்பில்லை
வாருங்கள்வாருங்கள்சொன்னேன் நீங்கள்
வாயாடாதோடி வருவீரென்முன்னே
கருகுமணிபிச்சோலைபோதும்—உந்தன்
கள்ளமேவேஷமெழுங்களுக்குள்ளேகிடையாது

பருகுவதுகூழக்கஞ்சிபோதும் வாய்
பதறிவார்த்தைகள்பேசிப் பசப்பாதேபோடா.

வசனம்.

நந்தனாரைப் பார்த்துப் பறையர்கள் நீசொன்னபடி கேட்பதில்லை எங்கள் நிச்சயமறியாமல் நீமயங்காதே யென்றுபின்னுஞ்சொல்லுகிறார்கள்.

ஏசல்.

புலையர். பார்ப்பார்தெய்வமது பலிக்காதுபறையரைக்
காப்பாற்றமாட்டாது கைவிடுவீரென்றார்
நந்தனார். பாப்பார்பறையரென்று பாராதுபரிதும்போல்
காப்பாற்றுமல்லவோ கண்ணுதலேயென்றார்
புலையர். அடுக்காதவார்த்தையை அல்லும்பகலோதியே
பிடிக்கிறாய்பிடிவாதம் பேசாதேயென்றார்
நந்தனார். கடுக்காயைத்தின்பாரோ கன்னலதுபோலே
கொடுக்காததானாலும் கொள்ளுவீரென்றார்
புலையர். பித்தனென்று சொல்லுவார் பேருலகிலெல்லோருஞ்
சத்தியமிதல்லவோ தள்ளுவீரென்றார்
நந்தனார். பித்தனாயிருந்தாலும் பிறவியறுத்தவர்க்கு
முத்திகொடுக்கும்நல்ல மூர்த்தியவரென்றார்
புலையர் இத்தனைநாளுமிங்கே யில்லாதவார்த்தையைக்
கத்துநீரிதுவென்ன காரியமோவென்றார்
நந்தனார். இத்தனைநாட்சென்று ஈசனடித்தாமரை
பத்தியுங்கள்மனந்தேறும் பாக்கியமிதென்றார்

அகவல்

பாக்கியமீதென்று பரமசிவபத்தி
மார்க்கங்களெல்லாம் வரிசையாய்த்திரட்டி
எடுத்துரைசெய்வார் ஈனமாஞ்சாதி
பிடித்தறியாமற் பேசுவாரன்றோ.

விருத்தம்.

வக்கணைக் காரா நந்தா வாய்ப்பட்டப்பே வேண்டாம்
சர்க்கரை போலே பேசிச் சாதித்துக் கண்டா யன்றோ
பக்குவ காலம் வந்தால் பாமனார் திருநா மந்தான்
சர்க்கரை போலே தோன்றுஞ் சாதிப்பார் முத்தி தானே.

வசனம்.

புலையர்கள் அனேகரானபடியால்பலவிதம்பலர் சொல்லுகிறார்

இராகம்-இங்கிலீஷ்-புன்னாகவராளி-ரூபகதாளம்.

ஏசல்.

புலையர். ஆண்டிப்பரதேசி யரகராவென்றவர்
வேண்டுந்தெய்வமது விளங்காதேயென்றார்

நந்தனார். மூன்றுலகுக்கிறைமுன்னின்று கைகூப்பி
ஆண்டவனேயென்று அர்ச்சிக்குமென்றார்

வேறொருபுலையர். நாத்தைபிடுங்கியே நடவுநட்டாலிந்த
சோத்துக்கவலையிடுஞ் சுகமிதுவென்றார்

நந்தனார். கூற்றுவனார்வந்து கூப்பிடும்வேளையில்
மாத்திரைப்பொழுதில்லை மன்னுயிரென்றார்

வேறொருபுலையர். மானுருமக்களும் வாழ்கின்றவிடத்திலே
யானாலுமெப்போது மழுமூன்சியென்றார்

நந்தனார். தேனாகவேமெத்த தித்திக்குஞ்சிவத்துதி
யானாலுமுங்களுக் கழுகையோவென்றார்

வேறொருபுலையர். மூக்குநுனியைப்பார்த்துமுணுத்தென்னேரம்
காக்கைபோலவேசும்மா கதறுகிறீரென்றார்

நந்தனார். வாக்கிலேசிவநாமம் வராதபாவிகள்
நாக்கிலேவூசியை நாட்டுவேனென்றார்

வேறொருபுலையர். மடைவாயின்பறவைபோல் மதியாமலிருக்கிறீர்
துடைகாலிநீயென்று சொல்லுவோமென்றார்

நந்தனார். விடையேறுமீசனை வெட்டவெளியிலுன்னி
அடையாளங்காணாத ஆடுகளென்றார்

வேறொருபுலையர். மறையோதத்தெரியாத மடையராய்ப்பூமியிற்
குறையானபுலைத்தன்மை கொண்டோமேயென்றார்

நந்தனார். பறையனாய்ப்பிறந்தாலும் பரகதிதேடலாம்
உறுதிமாத்திரம்வேண்டும்உமக்குண்டோவென்றார்

வேறொருபுலையர். தலைசுற்றியாடுது தங்கச்சிகொழுந்தியார்
அலகையேநானென் றறிகிலேனென்றார்

நந்தனார். நலம்புரியுந்தில்லை நாதாவென்றிருநீற்றைத்
திலகம்போலேயிட்டு தெண்டனிடுமென்றார்

வேறொருபுலையர். உலகத்திலொவ்வாத உருவேத்திச்சேரியைக்
கலகமிட்டீர்பலங் கண்டீரோவென்றார்

நந்தனார். பலகாலஞ்சொன்னாலும் பலியாதுபாழ்வினை
விலகாமலிருக்குது வேடிக்கையென்றார்

வேறொருபுலையர். திருப்புன்கூர்சனைச் சேவிக்கலாமென்று
விருப்புடனழைத்தது விந்தைதானென்றார்

நந்தனார். கரும்புதின்னக்கூலி கையில்கொடுப்பதுண்டோ
இரும்புமனதுக்காரர் கில்லையேயென்றார்

வேறொருபுலையர். புத்தியிலலாதவன் புலம்புறான்சிவனென்று
சுத்திநாலுமென்ன காரியமோவென்றார்

நந்தனார். நித்தமுமொருதரம் நினைவுடனேசிவன்
சத்தமிருந்தாலென்றுந் தாழ்வில்லையென்றார்

வேறொருபுலையர். சேரியிலிருந்தாலும் செல்வங்குறைந்திடும்

நந்தனார். வாருங்களெல்லாரும் மன்னனைப்போலவே
சேருவோந்தில்லைச் சிதம்பரமென்றார்

வேறொருபுலையர். பாலாறுபெருகவே பண்ணையைப்பயிரிட்டு
ஆளாமலேவீணுக் கலையுறீரென்றார்

நந்தனார். பாலகிருஷ்ணன்தொழும் பாதத்தைநான்கண்டு
நாலாம்பதவியை நாடுவேனென்றார்.

வசனம்.

அவர்களில் ஒருபுலையர்உரைத்ததாவது எப்போதுஞ்சிவனைக் கொண்டாடினால் நம்முடைய தொழிலுக்குக் கெடுதலுண்டு பண்ணை விளையாதென்றுசொல்ல நந்தனார் கேட்டுச்சொல்லுவார்.

இராகம்—தெண்டகம்—ஆதிதாளம்.

அரகராவென்றொரு குழிநட்டா
லங்கலமே விளையும்—பாவம்
தங்காமற் றலையும்
சிவசிவாவென்றொரு தரஞ்சொன்னால்
ஜென்மசபல மாச்சு—புண்ணிய
கன்மமதுவே யாச்சு

தில்லையம்பலத் தெரிசனங்கண்டால்
தேவரும் வருந்தாரோ—அந்த
மூவரும் பொருந்தாரோ
அடிமைக்காரத்தொழில் செய்வதுதுன்ப
மானாலு மேச்சே—சென்மம்
போனாலும் போச்சே

வசனம்.

நந்தனார் புலையர்களைப்பார்த்து அனேகஞ்சொல்லிநாளைப்போவேனென்றுசொல்ல.

சிந்து.

நாளைப்போவேனென்றாராம் அங்கே நாடும்பறையர்களோடி வந்து அண்ணேநீ போகாதே நமக் காண்டை பொல்லாதவன் வேண்டிக்கொள்ளான்—பார்ப்பாரசாதியுண்டே.

வசனம்.

இப்படிச்சொல்லியபுலையரைப்பார்த்துநந்தனார்சொல்லுகிறார்
இராகம்-செஞ்சுருட்டி—ரூபகதாளம்.

பல்லவி.

ஆண்டைக்கடிமைக்காரனல்லவே—யா
ணண்டைக்கடிமைக்காரனல்லவே

அநுபல்லவி.

மூன்றுலோகமும் படைத்தளித்திடும்
ஆண்டவர்க்கொத் தடிமைக்காரன் (ஆண்டைக்)

சரணங்கள்.

ஆசைக்கயிற்றினி லாடிவரும்—பசு
பாசமறுத்தவர்க் கடிமைக்காரன் (ஆண்டைக்)
தில்லைவெளிகலந் தெல்லைகண்டேற்றித்
தேற்றித்தெளிபவற் கடிமைக்காரன் (ஆண்டைக்)
சீதப்பிறையணிந் தம்பலத்தாடிய
பாதம்பணிபவர்க் கடிமைக்காரன் (ஆண்டைக்)

வசனம்.

தன்னை யடிமையாகக்கொண்ட வேதியர்சொற்கேளாதவரல்ல அப்படியிருந்தும் பத்திபண்ண வேணுமென்று பத்திநெறியைச் சொல்லிகாட்டினார்.

அறுசீர்க்கழிநெடிலாசிரிய-விருத்தம்

தவப்பெருமுனிவர்மெச்சுஞ் சரித்திரங்கொண்டநந்தன்
பவபயக்கறுக்கவேண்டிப் பகர்ந்திடுஞ்சிவவாக்யத்தை
அவருரைகொண்டவேய மறிந்திடப்போமோவெல்லாஞ்
சிவன்செயலாகுமமாற் செய்வதொன்றில்லையென்றார்

வசனம்

திருநாளைப்போவார் அநேகவிதஞ்சொல்லிப் புலையர்களோ டிருந்ததினால் சிவன் செயலென்று நாளைப்போவார்சும்மாயிருந்தார் அந்தச்சேரியில் புலையர்கூட்டங்கூடி மூத்தோனால் நந்தனருக்கும் புத்திசொல்லுவோமென்றெண்ணி அந்தச்சேரியிலேவெகுநாளாயிருக்கின்ற ஓர்புலை வயதுமிகுந்து உடல்தளர்ந்துபல்லுகளுதிர்ந்து கேசங்கள்சுருங்கி நரம்புதெரிந்து முதுகுசரிந்து முழுதும் வளைந்து அங்கம்சொரிபடர்ந்து தினவுமிகுந்து அதனைச்சொறிந்து அநேகம்வடிந்து அவ்வுடல்நடுங்கி இவ்விதமிருக்கும் பெரியகிழவனுடையனுப்பக் கோலூணிகூனிக்குறுகி கோணலாய்நடந்துவந்துநந்தனைப்பார்த்துகட்டியணைத்து தலைமிர்ந்து கண்ணீர்சொரிந்து மார்பில்விருந்து பணங்கலித்து காதல்மிகுந்து ஒன்றுந்தெரியாதவனென்று நினைத்துபரிந்து நியாயமறிந்துசொல்லுவான்

இராகம்-பியாகு-ஆதிதாளம்

பல்லவி.

நியாயந்தானோநீர்சொல்லும் ஐயநந்தனாரே
நம்மசாதிக்கடுக்குமோ (நியாயந்தா)

சரணங்கள்

சேரியிலில்லா வழக்கம்-நீர்
செய்துகொண்டுவந்த பழக்கம்-இந்த
ஊரிலெங்குமது முழக்கம்-வெகு
உறுதியாச்சுது வொழுக்கம்-இது(நியாயந)
சிதம்பரமென்கிற பேச்சு-நாங்கள்
செய்திடுங்காரியம் போச்சு-அது
மதம்பிடித்ததுபோ லாச்சி-இந்த
வன்டலபறையருக் கேச்சு-இது (நியாயந்)

பறையருக்கேதுதை	பூசம்-அதைப்
பார்க்கவேயுனக்கு	விஸ்வாசம்-சிறு
பயலசளுக்கே	யுபதேசம்-நீர்
பண்ணிவைத்தெல்லாம்	மோசம்-இது(நியாயந்)

வசனம்

சேறியில்பெரிய கிழவனனபடியால சாதிவழக்கங்களெய்லாம் அறிநதவனுனதால் நநதனுருக்கு இன்னமுஞ்சொலலுகிறுன்

சிந்து

பார்ப்பாரசாதியுண்டோ என்னபாடுபடுமுழக்காடுமங்கே,நமக்குந்திருநாளோ அந்தனுராயமுண்டோ என்னமாயமிது,வென்றதனடசெய்தார் சிவன்வேடிக்கைதானென்று நாடிக்கொண்டே—அறியாதுபோலிருந்த.

பெரியகிழவன சொல்லிய

விருத்தம்

கழனிதனைத்தெய்வமெனச் சுற்றிவநது தலைவணஙகிக்காங்குவித்துஉழுதுபரம் படித்தவிரை தெளித்துமுளை கொள்ளநீரோடவிட்டுப் பழுதாநட்டதன்களைபப் பிடிங்கிமடைதிறந்துபுனல்பாயவிட்டுக் செழிததிடவே பொங்கலிட்டுக்காத்தவராயனைவேண்டுஞ் செய்கைதானே

இராகம்-நாதநாமக்கிரியை ஆதிதாளம்

பல்லவி

சுவாமிதெரிசனம் நமக்குண்டோ-புலைச்
சாதியென்றேவந்தநீதியறியாமல்

அனுபலலவி:

பூமிதர்ஜனம்போதும்போதும்வெகு
புண்ணியமேசோறு பெறுமின்னமொரு (சுவாமி)

சரணங்கள்

நாத்துநரப்புகளை சுமப்பதும்உழுவதும்
நஞ்சைவய்லைச்சுற்றிவருவதும் வளம்பெற
பாத்திகள்கட்டிவிரை தெளிப்பதும்பறிம்பதும்
பாயுமடையைத்திறநதிடுவதுமன்றியில் (சுவாமி)
சேரியிடையில்குடியிருப்பதுமபதறுகள்
சிதாசதூற்றிசொல்லளப்பதும் பார்ப்புதும
ஊரையளைந்துதமுக்கடிப்பதும் மதுக்குட
முண்டுகளித்துநாமுறஙகுவதன்றியில் (சுவாமி)

ஆண்டைமார்க்கிடம்பணிருடை செய்வதும்
அருகில்நின்று கையைவிடுவதும் நடுவதுர்
தாண்டிநடநதுநெடுங்கோல் பிடிப்பதுமளப்பதும்
தனித்துசுட்டலைதினநு காப்பதுமன்றியில் (சுவாமி)

விருத்தம

சாதியின்முறமைகாட்டித் தடையிடப்போதுமென்றூர்
வேதமாமுனிவராலும வினையுங்கண்டாரில்லைப்
பேதையாம்புலையருக்குப் பேரின்பநிஷடையேதென்
றூதலாலென்செம்வோமென் றம்பலத்தஞ்சுவாறே

வசனம்

பெரியகிழவனைப்பார்த்து நந்தனூர்சொல்லுகிறூர்

இராகம் தெண்டகம்-ஆதிதாளம்

சிதம்பரதெரிசனங்காணுகிடி லிந்தச்சென்மசபல மா்மோ
செனனமரணசமுசாரம்பெருகவேசெய்தவினைகல பேமோ
கண்ணுக்கருத்திருககச் சிவனைக்காணுமல்காலஙகழிக்க லாமோ்
காலபாசநமதருகில்வாருமல் கண்டுபயந்து போமோ
இப்படியெம்போதுமிருப்போமென்றெண்ணியிருக்க லாமோ
இருதயம்றிந்திடச்செய்திடும் கன்மங்களிகழ்ந்துபிரிந்துபோமோ
யின்னுமுன்னுமறியாத மூடர்கள்புத்திகேட்க லாமோ
புலையரவாடியிலிருக்கினுமெய்திடும் புண்ணியங்கள்சிதம்ப
பரம்சிவனைக்கொண்டாடுமென்று பபந்துபாவி பார்தேதேன்
பாபஞ்செய்வதற்குப்பலியாது அதில்பாடுபட்டப்பார்த்தேன்

எசனம்

சேரியிலுள்ள புலையர்கள் கூட்டஙகூடி அனுப்பிவைத்த-பெ
ரியகிழவன் நந்தனுருக்குச் சொல்லக்கேட்டு ஆற்சரியப்பட்டு நந்
தனூர்கிழவனைப் பார்த்துச் சொல்லுவார்

இராகம்-தெண்டகம்-ஆதிதாளம்

மீசைநரைந்துபோச்சு	கிழவா	ஆசைநரைக்கலாச்சோ
பாசம்வருகலாச்சே	கிழவா	பாவம்விலகிப்போச்சோ
கூனுகுறுகிப்போச்சே	கிழவா	கோபம்விலகிப்போச்சோ
அங்கம்தளர்ந்துபோச்சே	கிழவா	ஆங்காரமும்போச்சோ
சேரியைமறந்தாய	கிழவா	சிதம்பரமறந்தாயோ
மானிடசென்மமடா	கிழவா	மாண்டால்வருமோடா

அம்பலத்தரசனடா கிழவா ஆளுந்தெய்வமடா
திருவடிபணியாயோ கிழவா தேடித்தெளியாயோ

வசனம்

நந்தனார் இவ்விதஞ்சொல்லி சிவகாமிவல்லிபாகனை நினைந்து நீறள்ளிபெரியகிழவன்முகத்திலேதடவிவாயிலேபோட்டுகட்டியணைத்துகாதிலேசிவமந்திர முபதேசித்தார் உபதேசமானவுடனேபெரியகிழவன் சித்தந்தெளிந்து சிவமயநிறைந்து உற்றதுணர்ந்தொருவனாயிருந்து அந்தனடியாரைக் குறித்திவன்று பத்தியிருந்துபரவசங்கொண்டு பேசத்தெரியாமற் பேசுவான் நான் இன்றைக்குத்தான் பெரியகிழவனானேன் நந்தாவெனதுபக்கநீர்க்கவந்தாய்முத்திதந்திரவென்றுசுற்றிவலம்வந்து அடிபணிந்துவிடைபெற்றுக்கண்டேனென்கலிதீர்ந்தேன் ஆனந்தங்கொண்டேன்குறைதீர்ந்தேனமிர்தமுண்டேன்பசிதீர்ந்தேன்பிறவிவென்றேன்வீடுகின்றேனென்று பேசிக்கொண்டு பெரியகிழவனார்நந்தனாருபதேசம்பெற்றுவருகின்றார்

இராகம்-சங்கராபரணம்-ரூபகதாளம்

பல்லவி

பெரியகிழவன்வருகிறான் பேரானந்தக்கடலாடி (பெரிய)

சரணங்கள்

பாடமாமறையிருந்து பார்முதல்பூதங்களைந்து
பெரியவசனுணர்ந்து பேரின்பலாபத்தையடைந்து (பெரிய)
படிபுகழ்நந்தனார்மகிழ்ந்து பரமசிவபக்திபுரிந்து
கொடியவன்பாவங்கள்தீர்ந்து கூனிக்குறுகிடந்து (பெரிய)
நந்தனார்சொன்னதறிந்து நானென்றுரையுமிழ்ந்து
பந்தமயக்கந்தெளிந்து பரவெளியாகநினைந்து (பெரிய)

வசனம்

புலையர்களெல்லாங் கூட்டங்கூடி நந்தனாருக்குச் சிதம்பரமித்துத்தெளிய புத்திசொல்லனுப்பிய பெரியகிழவன் நந்தனார்பித்துக்கொண்டுஅவருடைய மகிமையெல்லாம் புலையர்களிடத்திற் சொல்லிக்கொண்டாடுவான்

பெரிய கடுக்கா

திருநாளைப்போவாரிந்தச் சேரிக்குமூருக்கும
யாருக்கும்பெரியவன் திருநாளைப்போவார்
ஒருதரமாகிலுஞ் சிவசிதம்பரமென்று
உரைத்திடுவோரென் றுண்மைகூறிய (திருநாளைப்)

அடாதுசெய்தால்-படாதுபடுவீர்-விடாதுபாவந் தொடாதே அவன் பேரிடாதே-நாறபடாதே-கைபிடிபடாதே-வெம்பகையிடாதே-அப்பாதிடாரகன் கோபப்படாது-பட்டால்-விடாது-சலப்படாதவன்-பயப்படாதவன்-இடறுகொடாதவன்-அடங்கிடாதவன்-விடையலைப்படான்-மாயைக்ககப்படான் சிவனை யிடைவிடான்-கழனிகளை விடான்-கசப்பைகளைத் தொடான்-நமது வருபடாது-பொலிகிடாரி-எலைப்பிடாரி-வெல்லப்படாது-சொல்லப்படான்-கல்லப்படாது-தள்ளப்படாது-பாரையுப்விடாது-துன்பந்தொடாது-வழியைத்தேடாது-இருவினைப் படாது-சென்மங்கெடாது-தெய்வங்கெடாது-பக்கப்படாது-தங்ககடாரம-பொங்கப்படாதவன-இனை விடாத-புண்ணிய-தடாகஞ்செயதவன-மடாதிபதி- பிடிபடாதசிங்கம-அளபடாதமகிமை விட்டாத பெரியவண்டா தெரிசனப்படாதசந்நிதி-விடாதநந்தியசைந்தேனடா- அரன் விலகடா வென்றசொல்லடா-அவனைப்பணியடா-தூளையணியடா- அறிந்து போற்றடா-கையெடுத்தேத்தடா மலரைத் தூற்றடா-மனத்தைத் தேற்றடா-பிறவிமாற்றடா- ஆனந்தக்கூத்தடா-சொன்னேன்-திருநாளைப்போவார் இந்தசேரிக்கு முருக்குமாருக்குப் பெரியவன்

வசனம்

இப்படி பெரியகிழவறு சொல்லக்கேட்டு நந்தனாலே கொடுக்கப்பட்ட பதினொருபேர்களுக்குள்ளே நீயும் பனிரெண்டாம் பேராயிருக்கத் தலைப்பட்டு சிவசிவாவென்றுசொல்லிச் சேரியைக்கெடுக்கத்தலைப்பட்டீர்களேகிழவாவென்று மிகவுந்துன்பமடைந்து புலையாள் ஒருவர்க்கொருவர் சொல்லித் துயரப்படுகிறார்கள்

இராகம-புன்னாகவராளி ரூபகதாளம

பல்லவி

நாமன்னசெய்வோம் புலையரே-இந்தப்
பூமியிலில்லாதபுதுமையைக் கண்டோம் (நாம்)

சரணங்கள்

நந்தனொருவனாலேயிப்படி யாச்சு
நன்மையுந்தன்மையுமில்லாமற் போச்சு
சந்திக்குச்சந்திகூத்தாட லாச்சு
சாமியுமிலலாமல் எங்கயோ போச்சு (நாம)

ஒன்னற்சற்சண் டவ்வார்த்தைகேட் பாரோ
காதிற்பட்டாலதை கருத்துட்கொள் வாரோ
மன்னார்சாமிக்குப் பூசைபோட் டாரோ
மாரியாத்தாளங்கே மறைநதிருக்கி றாளோ (நாம)
சேரிக்குள்பதிசனரு போசளுங் கேட்டார்
செய்யுந்தொழில் முறையாவையும விட்டார்
ஊருக்குபெரியகிழவனும் பட்டான்
உதுாலமயறியாமற் சிதம்பரந தொட்டான் (நாம்)

வசனம்

சேரியில் துன்பமடைநத புலையர்களைப்பார்த்து உஙகள் தெய்வத்துக்கு வழக்கம்போலே பூசைபோட்டு பலிபிட்டு வேண்டினால் சேரிக்கு நல்லகாலம் பிறக்குமென்று பெரியகிழவனார் சொல்லைப் புலையர்கள்கேட்டு பூசைபோடுதெய்வங்களானெ

சடுக்கா

வீரன் இருளன் காட்டேரி வெறியன் நோண்டி சாமுண்டி
தூறிததூண்டி நல்றண்ணன் தொட்டியசின்னான்மெததெண்
மாறுமுனியன் சஙகிலியன் மாடன் கறுப்பன் பாதாளை [ணன்
மூறிக்காத்தான் குழிபிரிசி மோகினி சத்தகன்னிகையும்
சேரிமன்னரன் மின்னடியான் சிறுக்கட்டுடையான்பனைமரத்தான்
மாரியாண்டி வழிமறித்தான் மலையன்சாத்தான் பக்கியும்
ஏரியனுஞ் சிலம்பாயி இடையன் நல்லான் ஊமையோடு
வீறுங்கல்லன் பெத்தாச்சி வீட்டுதெய்வமுதலான

வசனம

இதுகளைத் தெய்வமென்று வணங்கிக்கொண்டாட ஏனங்கோழிஆடுகளுடனே மதுக்குடய்மைதது பள்ளையம்போட்டு பம்பையடித்துவருநதச் சன்னதம் வருஞ்சொன்னேன் சேரிக்கு நல்லகாலம்பிறக்கும் சிதமபரமித்து நந்தனுக்குததெளிந்து விடுமென்று பேர்பெருநவாழ்வீரென்றும் பெரியகிழவன் சொன்னாரே! அப்படியே கிழவன்சொல்லை நம்பிக்கைகொண்டு புலையர்களெல்லாரும் பந்தலிட்டு பள்ளயம்போட்டுக் கொம்புந் தம்பட்டை முழங்கிமுப்பூசையிட்டு வேண்டுவர்ர்கள்

வருந்திக்கொண்டாடும அகவல்

புலையர் எல்லைப்பிடாரியே எதிராகவந்தளைய
கொள்ளையுங்காவலாய் கொள்ளடி யென்றார்

நந்தனார் சொல்லினுமடங்காத சோதிபரமானந்தத்
தில்லைநாயகனைததேத ரறியாரோ

புலையர் முண்டாசுகட்டிவரும் நொண்டிவீரப்பனைக்
கொண்டாடிப்பூசைகளைக் கொள்ளுவீ ரென்றார்

நந்தனார் அண்டங்கள் பதினாலுக்கப்பாலுமிப்பாலு
நின்றார்க்குமுண்டாசு நிலையாது என்றார்

புலையர் சச்சையரிவாள்வைத்த கறுப்பண்ணசாமியை
இச்சையுடன்வேண்டி யென்றெய்வ மென்றார்

நநதனார் பச்சிலைபிடிங்கியே பாதத்திற்சாற்றினல்
இச்சையானதுமீயு மென்றெல்ல மென்றார்

புலையர் நேயமறிகோழியும் நிணமூன்றுசாவலுந்
தீயகள்ளும்வைத்துத் தெரிசித்து நின்றார்

நந்தனார் வயாலேசிவமென்று வருத்தினலெப்போதும்
தாயாரைப்போலவே தழுவிவரு மென்றார்

புலையர் பித்துப்பிடித்திருக்கும் பேயனும்நந்தனுக்கு
சித்தந்தெளிந்திடச் செய்திடுவீ ரென்றார்

நந்தனார் பத்திவெள்ளம்பெருகிப் பாய்ந்தாலுஞ்சேரியிஸ்
நத்தையுறியுஞ்சுஞ்சாதி நாடாது என்றார்

வசனம்

இவ்வகைப் பூசைபோட்டுத் தெய்வங்களைகொண்டாடும புலையர்களைப்பார்த்து நந்தனார் சொல்லுகிறார்

விருத்தம்

இத்தனைநாட்பரமசிவன்றிருமகிமை யிரவுபகலெடுத்துச் சொன்னேன் பத்திபுரியாத மக்கேயருள்புரிந் தமையன் பதம்பணிவீரென்றேன் அத்தனையுமிகழ்ந்திடவே மணவெறுப்பா யென்றனையுமயிமானித்தீர் புத்திசொல்வேனென்றவர்கள் முழந்தாளிட்டடி) கொண்பெனைந்திட்டீரே

வசனம்

நந்தனார் மகாபலசாலியானபடியால் புலையர்களைச்சிட்சித்துச்சிவநாமத்தைச் சொல்லச்சொல்லுவார்

நர்ண்டகம்

த்த்திப்புலிபோலே தாண்டிக் குதிப்பார்
மூத்துமிடுவதுபோலே முகத்தைக் கடிப்பார்
வார்சொண்டுகட்டி வளைத்துப் பிடிப்பார்
தூர்க்கல்லெடுத்து துடைக்குமெறிப்பார்
பல்லாற்கரண்டியே பரம்படி திழும்பார்
கல்லாலெரிந்துமவர் காயப் படுத்துவார்
குப்புறத்தள்ளியே கோபித் துதைப்பார்
செப்பியசிவனைநீர் சேவிப்பீரென்றார்

இசனம

இபபடி சிட்சித்தபின்பு புலையர்களெல்லோரும் நந்தனாடிக குப்பயந்து பத்திசெய்யத் தொடங்கினர்

கடுக்கா

அரகரசிவசிவ அம்பலவாணா
தில்லையம்பல தேசிக நாதா
புரமூன்றெடுத்த பொன்னம்பலவாணா
சரியுரிபோர்த்த கருணாகரனே
அனுதினமன்றுளாடியே பாதா
பிழைபொறுத்தாளும் புண்ணியமூர்த்தி

மூடப்புலையர்களுக்குப்புததிதருவாயென்றுய்வாமியைத்தொழுதுசொல்ல அவர்களுமிப்படிச்சொல்லித் தொழுதார்கள்

இராகம் எதுகுல காம்போஜ-ஆதிதாளம்

பல்லவி

பத்திகள்செய்தாரே பரசிவ-பத்திகள்செய்தாரே

அநுபல்லவி

பத்திகள்செய்தார்-நற்றவம்புரிநந்தன்
சித்தமகிழ்ந்திட வத்தனைபேர்களும் (பத்திகள்)
எடுப்பான் சிவகதை படிப்பான் தடியொன்று
பிடிப்பாள்காலுக்கு அடிப்பானென்றே (பத்திகள்)
கல்லாதவனிங்கே சொல்லாதவனன்றி
யில்லாதவன்வெகு பொல்லாதவனென்றே (பத்திகள்)

வசனம்

நந்த சேரியிலே புலையர்கள் பத்திசெய்தால் சேரி சிவலோகம்போல விளங்கியது சிலகாலைக்குப்பின்பு புலையர்களெல்லாரு கூடி நந்தனாரைப்பணிந்து நல்லவார்த்தைசொல்லிநாங்களெல்லோ ருந்நாளொன்றுக்குமூன்றுவிசை சிவனேயென்று சொல்லுகிறோம் மற்றவேளையில்நாங்கள் பண்ணைத்தொழிலைச் செய்வோமென்று கேட்கநந்தனார் நல்லது அப்படியேதப்பாமல் செய்யுங்களென்று நந்தனார்சொல்லிவிட்டுச் சேரி பெரியகிழவனுடன் திருப்புன்கூருக்குப்போய்வந்தபக்திபுரி புலையர்கள்நந்தனைச்சுற்றி அடிபணிய அவர்களைப்பார்த்துச் சொல்லுவார்

எண்சீர்க்கழிநெடிலடியாசிரிய விருத்தம்

கொள்ளையெனும் பிறவிவினை மூளவீசாமற்
குடிமாறிப் போவதற்கோர் வகையைக் கேட்கக்
கள்ளமனக் குரங்கதனால் விடைய மாச்சு
கட்டியிருந்தாலிருந்த விருத்திபோச்சு
உள்ளங்கைக் குள்ளிருக்குங் கனியைப்போல
உருவில்லா தான்மாவே றறுத்து வாழ்வீர்
எள்ளளவும் பிசகில்லையென்றஞானம்
ஏற்றுவார் மும்மலத்தைத் தூற்றுவாரே

இராகம்-எதுகுலகாம்போதி-ரூபகதாளம்

பல்லவி

பார்த்துபிழையுங்கள்-நீங்கள்
பார்த்துப்பிழையுங்கள்

அநுபல்லவி

பார்த்துபிழையிந்தச் சோத்துத்துருத்தியை
எத்தித்தொழவேண்டாம் காற்றுப்போகுமுன்னே (பார்த்)

சரணங்கள்

ஆத்திமதிசூடுங் கூத்தனிடமாய்ச்
சூத்திரத்தையிந்த க்ஷேத்திரத்துள்ளாடிப் (பார்த்)
வீற்றிருப்பீர்காலன் காத்திருப்பான்சிவ
சாத்திரத்தைஞான நேத்திரத்தாலுற்றுப் (பார்த்)
மூலக்கனல்தாண்டி மேலக்கரைவந்து
பாலக்குடியிருந்த நாளுக்குள்வாராமல் (பார்த்)
பாலகிருஷ்ணன்தொழுங் கோலக்கனலை
மேலுக்குமேல்நாடி காலக்கலியறப் (பார்த்)

இராகம்-யமுனாகல்யாணி
சாபங்க-ரூபகதாளம்

பல்லவி

தில்லைசிதம்பர மொன்று-ஒரு
தாஞ்சொன்னால் பாதகியுண்டுண்டு

அநுபல்லவி

நல்லசுருதிமுடி கண்டுசபா
நாதன்றிருத்தாளைச் சிந்தையிற் கொண்டு (தில்லை)

சரணங்கள்

வேரில்லாமலொரு விருக்ஷமொன் றிருக்கு
விளையும்வினைகளெல்லாஞ்செய்யுந திருக்கு
பேரில்லாமல் ஞானத்தீகொண்டு சுருக்கு
பேரின்பவாணரைப் பிசகாமல் நெருக்கு (தில்லை)

தேசம்புகழுந்தில்லைக் கோயில் வளைந்து
தித்திக்குஞ்சைவபஞ்சாட்சரம் புரிந்து
ஆசையுடனேயாத்த சாமத்தி லிருந்து
அக்கம்புளகிதமா யடிக்கடி பணிந்து (தில்லை)

மாயன்கோபால கிருஷணன் தினந் தேடி
வருந்துஞ்செந்தாமரை மலரடி நாடித்
தாடைபபிரிந்திளங்க கன்றுபோல் கூடித்
தனித்திருந்துதாளம் போட்டுக்கொண் டாடி (தில்லை)

வசனம்

இப்படிசொல்லிய நந்தனாரைநோக்கி அவர்கள் சொல்லுவார்கள்

இராகம்-சவரயி-தண்டகம்-சாப்புதாளம

அவர்கள் புணணாகியவிந்தம் பிறவிப்பிணிக்குமருந்
துண்ணயலிருப்பது உண்மையோ நந்தா

நந்தனார் கண்ணாலேபார்த்திடில் காட்டிமறைத்திடும்
மண்ணனபூதங்கள் மாயமே மைந்தா

அவர்கள் இருப்பதுபொய்யென் றிராதநுமெய்யென்று
இருத்திப்பேசியவகை யென்னடா நந்தா

நந்தனார் உருத்தெரியுது நாமரூபமல்லோ
கருத்திருத்திக்கொண்டால காணலா மைந்தா

அவர்கள் வித்தாரமாயிந்த பிண்டமானமெத்தை
பத்திக்கொண்டிருந்து பகர்ந்திடும் நந்தா
நந்தனார் வித்துக்கள்விருட்ச மடக்கியவாறுபோல்
சத்துக்குள்ளண்ட சராசர மைந்தா
அவர்கள் புத்திக்குளெட்டாத பேதகதைநாமுண்டு
முத்திபெறும்வழி மொழியுமே நந்தா
நந்தனார் அத்தனிருக்குமிட மன்னமயாதிகள்
பத்துதலில்லாபரவெளி மைந்தா
அவர்கள் தத்துவங்கள்தொண்ணூற் றாறுங்கடந்திடும்
வஸ்துவைநாமெண்ணும் வகையேதுநந்தா
நந்தனார் நித்திரையொழித்தபின் நினைவுடனேகூடி
உத்தரப்பேசியதுண்மையே மைந்தா
அவர்கள் பித்தனைவேறொரு பேய்பிடித்தாற்போலுன்
சித்தவிகாரங்கள் தெளியுமோ நந்தா
நந்தனார் பத்திவலைவீசிப் பார்த்திடும்வேளையில்
தத்திக்குதித்திடுந் தாண்டவம் மைந்தா
அவர்கள் சீலமுள்ளநல்ல சேதிசொன்னாயுன்றன்
காலுக்கும் ம்பிடக் கண்டோமே நந்தா
நந்தனார் பாலுக்குச்சர்க்கரை பலித்ததுபோலுங்க
ளாலேயென்றேவிடு நாடாது மைந்தா
அவர்கள் தூலச்சரித்திரத்தைச் சுமந்தபிள்ளைப்பூச்சி
போலேயானோமுந்தன் புண்ணியம் நந்தா
நந்தனார் பாலகிருஷ்ணன்தொழும் பரமசிவனரு
ளாலேபொங்கிவரு வானந்தம் மைந்தா

விருத்தம்

ஓங்காரமென்றுசொல்லு முலைப் போட்டங்
குறுதியெனு மிருப்புல்க்கை கையிலெக்கி
வாங்காரமென்றசட்டு வரகை யிட்டு
வடிக்கடியே க்ண்ணியதைப் புடைத்தெடுத்து
நீங்காதசிதயோக நிஷடைகொண்டு
நிர்மல தானவருஞ் சுற்றிவந்து
பாங்கான நந்தனிரு தாலைப்போற்றி
பணிந்திட்டார் திருநீற்றை யணிந்திட்டாரே

வசனம்

அவர்கள்நந்தனாரை விட்டுநீங்கி தனித்திருக்க மனம்வாராம
ற்சொல்லுவார்கள்

விருத்தம்

இல்லைநீர்ப்போகவேண்டாம் திரும்பிவந்தானுழப்பைச்
செல்லாதபன்னைப்பாப்பான் சினங்கொண்டபடியாலிந்த
எல்லையிலிருந்துதானே வீசனார்திருநாமத்தைச்
சொல்லியநாளைவீட்டிற்சேருவோம்வாரீரென்றார்

வசனம்

அ[illegible]ண்டபொழுகநீபோ னுருகிப் பத்திவெள்ளம்பெருக
சொல்லியபேர்களை நந்தனார் கரவாலிங்கனம்பண்ணி கண்ணீர்வி
லம்பெருகச்சொல்லுவார்

இராகம்-லாவணி-ஆதிதாளம்

இல்லைவெளியிலேசலந்துக்கொண்டா லவர்திரும்பியும்வருவாரோ
எல்லைகடந்தபேரினி பிறவாரென் றியம்புவதறியரோ
பெண்டுபிள்ளைகள்வெறுங்குட்டம்துபேய்க்கரைக்காய்தோட்டம்
கண்டுகொள்வார் பெரியோரறியில் கனகசபையினாட்டம
திருவாதிரையில் தெரிசனங்காணத் தேடித்திரியாரோ
அரிதாகிய விந்தமானிடங் கிடைத்தாலானந்த மடையாரோ
குஞ்சிதபாதத்தைக் கண்டாலொழிய குறைபது நீங்காதே
சஞ்சிதக் குமராதிகளாடிய கடலமுந் தாங்காதே
சேரியிடையிலேகுடியிருந்தா லிந்தச்சென்மமுந்தொலையாதே
சிதம்பரம்போவேன்பதம்பெறுவேன் தடைசெய்துமறியாதே
இரவும்பகலுமொழியாக் கவலையிருப்பதுசுகமோடா
இன்பப்பெருகுமபரானந்தவெள்ளமிழ்ந்து நீபோடா

வசனம்

சிதம்பரம் போவேன் நீங்களிங்கே யிருங்களென்று நந்தனார்
சொல்லுவார்

இராகம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்

பல்லவி

சிந்தனைசெய்துக்கொண்டிருந்தாலுங்கனுக்
கெந்தவிதமுங்குறையேறலாமசிவ (சிந்தனை)
அந்தணமுனிவரு மிந்திரனமாரும்
வந்துபணியுமவர் விநதபொற்பாதத்தை (சிந்தனை)

மாபவனைவதைத்தவன் காமனையெரித்தவன்
மான்மழுதரித்தவன் தாமரைப்பாதத்தை (சிந்தனை)
தப்புருவணிந்திடுந் தும்புருநாரத
ருப்பணியும்பொன் னம்பலவாணனை (சிந்தனை)
வெம்பிய துயபிக் கருளிய பாலகிருஷ
ணன்பணியுந்திரு வம்பலநாதனை (சிந்தனை)

இராகம்-பூரிகல்யாணி-அல்லது-சாமா-ராகம்-ஆதிதாளம்

பல்லவி

தில்லைத்தலமென்று சொல்லத்தொடங்கினு
இல்லைப்பிறவிப்பிணியும் பாவமும்

அநுபல்லவி

சொல்லத்தகுமிதுவே சிவலோகம்
எள்ளத்தனையலஞ் செய்யிற்போசர் (தில்லை)

சரணங்கள்

ஆகமவேதபுராணங்கள் சாத்திர
மருந்தவப்புரிவார்க்கு வருளிய பாத்திர
மாலையமாயிரத்தெட்டினு நேத்திர
மானந்தத்தாண்டவம் மாடிய க்ஷேத்திர (தில்லை)
கனத்திலாடுமணிமாதி சித்தியுள
ககனத்திலாரும் விண்ணவர்கள் வெத்தியு
மிணையில்லாத குருசாஸ்திர பத்திரி
மிகத்திற்றுனே வருஞ்சிவபத மூத்தியும் (தில்லை)
பரமரகசியமொன்று பார்க்கலாம்
பாலகிருஷணன்கவிபாடிக் கேட்கலாம்
கருமவினைகளடங்காமற் போக்கலாம்
கசடர்கட்குமுத்தியுமுன் டாக்கலாம் (தில்லை)

வசனம்

நந்தனார்ஞானோபதேசஞ்சொலலக்கேட்டுமுன்னே நந்தனாரு டன்திருப்புன்கூறிற்போய் சிவதரிசனஞ்செய்து வந்தவர்களாகிய அறவன்-தொண்டி-ஆனையேறி-மூத்தமாரிகமூனிகாத்தான்நாச்சனு ரான்-ஆண்டிசேவகன்-சொறியன்-வெறியன்-வாணியன்-காலைச்சு ற்றி-பெரியகிழவன் இந்தஆறிருபேர்களு மாநந்தமடைந்து அவரவர்சன்னிதானைடயிலிருக்கத் தொடங்கினார்கள் மற்றபுலையர்கள்

கூட்டங்கூடி நந்தனூர் நம்மைநாளொன்றுக்கு மூன்றுதரஞ்சிவநாம
த்தைச் சொல்லச்சொன்ன குற்றத்தைப்பாராட்டி நந்தனையடிமை
கொண்ட அந்தணனிடத்திற் சொல்லுவார்கள்

விருத்தம்

இரவுபகல்பரமசிவ னிணையடியேதொழுதிருக்குமின்பங்கூறி
கரைபுரளுங்கடலதுபோற் சிவத்திரளிடைகருத்துணரக்கண்டெல்
லோரும்பரிவரும் புலையர்களும் பண்புறவே நெரிக்காட்டிப்பக
ரச்சேவீர் அரியதொரு நந்தனிவனடிமைபுரி யந்தணர்பாலறிக்கை
செய்வார்

நொண்டிசிந்து-இராகம்-பைரவி-ஆதிதாளம்

ஐயவொருசேதிகேளும்-உங்கள்-அடிமைச்சாரபறையனுட
த்தையெல்லாம்-வரவரகெட்டுப்போச்சு-சேரியில்-வழக்கமில்லா
தபடிபழக்கமிட்டான் குடியிருக்க-மாட்டோம்-எப்போதும்-கூ
க்குரல்போடுகிறானுமறந்தேஇருப்பானொருவேளை-கொள்ளாதே
ஏக்கமடைந்தவன்போல்காக்கைவளைத்துச் சிரிப்பானொருவேளை
தில்லைச்சிதம்பரமென்று சொல்லிமதம்பிடித்தேஅழைப்பானொரு
வேளைஎங்களையும அண்ணேன்வரவென்றி சொல்லிக்கின்னோங்
கொட்டிகுதிப்பானொருவேளைதிக்குமுக்கல்கொண்டவன்போலெ
தையோகண்டவன் ஏண்டவன் போல்களிப்பானொருவேளைமாம்
போலேஜைகயசைக்ககர்லயசைக்கமெய்யசைக்கலும்இருக்கானொ
ருவேளைதாளம்போட்டெக்கலிகொட்டியே குடிசிக்குட்புகுந்து
பேசானொருவேளைகண்டதெல்லாம் பிரட்டென்று சொல்லுவான்
மூரட்டுத்தனம்மன்னார்சாமிபோலே கிளம்பிவாய்விட்டலறுங்கு
றலூரெட்டுமேஐயோசிவனேயென்மான்கிழேபுரண்டழுவா ளிய
ரையுந்தொழுவானே தூண்டிமீனதுபோல துள்ளித்துள்ளித் துடி
ப்பான்பற்களைக்கடிப்பானே சிவனேன்றூன்று வாட்டிநாகனு
ஞ்செப்பவேணுமல்லாவிடில் வப்பிலுதைப்பர்ன் கோயிலிற்போ
வோமென்பான்எங்களையுங்கும்பிடச்சொல்லியில்லைசவம்புபண்ணு
வான்சிற்றிவரச்சொல்லிபடிபொன் சிவன்பேரைச்சொல்லடா ச
ன்னிதியில்நில்லடாவென்பான் சொல்லித்துலைக்கவேணும்இல்லா
விடில்சுக்குமந்தாடிகொண்டு நோக்கிவிடுவான் கொம்பேறிமூக்க
ன்போலேமூதுகினில்குத்துவான் புலிபோலேதத்துவானே இது
வென்ன காரணமோ எங்களுக்கினமாயிருக்குதுமாரணமல்லவோ
கருப்பண்ணசாமிதானும் இருளன் காட்டேரி வீட்டேறிபோபா
வர்டைதுரைதானோ ரணபுத்திரகளியோ வுன்வந்த வீரனோபூசை
கள்போட்டுப்பார்த்தோம்ஒன்றிலும்போவதில்லையே எனைசன்வன்

னுவனுரைக்கேட்டோம் அவரெடுத்துச்சொன்னரிதை விடுத்துச் சொன்னர்மயான உருத்திரனர் பிடித்துவாட்டுதடாயிப்படியாட்டுதடாதெளியாதென்றுசொன்னர் ஐயோ தெளியாதென்றுசொன்னர்

இராகம்-கன்னடா-பியாகு. ஆதிதாளம்

பல்லவி

சேதிசொல்லவந்தோம்-நந்தனர்-சேதிசொல்லவந்தோம்

அநுபல்லவி

சாதிமுறைதெரியாதவனுமக்குத்
வாதவனென்றொரு மாதமாய்தெரிந்த (சேதி)

சரணங்கள்

ஏரைப்பிடித்துச்சறறே உழுவான்-மன
தேங்கித்தள்ளாடியே விழுவான்-எங்கள்
சேரியைபபார்த்தே யருவான்-சிவ
சிதம்பரமென்றே தொழுகானையா (சேதி)

காத்துமுடியைகையி லெடுப்பான் அதை
நடத்தெரியாமலே விழிப்பான் இதைப்
பார்த்திடும்பேர்களைப் பழிப்பான் அடே
பாவியென்றெங்களை அடிப்பானையே (சேதி)

உதட்டையசைத்துமுணு முணுப்பான் அவன்
ஊணுறக்கத்தையுந் துறப்பான் நாங்கள்
அதட்டிப்பேசுனு நடிப்பான் பொன்
னம்பலவாணனைப் படிப்பானையா -சேதி)

இராகம்-கமாசு-ஆதிதாளம்

பல்லவி

அடக்கியாளுமையா இவனை அடக்கியாளுமையா

அநுபல்லவி

அடக்கியாளுமிந்தத் துடுக்குக்காரனிவனை
யடித்துப்பிடித்துக் கண்டித்துப்படப்படத்து அடக்

சரணங்கள்

பொன்னம்பலவாண னென்றவன் பேசி
பொழுதுபோக்குவான்சாமபலைப் பூசி

சன்னதங்கொண்டவன் போலவே — வாசி
சண்டைபிடிக்க வருவானிவன் — தோசி (அடக்)
பலித்துளைதயேயொருமந்திரம் — போட்டான்
பழமையான இனிதங்களைக் — கூட்டாகு
குலத்தைக்கெடுக்கவந் திவனென்று — கோட்டான்
கோபக்காரனெங்கள்வழிப்பட — மாட்டான் (அடக்)
குளத்தைவெட்டச்சொல்லிக்கூலியைக் — கொடுத்தன்
கூட்டிக்கொண்டுபோய்ப் பயல்களைக் — கெடுத்தான்
களத்தைச்சீக்கவேயெங்களை — விடுத்வான்
காடுமண்டிவருஞ்சுடலையிற் — படுத்தான் (அடக்)

வசனம்

சேதிசொல்லவந்தபுலையர்களைப்பார்த்து வேதியன்சொல்வான்

விருத்தம்

காலமேவந்தா ளிங்கேசள்ளக்கும் பிடுகள்போட்டு
பாலனைபபோலே பேசிப்பசப்பினன் யோடாவென்றேன்
வேலைசூழுலகி லிந்தவீணனை மபோலேகாணேன்
சீலமாஞ்சிதம்பரத்தைச் சேரவேவிடைகொடேன்

வசனம்


அந்தணர்சொன்னமொழியைப் புலையர்கள்கேட்டுமிகவிஞ்ச ந்தோஷங்கொண்டு சேரிவந்துசேர்ந்தபின் நந்தனாரெப்போதும் பேலேஅந்தணரிடத்திலே வருகிறார்

துக்கடா-ஆதிதாளம்

நந்தனாரும்வந்தார்-வெகு
சொந்தமானதங்களையரைக்காண (நந்த)
அங்கமுழுதிலும்நீறுபூசியே அரகரசிவசிவமென்றுபேசியே
எங்கையாருந்திருகைசள்வீசியேசாமிசாமி என்றுதன்னையேசியே
தில்லைச்சிதம்பரப்பள்ளுபாடியேதெரிசனங்காணேனென்றுவாடி
யே, அல்லலறுசிவலோகந்தேடியே அடையவேணுமென்றிங்கே
[நாடியே

விருத்தம்

சாதிகுலம்பிறப்பென்னுஞ் சந்தேகந் தெளியாது தானாய்நிற் ற்கும்பேதகுணம் யற்றறுத்துப் பேரின்பம் வருவித்துப்பேணிக் காக்கும்ஆதிபார பரமெனுந் திருச்சிற்றம் பலத்தைக்கண்டானந் திக்கவேதமொழ விளங்கிவருந் திருவாயால் விடைகொடுத்துவிடு விரென்றார்



பறையர்கள் வயலில்ஏர்வுழல், நாத்துநடல், ஏற்றம்இறைத்தல், கஞ்சிகுடித்தல், கந்தஞர் கோலைப்பிடித்து வேலைவாங்கல், பிராமணர் ஆரிற்றல்

இராகம்-உசேனி-ரூபகதாளம்.

தில்லையம்பலத்தலமொன் றிருக்குதாம் கண்டபேர்க்கு
ஜென்மமானபிணியைக் கருக்குதாம்
உயருஞ்சிகரக்கும்பந் தெரியுதாம் பார்த்தபேர்க்கு
உள்ளங்குளிரக்கருணை புரியுதாம்
பண்ணவரயன்மாலுந் தேடுதாம் தில்லைக்காட்டில்
பாம்புப்புலிக்குநிர்த்தன மாடுமாம்
அரியபிரமனெழுத்தைத் தள்ளுமாம் ஆரையுமது
ஆனந்தமுழுக்காட்சிக் கொள்ளுமாம்
போய்வருபவர்புண்ணிய சாலியாம் தருமராஜன்
புறத்தில்பழுதுவந்து கேலியாம்
உருவில்லாதகுருவொன் றிருக்குதாம் மூலக்கனலை
ஊதியெழுப்பிக்காணப் பெருக்குதாம்
உருவமாகிவெளியே வருகுதாம் நான்மறைக்கும்
உணர்வில்லாதகாட்சி தருகுமாம்
போய்வருகவுத்தாரந் தாருமே பொன்னடித்தாள்
போற்றுவேன்கண்ணாலே பாருமே (தில்லை)

வசனம்.

சிதம்பரம் போவோமென்று அந்தணர் கேட்க நந்தனார் சொல்லுகிறார்.

இராகம்-சுருட்டி-ஏகதாளம்.

தா தரிகிட தகசந்தரி சன தசநாததிமி தகிட தகணந்தரி ஜெணதத்திம் தகுசந் தரிகுந்தரி தந்தகணந்தனணந்தனணந்தணந்தணந்தச ணதசதன தத்தின்னகிட தகதோந்தத்தின்னகிட தகதோந் தத்தின்னகிட தகதோம்.

பல்லவி.

ஆடியபாதத்தைக்காணாரே பிறந்தானந்தம்பூணாரே

அநுபல்லவி.

நாடுக்கைப்பூரண பூசத்தில்லை
நாயகனார்குரு வாரத்திலேமன்றுள்

சரணங்கள்.

பாசமறுத்துடல் வாசியொடுக்கி
பத்திபண்ணுங்காட்டில் பாம்புபுலிக்கி
ஆசையுடனேநல் லருளைப்பெருக்கி (ஆடிய)

கொட்டமடிக்கும் புலன்றொழில்நீக்கி
கோடிகாலஞ்செய்த பாழ்வினைபோக்கி
வெட்டவெளியிலே கெட்டிடத்தூக்கி
வேதம்பணிந்திடத் தென்முகம்நோக்கி (ஆடிய)
சேறுஞ்சடைபுனல் பூமியிற்சொட்ட
சேவித்துநாரதர் பாடியேகிட்ட
கோணங்கிழிந்தண்ட கோளமுமுட்ட
கோபாலகிருஷ்ணனு மத்தளங்கொட்ட (ஆடிய)

வசனம்.

ஆனபடியால் நான் சிதம்பரம்போக உத்தரவு தரவேணுமென்று அந்தணரைத் திருநாளைப்போவார் கேட்கிறார்.

இராகம்-தேசிகதோடி-ஆதிதாளம்.

பல்லவி.

உத்தாரந்தாருமையே எனக்
கொருவருமில்லைபரகதியடைய (உத்தாரந்)

அநுபல்லவி.

வித்தைகள்கற்றதுமில்லை யாதொரு
பத்தியிற்சென்று பரகதியடைய (உத்தாரந்)

சரணங்கள்.

குற்றங்களெத்தனை கொடியவன்செய்தேன்
அத்தனையும்பொறுத் தாதரவாக (உத்தாரந்)
பெண்டுபிள்ளையென்று பாவனைப்போலவே
கண்டுகளித்துக் காலங்கழித்தேன் (உத்தாரந்)
தில்லைச்சிதம்பரத்தை தெரிசித்துவக்குங்க
ளெல்லையைக்காத்துக்கொண் டிருக்கிறேனையே (உத்தாரந்)

வசனம்.

நந்தனார் சிதம்பரம்போக உத்தாரங்கேட்டதனால் வேதியரடி
மையைப்பார்த்துச் சொல்லுகிறார்.

விருத்தம்.

படிபுகழ்தில்லைநாதன் பத்தியே யுருவாய்வந்து
குடிசை நாதனூரில் களித்திடுங் கந்தனென்று
இடுசெடு மூஞ்சி காட்டிச் சண்டம் போலே நெஞ்சன்
அடிமைச் சிடமெய்க்கச் சொல்லும் போவாரோ

இராகம்-தெண்டகம்-ஆதிதாளம்.

சேரிமுற்றுஞ் சிவபக்தி பண்ணும்படி
விட்டையா மடி யிட்டையாம்
சேதிசொல்ல வேணுமென் றிங்கே நீ
வந்தையோ அக மகிழ்ந்தையோ
காலைமாலையில்வந்து தெரிசனங்
காட்டுறாய் கிலை நாட்டுறாய்
கதறினாலு மூர்க்குருவி கருடன்போ
லாகுமோ பதிவேகமோ
அடிமைவேலை செய்யுமுனக்கிந்தக்கொண்
டாட்டமோ ஜனக் கூட்டமோ
அடக்கியாளமாட்டேனோ சிக்கக்குட்டி
யல்லவோ அதைச் சொல்லவோ
காளிபூசை யவர்போடும் போது நீ
கண்டித்தை யவரைத் தெண்டித்தை
கபடமெல்லாம் வெளிப்படுவ தாகவழி
காட்டுகிறே னிதை நாட்டுறேன்.

வசனம்.

நந்தனார் சிதம்பரம் போகிறேனென்று சொல்வதால் அந்தணர் கண்டிக்கிறார்.

இராகம்-லாவணி-ஆதிதாளம்.

பல்லவி.

பறையா சிதம்பரமென்று சொல்லப்
படுமோ போகப்படுமோடா-அடா (பறை)

அநுபல்லவி

அறியாத்தனமினிசொன்னாலினிமே
லடிப்பேன கூலியைப்பிடிப்பேன் பாவிப் (பறை)

சரணங்கள்.

சிதம்பரமென்பதை விடு-கொலைச்
சேரியிலேவந்துபண்ணாத்தைப்
பதத்திற்பிடுங்கிடு-கறுப்
பண்ணனுக்கேபலிகொடு அடா (பறை)

எப்போதுமொருதடி-பிடி-கையி
லெடுத்துக்கொண்டேதழுக்-கடி-உள்ளங்
கற்பனையாய்ப்பள்ளு படி-கால்நோ
காமலேகாடியைக்-குடி-அடா (பறை)
கள்ளந்தீருதற்குப்பாரு-உன்
கால்படும்பண்ணையில்வீற்றிரு-இது
சொன்னதுமில்லையோ உன்-குரு-நீ
சுகமுடன் வாழ்ந்துக்கொண் டிரு-அடா (பறை)

விருத்தம்.

ஒதியடி வீராவென்றும் உக்கிர மாடா வென்றும்
பதிபெறுங் கருப்பா வென்றும் பாவாடை ராயா வென்றுந்
துதிபெறு மிருளா வென்றுந் தொட்டியச் சின்ன னென்றும்
மதுவொடு பிசிதம் வைத்து வருந்தியே வணங்குவாயே.

வசனம்.

நந்தனைக் கண்டித்து மறுபடியும் நல்லவார்த்தை அந்தண ர்சொல்லுகிறார்.

இராகம்-லாவணி-ஆதிதாளம்.

பல்லவி.

நந்தா-வொருசேதிசொல்லுகிறேன்கே
ளிந்த-பங்குதோன்றியநாள்முதல்
சொந்த-முறியெழுதிக்கொடுத்துநீ
தந்த-பறையனல்லவோமறந்தாய் (நந்தா)
பாரு-இந்தவயல்வரப்பைவெட்டிப்
பேரு-அந்தக்கண்ணியைவெட்டிப்பனை
சேரு-பொருப்புள்ளவனுனையன்றி
யாரு-இதுவல்லவோகாரியம். (நந்தா)
வாடாவுன்கூலியைமுழுதுந்தா
வோடா-பண்ணைப்பறைச்சிகளுடனே
கூட-பழனங்கடேர் துமாடப்
போடா-யிதுவல்லவோபுண்ணியம். (நந்தா)
பாடு-உன்கறுப்புதெய்வத்தைகொண்
டாடு-கள்ளுகள்ளுடன்பூசைகள்
போடுநெல்விளையும்படிக்குவழி
தேடு-புத்திசொன்னேனிதுதான் (நந்தா)

வசனம்.

வேதியர் நந்தனாரைச் சிதம்பரம் போகாதேயென்று கண்டித்துச் சொல்லுகிறார்.

இராகம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

சிதம்பரம் போகாதே சொன்னேன்
சிதம்பரம் போகாதே

அநுபல்லவி.

சிதம்பரம்போனால் ஹிதம்பெறலாமென்று
சேதிசொல்லவுமுன் சாதிக்கடுக்குமோ (சிதம்பர)

சரணங்கள்.

கள்ளக்கும்பிடுதனைப் போடாதே-உன்
கபடமெல்லாமிங்கே காட்டாதே
மெள்ளச்சொல்லடா முழுமூடாகிழே
தள்ளிவிட்டுவுன்னைத் தரும்படிசெய்வேன் (சிதம்பர)

நாத்தை பிடிங்கிக்கண்ணிட வேணும்-அந்த
நஞ்சைவயலைச்சற்றேயுழ வேணும்
பார்த்துபரம்படித்துப் பழுதுவாராமல்
பாயுஞ்சலம்விட்டு பார்த்திடுவாய்நீ (சிதம்பர)

அடிக்கடி மறந்துநான் சொல்லவோ-நீ
அடிமைகாரப்பய லல்லவோ
எடுத்துகாட்டுவே னிருக்குதுசாதனம்
தடுத்துபேசினால் தாடையிலடிப்பேன். (சிதம்பர)

வசனம்.

அந்தணர் கண்டித்துச் சொன்னகால் நந்தனார் துயரமடைந்து சேரியில்வந்து சிவனை நினைத்து பக்திபுரிந்து கொண்டாடுகிறார்.

இராகம்-தொண்டகம்-ரூபகதாளம்.

பல்லவி.

பத்திபண்ணிக்கொண்டிருந்தால் முத்திபெறலாமே

அநுபல்லவி.

எத்திசையுமெவ்வுயிர்க்கு மவ்வுயிராய்நிறைந்திருக்கும்
வஸ்துவென்று அம்பலவன் மலரடிநினைந்தேதினம் (பத்தி)

சரணங்கள்.

கட்டழகிச் சாரவிடங் காதலது போலே
கடுகிவரும் கன்றருகில்கபிலையது போலே
கண்டவரைத் துணியுமில்லாப் பேதைபொருக் காலே
காவலனார் பதம்வருகில் களிப்பதனைப் போலே
கண்டுமுறைகிழகலக் கண்டறியார்மதமயக்கம்
கற்பனையாமிப்பிரபஞ்சஞ் சொற்பனம்போலொப்பிமிகும்

தாயடிக்கிற்பால்குடிக்கத் தழுவுதல்கிருஷ் டாந்தம்
சடலம்பொறுக்காமல் துயர்தருகில் யேகாந்தம்
ஆயிருந்துவழுத்தி லிந்தமாறையுப சாந்தம்
ஆருமென்றுசாதனங்கள் வழங்குது வேதாந்தம்
காயஞ்சனிக்காதிருகக்கண்டுகொள்ளவேணுமென்றால்
காசுபணம்பாசமது மாசறவேநேசமுடன் (பத்தி)

பச்சைமரத்தாணிபோலே பதிந்துமனம் நாடி
பாலகிருஷ்ணன் பணியும்பொன் னம்பலவனைகொண்டாடி
இச்சையொழியும்பலன் களைந்துமிக வாடி
ஏகாந்த மானபரி பூரணத்தைத் தேடி
அச்சமறத்திருவிழியி லானந்தநீர்கரைபுரள
அரனே திரிபுரனே கங்காதரனே பராபரனேயென்று ()

வசனம்.

சேரியில் சிவபத்தி பண்ணிக்கொண்டிருக்கின்ற பண்ணிருபேர்களுடன் நந்தனாருமிருந்து பத்திபண்ணும் நாளையில் ஒருநாள் நந்தனார் பண்ணிருவருடைய பத்தி திடப்பட்டதோ இல்லையோ வென்று அறியப்பரிட்சை பார்த்தார்.

இருச்சொல் அலங்காரம்.

நந்தனார். சிவதலத்திற் சிதம்பரமே யென்றார்
அவர்கள். அனித்தைகளைத் தாண்டி நிற்றலேகாட்சி யென்றார்
நந்தனார். சிற்சபையின் மகிமையென்னசெப்புவீ ரென்றார்
அவர்கள். அச்சுதனுங்காணாத வானந்த மென்றார்
நந்தனார். ஆகையினாலென்ன பலனாகு மென்றார்
அவர்கள். காக்கத்தினாலேசில நாமம்நவிலு மென்றார்
நந்தனார். கற்றதனாலென்ன பலன்கண்டா ரென்றார்
அவர்கள். கொற்றடிமைக்காரபலன்கொண்டா ரென்றார்

நந்தனார். அம்பலத்தைத்திரைபோடத் தொடங்கினாரே
அவர்கள். பம்புவித்தைமாயைக்கு ளடங்கினாரே
நந்தனார். மனந்திருத்திகொண்டார்க்குவாரதொன்றில்லையென்றார்
அவர்கள். கனவருத்தமுண்டார்க்குங் காராதுதொல்லையென்றார்
நந்தனார். சாதியிலேயெளியவன் தானறிவேனோ வென்றார்
அவர்கள். ஆதியிலேபேதமில்லை அறிவீரே யென்றார்
நந்தனார். ஞானமில்லாதவன் முத்திநடா ரென்றார்
அவர்கள். ஊனமில்லாச்சிவபத்திதேடா ரென்றார்
நந்தனார். மதியில்லாதவர்களுக்கெல்லாம்விதியே தென்றார்
அவர்கள். துதியிலாதவர்க்கெல்லாம் கதியே தென்றார்
நந்தனார். பலக்கட்டைக்குளப்படிபோல்பகுப்பா ரென்றார்
அவர்கள். சிசுக்கடவிலிளப்பாறிச் சுகிப்பாரே யென்றார்
நந்தனார். பாப்பானுத்தரங் கொடுப்பானோ வென்றார்
அவர்கள். காப்பாற்றுங்கடவுளுக் கைப்பார மென்றார்
நந்தனார். படித்தபடிகாட்டிவிட்டேன் பலமாச்சு தென்றார்
அவர்கள். அடித்துப்பால் போட்டுவிட்டாராலே யென்றார்
நந்தனார். அங்கேயேனீங்கள்வல்லையோ வென்றார்
அவர்கள். இங்குமிருந்து வியற்றுங்கா ளென்றார்

வசனம்.

நந்தனார் சிலநாளானபின்பு அடிமைகொண்ட அந்தணரிடத்திலவந்து சிதம்பரம்போக வுத்தாரமிகவும் வருந்திக்கேட்கிறார்

இராகம்-கெவுளிபந்து-ரூபகதாளம்.

பல்லவி.

குஞ்சிதபாதத்தைத்தாரும்-எந்தன்-சஞ்சிதபாவத்தைத்தீரும்

அநுபல்லவி.

செஞ்சிலம்பசையுங் கனகசபைதனில்
ஜெணுதத்தஜ்ஜெணுதகஜெணுதிமிதத்தோமென்றாடியே குஞ்

சரணங்கள்.

நெஞ்சக்கவலையை யாற்றும்-இந்த
வஞ்சப்பிறவியை மாற்றும்-நானும்
வஞ்சசிவகாமி வல்லிமகிழ்ந்திடும்
தஜ்ஜெஜம்தஜ்ஜெஜம்தரிகிட தக்கிடதோமென்றாடிய(குஞ்சி)

சரணமென்றிங்கேநான் வந்தேன்-ஜென்ம
மரணத்தில்நான்மிக நொந்தேன்-அந்தக்
கருணாகருஷங்கள் போக்கியேகாத்திடும்
இந்திராதிவர்மாமுனி வந்துமிதந்துதிசெய்திடும் (குஞ்)

பாலகிருஷ்ணன்தொழும் பாதா-முத்தி
நால்வர்க்குதவிய நாதா-எந்தன்
மேலேகிருபைசெய்து வெத்தியளித்திடும்
அத்தனைநித்தனைசுத்தனைகர்த்தனைநிர்த்தனஞ்செய்திடும் (கு)

விருத்தம்.

வேதியரே பெரியவரே நல்லவரே நாள்கடையன் விண்ணோர் மெச்சும், சாதியரே பலகலையுங்கற்றுணர்ந்து புரையில்லாத்தவமே செய்யும். போதியரே பக்தியில்லா நான்புலைய னேதறிவேன்புண் ணியமூர்த்தி, ஆதிகுருசிதம்பரத்தைக் காணவென்றேயாசைகொ ண்டே னனுப்புவீரே.

இராகம்-நாதநாமக்கிரிகை-ரூபகதாளம்.

பல்லவி.

தில்லைச்சிதம்பரத்தை யொருதரமாகிலுந்
தெரிசித்துவாவென் றுந்தாரந்தாருமையே
தில்லைச்சிதம்பரத்தைக் கண்டால்பிறவிப்பிணி
இல்லையென்றுபெரியோர் சொல்லக்கேட்டிருக்கிறேன் (தில்)
அல்லலறுக்குந்திரு வம்பலநாயகன்
அல்லும்பகலுமாடு மானந்தம்பெருகிய (தில்லை)
ஆதிமுதலாயென்னை அடிமைகொண்டதல்லவோ
வேதகுலமேயென்றன் மீதில்தயவுசெய்து (தில்லை)

இராகம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

தெரிசிக்கவேணுஞ் சிதம்பரத்தைத் தெரிசிக்கவேணும்

அநுபல்லவி.

தெரிசித்தவுடனுடல் கிரிசைபிணிகளறும்
பரிசுத்தமாகுமுன் மறுசுத்தமாநமே (தெரிசிக்)

சரணங்கள்.

பாத்தனைபணியுந்திருக் கூத்தன்சந்நிதிதொழ
தேத்திப்பிறவிதுய ராத்தியெய்போதும் (தெரிசிக்)

வேதனையடியவர் போதனைமுனிவர்கள்
நாதனைக்கரங்குவித் தாதாவாக (தெரிசிக்)

ஈசனைபுலியூரில் வாசனைதனகச
பேசனென்று நடராஜனைப்போற்றி (தெரிசிக்)

கர்மத்தையகல்பவர் வாமத்தினின்றுசிவ
நாமத்தைச்சொல்லியர்த்த சாமத்தில்வந்து (தெரிசிக்)

ஞாலம்புகழுமவன் மாலையணியுங்கோ
பாலகிருஷ்ணன்தொழுஞ் சீலபொற்பாதத்தைத் (தெரிசிக்)

வசனம்.

நந்தனார் தெரிசனஞ்செய்ய உத்தாரங்கேட்க அந்தணா சொல்லுகிறார்.

விருத்தம்.

புத்திசொல்லிக் கேளாத மூடா வுன்றன்
　புரட்டெல்லாம் நானறிவேன் போடாபோடா
பத்தியென்றுஞ் சித்தியென்றும் பறையர்க் கேது
　பார்ப்பார தெய்வமது பலிக்காது
குற்றமுண்டுன் சாதியிலே வழக்கமில்லாக்
　கொள்கையது சேரியிலே கூடாதப்பா
பித்தமது கொண்டவன்போ லிங்கே வந்து
　பேசாதே போபோவென் றேசு வானே.

இராகம்-அசாவேரி-ஆதிதாளம்.

பல்லவி.

சிதம்பரதெரிசனமா-நீயதைச் சிந்திக்கலாமாபறையா

அநுபல்லவி.

சிதம்பரதெரிசனஞ் சதுர்மறையோர்கள்
　செய்வதுஞாயம் நீசொல்வதுமாயம்
சொல்லாதே-இங்கே-நில்லாதே
　சேரிக்குப்போடா-நாளைக்குவாடா (சிதம்பர)

சரணங்கள்.

சனகமகாமுனி யோகிகள்தேடிய
　கனகசபேசனைக் கண்டறிவர்யோ
பேசாதே-கை-வீசாதே
　வீரனைத்தொழடா-ஏரியையுழடா (சிதம்பர)

அநுபல்லவி.

எத்தனையோபுத்திகளெடுத்துப்படி (பித்த)

சரணங்கள்.

சித்தமிப்படி செய்ததாரோ
பத்துதலில்லாமலே பண்ணியபேராரே
பத்தியென்றுபே ரிட்டதாரோ
நித்தமுமிப்படியே நிலைபிட்டதாரோ (பித்த)

எத்திசையும்புகழ்பெற் றிருந்தும்
வித்தைகளனேகம்விளம்பத் தெரிந்தும்
பத்தியோடுசால மறிந்தும்
சுத்தனென்றுபேரிட்டு நானுனக்கிருந்தும் (பித்த)

வசனம்.

மனதிற் றுயரமுற்றவேதியரை நந்தனார்மிகவும் வணங்கிச் சொல்லுவார்.

விருத்தம்.

பித்தமதுதெளிந்துவிட மருந்தாண்டுதில்லைவனம் பேணிச்சென்று
சத்திசிவகாமிப்பெண் சந்நிதியினோராகித் தலைவணங்கி
தித்தியென்றுநடனமிடுந்திருக்கோலங்கண்குளிரத்தெரிசித்தாலுத்
பித்தமதுதெளிந்துவிடும் வேதாந்தமறைசொரியும்பெரியகோவே

இராகம்-செங்கலா-ரூபகதாளம்.

பல்லவி.

பித்தந்தெளிய மருந்தொன்றிருக்குது
பேரின்பமன்றுள்ளே

அநுபல்லவி.

மற்றமருந்துகள் தின்றாலுமுள்ளுக்கு
வல்லைவல்லேஜயே அடுமை (பித்தந்தெளிய)

சரணங்கள்.

பாம்பும்புலியும்மெய்ப் பாடுபட்டுத்தேடிப்
பார்த்துப்பயிரிட்டது
பாரளந்ததிருமாயனும்வேதனும்
பார்த்துக்களித்ததுண்டு
பார்ப்பதியென்றொரு சிமாட்டியதில்
பாதியைத்தின்றதுண்டு-இன்னம்

யாதிருக்குபறையாநீயும்போய்
பாமரனுத்தாரந்தாரும் (பித்தந்தெளிய)

பத்துத்திசையும் பரவிப்படர்ந்தாலும்
பார்த்துப்பிடியாரே
தத்திக்குதிக்குந் தாளங்கள்போடுந்
தண்டைசிலம்புகொஞ்சுந்
தித்திக்குந்தேனே செங்கரும்பேநல்ல
சித்தமுடையார்க்கே என்
சித்தத்தைகட்டியிழுக்குது அங்கே
சென்றால்போதுங் கண்டால்தீரும் (பித்தந்தெளிய)

ஊரைச்சொன்னு மிப்பாவந்துலேயு
மூழ்வினையூடறுக்கும்
பேரைக்கொண்டாடிப் புலம்புகிறார்வெகு
பேர்களுக்குப்பிறைப்பு
சாருநரைதிரை தீருமருந்துச்
சாதியைப்பாரது இன்னநந்
தீராதநோய்கள் படைத்தவெனக்குத்
தீருந்திருமைமேய அடிமை (பித்தந்தெளிய)

இராகம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.

சிதம்பரம்போகாம லிருப்பேனோ.
சென்மத்தைவீணுக்கிக் கெடுப்பேனோ (சிதம்பரம்)
பத்தியுமனமு பொருந்தினதங்கே
சத்தியஞ்சொன்னேன் சடைமுடியிங்கே (சிதம்பரம்)
ஆசையுநேசமு மானந்தமங்கே
பேசுறும்பாசமும் பிகற்றலுமங்கே (சிதம்பரம்)

வசனம்.

இப்படி நந்தனார்சொல்ல வேதியர்மூர்ச்சையடைந்து விழுந்துதெளிந்து எழுந்துசொல்வார்.

விருத்தம்.

காற்பது வெளிப்பூமி நடவுநட் டாகவில்லை
பார்ப்பது மில்லைசைவப் பழமதுநின்றாய் பண்ணை
ஈர்ப்பது மில்லைபுன்னைக் கைவிட மனதுமில்லை
சேர்ப்பதா லாவதில்லைச் சேரியிற் றொலைந்துபோடா.

என்று வேதியன்சொல்லிய உத்தரப்படி சேரியில் நந்தனார் வந்து பத்திபுரியும் பனிரண்டுபேர்களைப் பார்த்துச் சொல்லுவார்

திவிதை-இராகம்-மாஞ்சை-ஆதிதாளம்.

கண்ணிகள்.

ஆசை நேசராகுந் தோழரே கேளுங்கள்
பேசுந் தெய்வங்களுண்டோ யீசனல்லால் நமக்கு (ஆசை)
ஆயன் மாயன் அன்றடிமுடி காணாத
நேய னழலுருவாய் நின்றவிர் மன்னல்லால் (ஆசை)
மண்ணாய் விண்ணாய் மற்றுளப் பொருள்களாய்
எண்ணுமுள் ளெண்ணெய்போ லிருக்கு மீசனல்லால்(ஆசை)
அருவா யுருவா யண்டபகி ரண்டமெங்கும்
பரமாய் நின்றதந்தப் பராபரத்தை யல்லாமல் (ஆசை)

வசனம்.

என்று நந்தனார்சொல்லிப் பின்னும் ஆனந்தக் கூத்தாடுவார்.

இராகம்-தன்னியாசி-திரிபுடைதாளம்.

பல்லவி.

ஆநந்தக்கூத்தாடினார் ஆநந்தநந்தன்
ஆநந்தக்கூத்தாடினார்.

அநுபல்லவி.

வானுக்காதிதேவர் முனிவர்ஜயஜய
வாழ்த்தும்பிரானடிகள் வாய்ப்பதெப்போதோவென்று (ஆ)

சரணங்கள்.

மாயவலைக்குட் பட்டு அதிலெப்போதும்
மாளாததுயரப் பட்டு
மாயுமுன்னைவந்து வலியவாண்டருண்மூர்த்தி
நாயேன்களிக்கவென்முன் னாடுவரென்நேசாத்தி(ஆநந்த)

கவலைப்படாதே நெஞ்சமே காலன்கைப்பாசம்
கண்முன்வாராதே அஞ்சுமே
தவநிலையையுணர்ந்த சன்மார்க்கர்தமக்கன்
தற்பதத்தைக்காட்டினேன் தனைக்காணுவேனென்று (ஆ)

காயமிதுவுஞ் சதமா அன்றியுற்பவங்
காண்பதெவ்வொரு விதமா
ஆயுமெழுபிறப்பா யவதரித்தாலுமென்றும்
தூயபதத்தாளத்தக் குகளற்றிருப்பேனென்னும்(ஆநந்த)

வசனம்.

இவ்விதமாகப் பனிரெண்டுபேர்களையும் வேலைசெய்ய வொட்டாமல் தன்சமீபத்தில நிற்கவைத்துக்கொண்டு போதித்திருப்ப வேதியன்கேள்வியுற்று நந்தனாரைச்சீறி கடுங்கோபஞ்செய்ய நந்தனார் வேதியருக்கு இதவு சொல்லுகிறார்.

ஸ்ரீராகம்-ஆதிதாளம்.

பல்லவி.

ஏதுக்கென்மீது இத்தனைபேதம்
என்னுவனே தோதகம்

அநுபல்லவி.

காதகராம்மனக்கசடர்சொன்ன சொல்லை
சாதனைசெய்துசாதித்தீர்பிழையொன் றில்லை(ஏதுக்)

சரணங்கள்.

நான்உமக்குப் பண்டு சாசனம்செல்து
நலமாய்த்தந்த துண்டு
தோன்றலேநீசொல்லுஞ் சொற்படிசெய்கிறேன்
பான்மையாகநித்தம் பத்தியாய் உய்கிறேன்(ஏதுக்)

காச்சளவு நன்மைசெய்தோரையொருக்
காலும்மறவாத் தன்மை
தாசனுக்கப்போதுமுண்டு தாமே கண்டு
யோசிக்கப்போகிறீர் இனிமேல்நான்செய் தொண்டு(ஏதுக்)

ஏழைநான் தானே சூதும்வாதும்
ஏதொன்றறி யேனே
மேழியுடனேயொரு மேதிகாளைக ளெங்கே
ஊழியனுக்கும் உழுகயிறுங்கொடுப்பீ ரிங்கே(ஏதுக்)

நந்தனார் ஏருழுதல் விருத்தம்.

வணக்கமாய்ச் சொல்லும் வார்த்தையை யுணர்ந்து
வஞ்சனை யிலாதவே தியன்றன்
கணக்கிலாத் தனது பண்ணையாள் வசத்திற்
கைப்பிடி யாகவே தந்து
பிணக்கிலா னிவன்சொற் படியெலாஞ்
பின்னிடான் அழைத்துப்போ வென்ன
இணக்கமாய்க் கொண்டு போயினர் நந்தன்
ஏர்த்தொழில் மிகப்புரிந் தனனே.

இராகம்-சஹானா-ரூபகதாளம்.

பல்லவி.

பத்தியாக ஆண்டைசொற்படி செய்தானந்தன்
பலருடன்கூடிமிகப் (பத்தி)

அநுபல்லவி.

சுத்தனைச்சித்தங்களித்துக் கதித்தவன்
கமலபாதத்தை நாடி
காதலாகவேகொண் டாடி
மனம் நீடி (பத்தி)

சரணங்கள்.

நீருள்ள ஆதனூர்நஞ்சை புஞ்சைகளை
நித்தமுமேர்கொண்டு பழுது அறச்
சுத்தமாகவே யுழுது
காலை பொழுது (பத்தி)

கறுப்புவெளுப்புசிவப்பு நிறமுள்ளக்
காளைகளைக்கட்டிப் பூட்டி பொற்
காறுவொன்றதிலே மாட்டி
ஏ ரோட்டி (பத்தி)

கந்தன்கறுப்பன்கடம்ப னிடும்பன்
கரியனவன்தம்பி பெரியன் சின்னச்
சாத்தானவன்மகன் சொரியன்
குள்ள நரியன் (பத்தி)

சிரகச்சம்பாசிறுகருடன் சம்பா
சிறந்தமணக்கத்தை நட்டு கம்பு
சேரத்துவரையு மிட்டு உ
பயி ரிட்டு (பத்தி)

வசனம்.

இவ்விதமாய் ஏர்த்தொழில் புரிந்துக்கொண்டிருந்த நந்தனர் இனிமேல் சிதம்பரம்போவேன்போகாவிடில் பிராணனைவிடுவேன் அன்றியும்சேரியில் வரமாட்டேனென்று சொல்லிக்கொண்டு வேதியபால்சென்று தலைவணங்கிக் கரங்குவித்துமனந்துடித்துக்கண்டித்துச் சிதம்பரம்போக உத்தாரங் கேட்கிறார்.

விருத்தம்.

பொய்ச்சடலம் புழுக்கூடொன் பதுவாசற் றோற்பையைப் போற்றிசெய்யும், துச்சனிவ னென்றெண்ணித் தள்ளாமல்நன்னெறியைச் சொல்லவேணும், பச்சைமிகுந் தொடியழகிசிவகாமிமாதுபங்கன் பாதங்காண, இச்சைமிகுந் திருக்குறைதயே அம்பலத்தைக் கண்டுகளித் திறைஞ்சுவேனே.

இராகம்-சாவேரி-ரூபகதாளம்.

பல்லவி.

பொன்னம்பலவாண னடிதொழுவா ரொருவரன்றிப்
பிறவிக்கடலிடையில் கிடந்தழுவார்

அநுபல்லவி.

இன்னம்பலதெய்வங்களு மிருக்குதெனக்கிவர்போலவே
யில்லைதயவில்லைரைமையிடத்தி லிருந்தருள்செய்திடும் (பொன்)

சரணங்கள்.

வேதமொருநான்குமறியாதபழம்பொருளாகினும்
வேண்டும்பதஞ்சலிக்காகவே தில்லைப்பதிவந்து
பாதச்சிலம்பசை மணிகுலுங்கப்பிறையிலங்க
பணிபடமாடவேசடையாடவேபரமானந்தக்கூத்தாடிய (பொ)

உலகந்தனில்ககன மதுபோலெங்கினும்பரிபூரண
முருவற்றதுமருவற்றது குறையற்றிடுஞ்செல்வங்
கலியற்றவர் மதமற்றவர் விடையத்தனி லுருவற்றிட
கலைகற்றவர்வலியக்கவரிதை யத்தினில்நடனமாடிய (பொன்)

இருவுபகல்கருமங்க ளிழுக்கும்பொறிகணங்களதை
இழுத்துவசப்படுத்தும் வகையெனக்குத்தெரியாது
பரவிவரும்ராகாதிற்சரமடங்கி மனதொடுங்கிவழி
பார்க்குமிடமார்க்குமரிதாக்கும்பாலகிருஷ்ணன்தொழும்(பொ)

வசனம்.

இவ்வகையாய்ச் சொல்லும் நந்தனரைப் பார்த்து வேதியர் சொல்லுகிறார்.

சுலோகம்.

மெள்ளம்பேசிடுமழுகிறுயனு தினமூடாவுனக்கித்தனை
கள்ளக்கும்பிடலாவதென்னபலனே காட்டுப்பசாசல்லவோ
துள்ளித்துள்ளிதுடிக்கிறாய்சிவபதஞ்சொல்லாதுன்சாதியில்
எள்ளுக்கொல்லையில்மாடுவந் தொடாராதேரும்படிச்செல்லடா.

வசனம்.

இப்படிச்சொல்லிவேதியருடனே நந்தனர் தனக்குத்தெரிந்த வித்தைகளை அந்தருணத்தில் சொல்லிக்காட்டுவார்.

முன் நந்தனர் வேதியர் இருவோருமாகச
சொல்லிக் கொள்ளும்

எட்டிக்குப்போட்டியான இருச்சொல் அலங்காரம்.

நந்தனர். தில்லையைப்பார்க்க வல்லையோ வென்றார்
வேதியர். கொல்லையில்முளகா யில்லையோ வென்றார்
நந்தனர். கள்ளம்போனு லுள்ளதுகாணும் மென்றார்
வேதியர். வெள்ளம்போனு லுள்ளதுவிளையு மென்றார்
நந்தனர். திருச்சிற்றம்பலங்கண்டால் தேகங்களிக்கு மென்றார்
வேதியர். பொரிச்சகுழம்புகொண்டால் தேகம்பெருக்குமென்றார்
நந்தனர். அரகராவென்றால் பாவம்போ மென்றார்
வேதியர். பறையனைக்கண்டால் பாவமா மென்றார்
நந்தனர். வெட்டவெளியிலே மனமுட்டிப்பாரு மென்றார்
வேதியர். பொட்டவெளியிலே குழிவெட்டிப்பாரு மென்றார்
நந்தனர். எனக்குஊறியஞான மாரியைமதி மென்றார்
வேதியர். உனக்குநாறியபறையர் சேரியேகதி யென்றார்
நந்தனர். கத்தாவேயென்னுள்ளம் பெற்று ரென்றார்
வேதியர். கத்தாழையக்கினியிலே பற்று தென்றார்
நந்தனர். மறையோருக்கெப்போதும் வாயிலேதர்க்க மென்றா
வேதியர். பறையருக்கெப்போதும் சேரியேசொர்க்க மென்றார்
நந்தனர். கொள்ளியத்தேள்போலென்னைக்கொட்டாதேயென்றார்
வேதியர். அள்ளித்தந்தேனென்னைத் தட்டாதே யெனறார்
நந்தனர். கடுமையாய்வந்து கவலைப்படுத்துவதே னென்றார்
வேதியர். அடிமையாய்வந்து அவலப்படுத்துவதே னென்றார்
நந்தனர். தில்லையோடுன்னைச் சேரேனே வென்றார்
வேதியர். எல்லையோடுன்னைப் பாரேனே வென்றார்
நந்தனர். திருவாதிரைவருகுது போவேனே யென்றார்
வேதியர். மருவாதிருபறையா போகாதே யென்றார்
நந்தனர். தெரியாதேமெள்ளப் போவேனே யென்றார்
வேதியர். மரியாதையல்லப் போகாதே யென்றார்
நந்தனர். ஆணையைவிட்டு வழிகாட்டும் பெரியோரே யென்றார்

வேதியர். பிராணியைவெட்டும் பழிகாட்டும்புலையரே யென்றார்
நந்தனார். ஆடிப்பாடிப் படிப்பே னென்றார்
வேதியர். தேடித்தேடி பிடிப்பே னென்றார்
நந்தனார். தில்லையிலேகலங்காமல் நாடுவே னென்றார்
வேதியர். கொல்லையிலேலிங்காகப் போடுவே னென்றார்
நந்தனார். சிந்தைநொந்து தவிப்பேனே யென்றார்
வேதியர். வந்துவந்து அலப்பாதே யென்றார்
நந்தனார். கெஞ்சினால்நெஞ்சு முருகாதோ வென்றார்
வேதியர். அஞ்சினால்பஞ்சம் வருகாதே வென்றார்
நந்தனார். சிதம்பரம்போக வுத்தாரந்தாரு மென்றார்
வேதியர். இதம்பெறலாமோ கத்தாதேபோது மென்றார்
நந்தனார். சீக்கிரமாய்ப்போவே னென்றார்
வேதியர். போக்கிரியாய்ப் போவா யென்றார்
நந்தனார். அன்னீதஞ் செய்யே னென்றார்
வேதியர். சொன்னது தவறே னென்றார்
நந்தனார். எங்கள்சாதிக்கு என்னவழி யென்றார்
வேதியர். உங்கள்சாதிக்கு இந்தவழி யென்றார்
நந்தனார். உற்றதுஓது மென்றார்
வேதியர். பெற்றதுபோது மென்றார்
நந்தனார். பறையனாய்ப்பிறந்ததேன் தலையெழுத்து வென்றார்
வேதியர். மறையராய்ப்பிறந்துங்கள் வருத்தமது வென்றார்
நந்தனார். வாய்க்காதவெனக்கு வழிசொல்லு வீரே
வேதியர். காய்க்காதமரத்தில் கல்லெறி யாரே
நந்தனார். எப்போதுமிப்படிச் செய்ததே னென்றார்
வேதியர். அப்போதுமிப்படிச் செய்ததே னென்றார்
நந்தனார். உலகமனைத்துங் கடவுளாய்நிறைந்ததே னென்றார்
வேதியர். பலகலைகற்றும் பறையனாய்ப்பிறந்ததே னென்றார்
நந்தனார். பழுதானசென்மம் படைத்தேனே னென்றார்
வேதியர். அழுதாலுங்கன்ம மடுக்காதோ வென்றார்
நந்தனார். காப்பதுன்பாரம் கட்டுவிடு மென்றார்
வேதியர். நாற்பதுவேலியை நட்டுவிடு மென்றார்
நந்தனார். அப்பன்கருணை யிப்படியோ வென்றார்
வேதியர். தப்பினேனதுவு மொப்பிலே னென்றார்

வசனம்.

இப்போது நந்தனார் மெத்தவும் ஐயரைவணங்கி உத்தரவுகேட்கிறார்.

விருத்தம்.

அல்லலுங் குழலான் மோக மண்டாது வொருக்காற் றொண்டர்
பல்லாயி காலஞ் செய்த பழவினைத் தொடக்க றுத்துச்
சொல்லினு மடங்கொ ணாதச் சுகக்கட லாட்டிவைக்குந்
தில்லைநா யகனைக் கண்டு தெரிசனஞ் செய்வே னென்றார்.

இராகம்-பியாகு-ஆதிதாளம்.

கண்ணிகள்.

மார்கழிமாதத்திருவாதிரைநாள் வரப்போகுதையே [லையே
மனதைப்புண்ணாகப்பண்ணமலொருதரம்போய்வாவென்றுசொல்
கட்டையிருக்கையிற் சிதம்பரம்போய்நான் காணவேணுமையே
கசடனாகிலுமாசைவிளையுதுன் காலுக்குக்கும்பிடையே
காலில்நகமுளைத்தநாள்முதலாயுமக் கடுமைக்காரனையோ
காலபாசத்திற்காட்டிக்கொடாமற் காப்பாற்றிடுமையே
உள்ளங்காலில்வெள்ளெலும்பாட வோடியுழைத்தேனையே
உண்டதுமுறங்கினதன்றியில்வேறே யொன்றுங்காணிலையே
எட்டுமிரண்டுமறியாதபேதை யெளியேனானையே
இன்னந்தாய்வயற்றிடையனுகாம லிடங்காட்டிடுமையே
வெள்ளைவெளுத்திடுந்தண்ணீர்குடித்திடும் வெறியனையே
மேதினியதனில்நாயினுங்கடையேன் வழிவிடவேணுமையே
தானந்தவங்களொன்றுங்காணு தடியேனானையே
தளரவிடவேண்டாமொருகோடி தருமமுண்டுமையே
அல்லும்பகலுமலங்களாதரவாலே ஆளாகினேனையே
அன்புடனேநல்ல கதிபெறுவாயென் றனுப்பவேணுமையே

விருத்தம்.

சிலைபணிந்திடும் வேளைநிந்திடச் செய்திடுந்திரு மேனியைக்
கலந்தணைந்திட வேண்டுங் காதலைக் கண்டிலரா யபிலமதனைத்
தலைசுமந்திடுஞ் சேடனார்த் தன்மைகொளும் நந்தனாரை
விலைக்குவாங்கிய பெருமையாளிவன் வேணதெல்லாம் பேசுவான்.

வசனம்.

இப்படி சிதம்பரம்போக உத்தாரங்கேட்க நந்தனாருடையசிவ பத்திப்பிரதாபத்தைக ஆதிசேடனாலுஞ்சொல்லவொண்ணுத மகிமை கொண்டமகாநுபாவனை அடிமைக்காரனென்று வேறுபடி பேசுவார்.

இராகம்-முகாரி-ஆதிதாளம்.

மாடுதின்னும்புலையாவுனக்கு மார்கழித்திருநாளோ
தேடியெடுத்ததாயாரிடத்தேபோய்த் தீண்டாதேபோடா
ஆடுதின்னும்புலையாவுனக்கு ஆணித்தெரிசனமோ
நாடுசிரிக்கும்வார்த்தைகளன்றோ நாடாதேபோடா
நண்டுக்குக்கலியாணம் மூளைநரிக்குச்சங்கராந்தி
பண்டிக்குப்பூசத்திருநாளுண்டோ பறையாநீபோடா
பூசைகள்செய்வாயோ ஆண்டவன் பொன்னடிதொழுவாயோ
கூச்சத்போடாதேபோடா கூழைக்கும்பிடலாகாதே
கங்கையிலாடுவையோ வங்கே காணிக்கைபோடுவையோ
இங்கிதமறிவேனடிக்கடிவந்து இறையாதேபோடா
அஞ்செழுத்தோதுவையோ உனக்குமானந்தத்திருக்கூத்தோ
வஞ்சகவார்த்தைநாளைத்தெரியும் வாராதேபோடா

வசனம்.

அடாநந்தா சபாசு நன்றாயிருக்கின்றது நீசிதம்பரம் போக வேண்டுமென்று கேட்பதை ஆலோசித்தால் மிகுந்த ஆச்சரியமாயிருக்கின்றதென்று வேதியர்பின்னுஞ் சொல்லுகிறார்.

இராகம்-மோகனம்-ஆதிதாளம்.

பல்லவி.

அடடாநந்தனே தில்லைக்கனுப்புமென்றனைக்கேட்ப
தாச்சரியமிகவாச்சரியம்

அநுபல்லவி.

அடடாகட்டுக்கதைகளைத்துமிங் குதவாது
நடடாவயலைத்தேடி நடவுநட விப்போது (அட)

சரணங்கள்.

ஈனசாதியிற் பிறந்தோ னுனக் கவிடத்தி
லென்ன அலுவ லுண்டு அல்லவென்று
போனபோதிலு மூவாயிரவரிருக்கும்வீதி
புகுந்து நீகடந்துக் கொண்டு
மானுமழுவுஞ்சிர மாலையணிந்த வரு
மாற்றலர்திரிபுர மதனையெரித்த பெரு
மானுக்கியலுந்திரு மஞ்சனோற்சவந் திரு
வாதிரைப்பலன்பெற மாட்டாய்சொற்படியிரு (அட)

வேலிகளொருபுறம் வேதியர்களியற்று
 மேன்மைகள்மிகத் தங்கும் அந்தத்
தாழ்மையிலாத திவ்யத்தலம்போய்வருவதற்குத்
 தடையில்லையெனப் பொங்கும்
தன்மையிதெல்லாங் கனவாகமுடிய வரும்
 சாதியிழிவையோ சித்தாலேதெரிய வரும்
பன்னிப்பன்னிப்படித்தேன் பரவாற்றுமே வரும்
 பட்டால்தெரியும் பறையனுக்கென்பதுபோல்வரும் (அ-)

அல்லும்பகலுஞ்சோ றளித்துக்காத்திடுந்தெய்வ
 மானவம்பல வாணன் இங்கிருக்க
தொல்லைப்படவோவேண்டா மென்றுரைத்திடுமென்
 சொல்மறந்தநீ வீணன்
தில்லுந்திரியாவரப்பேச்சேதுக்கடா பிடித்
 திருக்குமெனது பிடிதிரும்பாதடா பகடி
பல்லையொடித்து விடுகிறேன்பாரடா தகடி
 பஞ்சைநீயாசமர்த்துப் பார்ப்போனெடடா தடி (அட)

வசனம்.

வேதியர் சொல்லிய சொற்களைக்கேட்ட நந்தனர் நீங்களென்னைத் தடியாலடித்தாலும் பிராணனை மடித்தாலும் கழுத்தை யொடித்தாலும் சிதம்பரத்தில் நடித்தானைக்காணும விருக்கேனென்று கடுத்துச்சொல்ல வேதியருக்குக் கோபம்பிறந்து வாய்த்திறந்து சொல்லுவார்.

இராகம்-சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.

இனியுன்குற்றத்தைப்பொறுப்பேனோ அனுவள
 வேனுஞ்சம்மதிப் பேனோ

அநுபல்லவி.

தனியாம்வேதசாஸ்திரந் தனையுணர்ந்தாலுஞ் சாத்
 தன்புத்திப்போகாதென்ற சரித்திரம்பொய்யல்ல நீதி (இ)

சரணங்கள்.

பலகாலமும்பழமும் பாலூட்டினாலும் பாம்பு
 பழகாததற்குவெப்பாய்ப் பகரலாகுமே வேம்பு
தலம்விட்டப்புறம்போ நீதான்செயயாதடா வீம்பு
 தரையிற்கறந்தபாலுந் தாவுமோமுலைக் காம்பு (இ)

இடையிலிருக்குமிந்த இடும்பன் கடம்பன் — சரி
இவர்களெல்லாமலிதோ யிருப்போர்கள்சிறு — நரி
கடையிலிருப்பேன்பறை நல்லவனாகுந் — தெரி
நானுனைச்சேர்ப்பேனென்று நம்பாதேபரி — கரி (இ)

வசனம்.

என்றுசொல்லிய வேதியர்க்குநந்தனார்மிகுந்ததாழ்மையோடு மேழ்மையோடுஞ் சொல்ல வேதியருக்குக் கோபம்வந்து திருட்டு வேடங்கொண்ட முறட்டுப்பயலே யென்றுமறுபடியுஞ் சொல்லுகி றார்.

இராகம்-அசாவேரி-ஆதிதாளம்.

பல்லவி.

திருட்டுத்தனமாத்திரம்வேண்டாம்-நந்தா-அடா வுனக்கு
திருட்டுத்தனமாத்திரம்வேண்டாம்-நந்தா.

அநுபல்லவி.

முரட்டுதனமாய்ப்பேசாதே நீர் — மூடா
முன்னும்பின்னும்மறியாக்குடி — கேடா
வரட்டுதவளைப்போல்வாயாடாதே — போடா
வயலைமுழுதுஞ்சீர்படுத்திடப் — போடா (திருட்)

சரணங்கள்.

புத்தியுள்ளவனாகப் — பாரு-ஏற்கொண்டுழுது
புஞ்சைநிலமுழுதுஞ் — சீரு-செய்துவிதைத்து
வைத்திடனம்போற்குடி — யாரு-இருப்பார்களுன்
னைத்துதிப்பார்சகல — பேரும்
சத்தியமாக்குட்டைகளை நீ — கட்டி
சார்ந்ததற்குவாயாநீர் — ஓட்டி
சத்தியுள்ளமட்டுக்குமே — ரோட்டி
தக்கவுன்றன் றிறமது மிகக் — காட்டி
மற்றுமற்றனைத் தனைத்துமுடிவுற
மெத்தமெத்தசித்த மொத்துசெய்குவாய் (திருட்)

பட்டாக்குனக்கேதடா — பாவி-என்சொந்தமாக
பழனஞ்சருமீகேடாத் — தேவி-பூசைபுரிந்து
பொட்டெடாப்பதப்பணிந்து — சேவி-இமைதமதந்தால்

போக்குவேனையுன்னிட ஆவி
சட்டமாகவுன் சமர்த்தைக் காட்டாதே
சரணமென்றுகண்ணளிரா வோட்டாதே
தட்டுவனைசைபிஞ்சி நீட்டாதே
சலப்புக்கஞ்சிகரியோட மாட்டாதே
விட்டுவிட்டுவிட்டுவிட்டு விடுவிடு
கெட்டுகெட்டுகெட்டுகெட்டு போகாதே(திருட்)

பாயுஞ்சலமுழுதஞ் கட்டி-பதனமாகப்
பழையவெருவெடுத்துக் கொட்டி-சேறுபோலாட்டி
தோயும்கடமுதலோ ரட்டி-வராமற்செய்து
சொன்னலனுப்புவேனே பட்டி
காயமுள்ளபோதேநீதா னடா
கத்தன்றன்னைக்காணப்போவா னடா
எய்த்துவிட்டுப்போகப்போரா யடா
யெத்திதிருவாதிசைக்கனுப்பேனே நடா
ராயன்ராயன்ராயன்ராயன் சாட்சியாய
தியன்தியன்தியன்தியன் உன்னைவிடேன் (திருட்)

வசனம்.

இதுவும்வேதியர் சொல்லுகிறார்.

விருத்தம்.

வானிருந்தவிடந்தேடிக் காணுமல் மாதவத்தோர் மதிமயங்கத்
தேனிருந்த செந்தாளைச் சிந்திப்பார் யுந்தியுரத் தெளிந்தா ரில்லை
யூனிருந்தும் புலையாநீ சிதம்பரத்தைச் சென்றுலுமுண்டோமுத்தி
தானிருந்த விடம்விட்டுப் போகாமல் சஞ்சலத்தைத தள்ளுவாயே.

வசனம்.

அடா வாடாமூடா கேளடா என்னைப்போ லொத்தபெரியவர்களாலே கூடத்தேடி அறியப்படாத ஜெகதீசனுடைய திவ்வியசாமத்தை நதத்தையுறிஞ்சும் பறையாநீ கத்திக்குலைக்கலாமா, இப்படித்திக்குதிக்கலாமா, வித்தையொன்று மறியாதவனிக்கே பத்தியெண்ணலாமா, நத்திமுத்தி தேடலாமா, சுத்தமான பெரியோர்களிடத்தே சத்தம்போடலாமா, இங்கே நித்தம்காடலாமா. வியர்த்தமான இந்த சென்மமெடுத்துஞ் சித்திதேடலாமா, இங்கே புத்தி சொல்லலாமா, அடா இதுவெல்லாம் விட்டுவிடடா, காத்தைப் பிடுங்கி நடடா, உன் தொழிலைத் தேடடா, தோல் கட்டிய தடிபைபெ

டடா, யாருந்திருடாமல் பார்த்திருடா களத்தில் படுடா, காவல் கொடுடா, புல்லறுடா, மூடா வழிதெரியாக்குருடா, நான்சொல் வது கேரடா, இகடா, உன்செய்கையென்று கல்லாலெறிந்து தடி யாலடித்துவசவால் திட்டி தேள்போலே கொட்டி இவனொரு ஆள் போலேநின்றான், அவர் நாள் போகுதேயென்றார்.

வசனம்.

நந்தனார் வேதியரைப் பார்த்து நீங்களென்னையடிக்கலாம் நா னும் அடிபடலாம் தங்களுக்குக் கைநோகுமென்று சொல்லுவார்.

தெண்டகம்-ஆதிதாளம்.

அடித்ததுபோதுமையே-என்னை
அடித்ததுபோதுமையே
அடித்தாலுமுங்கள் கைவலி யாதோ
அடிமைவேலைசெய்யு மென்னுடன் வாதோ
படித்ததெல்லாமென்மனதிற் படாதோ
பாவியெனக்கினிமேற்றேறி யாதோ (அடித்)
நல்லவரேயுங்கள் மனதுப்பிர காரம்
நடக்காமலிருந்ததுவப சாரம்
சொல்லத்தெரியுமோ எனக்குப சாரம்
சுகுர்தசாலியுங்காளேலிந் நேரம் (அடித்)

வசனம்.

நந்தனார் ஐயரைத் தலைவணங்கிச் சொல்லுவார்.

கீர்த்தனம்-மோகனராகம்-ரூபகதாளம்.

கண்ணிகள்.

இலவுகாத்தகிள்ளை யாச்சே நான்
எடுத்துச்சொன்னதெல்லா போச்சே
பறையன்சொல்லம்பலு தாச்சே-நீங்கள்
பார்ப்பாரென்பதுமே லாச்சே
ஏழைசொல்லம்பல மாச்சே-தெய்வ
மில்லாமலெங்கையோ போச்சே
சேரியசொர்க்கமென் றாச்சே-இல்லைச்
சிதம்பரமென்பது போச்சே
விறுக்கிறைத்தாப்போ லாச்சே-எந்தன்
வேண்டுதல்வீணாய்ப் போச்சே

கண்டதைக்கண்டிட காலம்பிறக்காமல் — லாச்சே-சல்ல போச்சே

வசனம்.

நந்தனார் பெரியோர்கள் கோபத்தைதளியேன்தாங்கேனென்று சொல்லுவார்.

இராகம்-லாவணி-ஆதிதாளம்.

பெரியோர்சினமடையாரடைந்தாற் பெருங்கடல்தீயாதோ
பேயன்தாங்குவேனோஇம்மாத்திரம் பிழைபொருத்தாளுமையே
அல்லும்பகலும்நானதிந்துமேதோ வழியாமலேபோனேன்
ஆசைகொண்டேன்திருவம்பலத்தெய்வம் மோசஞ்செய்யுதையே
யாவியெனைத்தொடர்ந்தடித்தாலுமென்றன் பாழ்வினைதீராதோ
பார்தனில்பேர்சொல்லாதவனென்றே படைத்ததுபோதாதோ
சிக்கம்புசித்திடுமிறைஞ்சியைவேறொரு செந்நாய்தொடலாமோ
சிதம்பரம்நான்தொடலாமோசாதியில் சின்னவனன்றோ
இன்னமுஞ்சிதம்பரம்போவேனென்று இங்ஙனேவருவேனோ
இம்மட்டும்போதுமையே உங்கள்தய விருந்தாலதுபோதும்

விருத்தம்.

சேரிவந்தவர் செவ்விய வேதியன் சினத்தால்
காருகளடர்ந் திடுஞ் சோலையி னின்றவன் கருத்தை
எருலாவிய பாமணற் ருண்மல ரிருக்கி
தீரனுகிய நந்தனு மிப்படி செய்தான்.

வசனம்.

நங்கனையருக்கு தலைவணங்கிபெரியகும்பிடுபோட்டு ஒருசோலையிலிருந்து சமாதிபண்ணுவார். தன்னுடைய சரீரத்தை தில்லைவெளியிலே கலந்துகொள்வேனென்று வைராக்கியபட்டத்துடனே சேரியில் வராமல்தானேயிருந்தார். தன்னுடையதுயரங்களையெல்லாம் அம்பலவாணருக்கே ஒப்பிவித்துச் சலுகைகொண்டாடுவார்.

விருத்தம்.

வேதியரிப்படிசொல்ல வெந்துமனம் வேறுகி வினையோவென்று
சாதியிலே பாவமிது நீயன்றோ பிறப்பித்தாய் சுவாமியென்னை
சோதனையோ செய்கின்றா யெவ்வுயிர்க்குமவ்வுயிராய்த்தோய்ந்திருக்கும், அதிகுருவலவோ நீபார்ப்பானுக்குள்ளிருந்துமறைப்புவிரோ,

இராகம்-சௌராஷ்டிரம்-ஆதிதாளம்.

பல்லவி.

ஐயாவுன்னடக்கலம் பொய்யாகிபதேகமடைக்கலம் (ஐயா)
அத்தாநான்வருவேனோ அம்பலத்தைபாரவேனோ
சத்ரேயாகிலுங்காண்பேனோசந்நிதியைநான்என்னசெய்வேன் .ஐயா

விருத்தம்.

தாறில் லாதவிப் பிறவியைத் தாளெடுத்தஞ்சி
நாறு பட்டனற் கீழ்க்குல மாகித்துன்பம்
நீறுபட்டிடு மல்லவோ தில்லையி னின்றால்
பேறுபெற்றிடு வேனதற் கும்மொரு பிசகோ.

இராகம்-எதுகுலகாம்போதி-திரிபுடைதாளம்.

பல்லவி.

ஐயாதெய்வமேயிந்தவையர்க்கடிமையானேன்
செய்யாவினை செய்தல்லவோ
உள்ளங்கரைந்துருகி உய்யும்படியாய்க்கேட்கில்
கள்ளருக்குமானல்லவோ
ஆலைக்கரும்பதுபோ லாச்சுதங்கமுழுதும்
வேலைக்கிடமுமில்லையே
பாவியெனக்கோவந்த பாப்பான்மனதிரங்காண்
ஆவிதவிக்கு தல்லவோ
கோவில்கும்பத்தைக்கண்டால் கோடிவினைகள்தீரும்
பாவிக்குக் கிடையாதுகாண்
தில்லையம்பலவாண தெய்வம்புலையர்க்காகக்
கல்லாச்சமைய லாச்சுதோ
பொன்னம்பலவாவுன்னைப் போற்றும்வகையில்லாமல்
இன்னப்பிறவி யேறுமோ
அன்னைதந்தையும்நீயென் னுவிபொருளும்நீயுன்
சன்னிதிவரச் செய்வையோ.

விருத்தம்.

அடிமுடி யொன்று மில்லா தம்பலத்தரசே யுன்பால்
கொடியனுன் வந்தாலென்ன குறையுமோ வதனால்நீதி
நடலைசெய் பார்ப்பான்கையில் நடுங்கவோ விடுத்தாயென்றும்
படிமிசை வீழ்ந்தாறுடி பதறுவான் கதறுவானே.

இராகம்-லாவணி-யமுனாகல்யாணி.

பல்லவி.

செப்புமுபாயமறியேனறியேன்
ஆகாசிவனே தில்லைச்சிவனே

பத்துவருஷகாலமாகவந்து
பாப்பானைக்கேட்டேன்
சித்தமிரங்கிபோய்வாவென்றொருநல்ல
சேதிசொல்லகாணேனையோ (செய்பு)

பாவிப்புலையனாய்ப்பிறப்பேனோ
இந்தபாரினிலிருப்பேனோ
ஆவிதவிக்குதேபொன்னம்பலவாவுன்
னடிக்கமலங்காணேனையோ (செய்பு)

பல்லுமுளைத்த நாள்முதலாய்
இந்தப் பாடுபடுவேனோ
தில்லைநாயகா கனகாவென்றனைத்
தேடும்வகைகாணேனையோ (செய்பு)

நாற்பதுவேலிநிலமிருக்கிறதை
நடுவேணுமென்றார்
நாப்பதாருகளை பிடுங்குவதாரென்று
கடுகடுத்தபெச்சுக்கடியேன் (செய்பு)

ஆற்றிலேகுளத்திலேவிழுவேனென்
றுவதைப்பிடித்திழுத்திடுவேன்
பார்த்தினிக்கிருபைசெய்யாவிடிற்பறையன்
பழிவிண்போகாதுசொன்னேன் (செய்பு)

தில்லைசிதம்பரத்தைக்காணாவிடிலென்
தேகந்தெரியாது
சொல்லிவிட்டேன் பொன்னம்பலவாவுன்
சொர்ணசபைக்குவருவேனோநான் (செய்பு)

விருத்தம்.

கடுவருந்தியும் பணிகல னாகவுங் கற்றைச்
சடிலமேவிய பிறைபுனை தரிக்கவுந் தகுமோ
விடுவதில்லையுன் வாருவினிற் றன்றொரு வேங்கைக்
கோடியன் வாதனி னெல்லை தில்லையிற் குறையோ

இதுவுமது.

மாவளர்தில்லை மாநகர் வீதியு மதிகளும்
கோவி லுந்திருக் கூட்டமுங் கண்டுகண் குளிரப்
பாவி யாகினேன் காயத்தை யெதுக் குப் படைத்தே
னாவி தானிருந் தும்பர கதியடைந்திலனே.

இதுவுமது.

ஆதி நாண்முதற் றவம்பெறு மாமுனிக் காக
நாத மோங்கவே நாடகம் புரிந்திடு நாதன்
பாதம்போற்றியென் னோமும் பாவியா னந்தன்
ஏதந் தீரவே கனவிலு மீசனு மிருந்தார்.

வசனம்.

தில்லை தலத்தைக் காணாத ஜென்ம மிருந்தாலென்ன போனாலென்னவென்று நிச்சயம்பண்ணி மனதுருகி வாடும்வேளையில்கொஞ்சம் நித்திரைபோலேகண்டது அந்தநித்திரையில் அம்பலத்தேவன் வந்துசொல்லுவார்.

இராகம்-எதுகுலகாம்போதி-ஆதிதாளம்.

பல்லவி.

கனவினில்கண்டாரே-நந்தனார்-கனவினில்கண்டாரே

அநுபல்லவி.

மனதிலெப்போதும் வருந்தியடிபணியும்
கனகசபேசனைக் கண்ணினாற்காணாமல் (கனவி)

சரணங்கள்.

நீகடுங்கழனிகள் நாடச்சொன்னேன்
ஊனமில்லாமலுன் னுடையவன்களிக்க
மானிடப்பிறவியி லுனக்கிணையார்பத்தி
மானில்லையெனத்தில்லை நாதன்வந்துரைக்க (கனவி)
கந்துல்பகலாய் களித்தநின்னருளாற்
சங்கரனேயென்று சாருநன்னிலைபால்
அங்கம்புளகித மாச்சுதா அதனு
மிங்கேவந்தேனென்று யீசனும்புகல (கனவி)

விருத்தம்.

அறிவுமிகுந் தாற்றலுடன் சிவபெருமாள் பெயர்சொல்லி யாற்றுநாளில், கறைமருவுமிடாமுகன் றனதடிமைவெறியகலக் கனவில் வந்து, குறையரவே கழனிகளை நடச்சொன்னேனுனக்குவிடை கொடுக்கேனென்ற, மறையோனு மவர்க்குரைத்து நீ விரைந்துவா வென்று மனதுட் சென்றார்.

நந்தனர் கனவில் நடேசமூர்த்திசொன்ன

வசனம்.

நம்முடைய நந்தனரே உன்னிட கழனிகளை நமது பூதகணங்களாலே நடச்சொன்னோம் வேதியருக்குக்காட்டினல்லுத்தாரங்கொடுப்பாரென்று சொல்லி தான் அம்பலத்தேசென்றார்.

நந்தனர் வயல்களைக்கண்டு சந்தோஷமடைவார்.

கண்ணிகள்.

களையெடாமல் கதிரொருமுழங்காணுமாம்
களிக்குதுபயிரிருக்குது அதைக் கட்டுகட்டவேதோணுமாம்
பழுதிலாமலேரிகுளங்கள் பள்ளமேடுதண்ணியாம்
பரமசிவனைப்பணியுநந்தனர் பயிரிடுந்திருப்பண்ணையாம்
கனவில்வந்தருவமாகி கருணைமாரிகண்டனன்
கடுகிநடந்துவேதியரிடங் காணவென்றுசென்றனன்

விருத்தம்.

அய்யரே வாருமென்று அழைத்திடும் நந்தனரைத்
துய்யவே தியருங் கண்டு தொல்புவித் தெய்வமெல்லாம்
பொய்யிது வென்று தள்ளிம் புலையனும் வந்தா னென்று
செய்யவேண்டியது செய்யச் செப்புவா னெப்புவானே.

வேதியர் சொல்லுகிறார்.

பலவித இராகம் சேர்ந்த கீர்த்தனம்-இ-ம்-வராளி-ஆதிதாளம்.

பல்லவி.

நந்தா-வுனக்கிந்தமதி-வந்ததென்ன-தந்ததாரு

அநுபல்லவி.

அந்தரங்குஞ்சொந்தமா யிருந்ததுமறந்துபோய்
விந்தையாய்-நினைந்தன்றோ அந்தவேளை புத்தியில்லை (நந்தா)

சரணங்கள்.

தோடி.

சொல்லைகாட்டுநரிபோல பலகைகாட்டிப்பேசலாய்
கல்லைக்காட்டிகோபங்கொண்டு சொல்லைகாட்டியேசுவேன்
இல்லையென்றுசொன்னதெல்லா மில்லையென்றுபோசுதா
சல்லையென்றுஜுபர்சொன்ன சொலசிமாச்சுதா

சித்தமுந்தெளிந்ததா உத்தமுணர்ந்ததா
பத்தியுந்துலைந்ததா கத்தனுமபறந்ததா
சட்டம்-சட்டம்-நல்லது-நல்லது மெத்த-மெத்த-சந்தோஷம்

மத்தியமாவதி.

இப்படிஅப்படிசொல்லாதே தப்பெடுத்தடிப்பையா
சொற்படியொப்புதலாகநீ மெய்ப்படிநடப்பையா
கள்ளக்கும்பிடுதள்ளடா காரிடங்கைகொள்ளடா
எள்ளுகொள்ளைகாரடா எங்குஞ்சுற்றிபாரடா
தெய்வமென்பதுகுற்றம் தெளிந்துபாருசுற்றம்
கையைகொட்டுசத்தம் கண்டுகொள்சித்தம்
ஊனுறக்கமேயின்பம் ஊணிழந்தாலேதுன்பம்
சாண்வயிறுக்குஅன்பு சாதிமுறைமைவம்பு
ஓகோ-கோ-பலே-பலே சபாசு-கண்டு-கொண்டாய்

கேதாரகௌளம்.

சூதாடிதோற்றவன்போய் வாதாடிநிற்பதற்கு
வேதாந்தசாஸ்திரங்கள் காதாலேகேட்டிருந்தும்
என்னகாரியம் அதிலென்ன வீரியம்-தள்ளு-தள்ளு

புன்னாகவராளி.

தில்லையென்பதுகாட்டிலுண்டு கேட்டதில்லையா
தேகம்பட்டால்புண்ணாகும் பார்த்ததில்லையா
அம்பலமாவது ஆகாசமுற்றுப்பாரு
அருளில்லைபொருளில்லை கண்டுசேரு
பத்தியென்றுஞ்சித்தியென்றும் வெத்தியென்றும்முத்தியென்றும்
இத்தனைநாள்கற்றதலே அத்தனையும்பித்தமாச்சு
மாறுபாட்டுக்காரன்வார்த்தை கூறுபடுமோ
தாறுமாறுபேசினதால் சோறுபோடுமோ

நாதநாமக்கிரியை.

எல்லாமுழுப்புரட்டு வல்லான்வகுத்தவழி
சொல்லாதேசும்மா நில்லாதே
கரியத்தைபாரடா உனக்கிணையாரடா
காசுபணஞ்சேரடா இதுநல்லூரடா

மாஞ்சை.

கஞ்சிகூழ்குடித்தாலும் பஞ்சமில்லையே
கொஞ்சமிருந்தாலும்போம் சஞ்சலமென்ன

மத்தியமாவதி

சம்பாநெல்லிருக்குனக்குத்தாரேன் ஒற்றைச்
சல்லாகிழுத்துனக்குத்தாரேன் ஒத்தை
கண்டாங்கிசேலையொன்று துண்டாய்கிடக்குதந்தன்
பெண்டாட்டிக்குக்கொடுத்து நன்றாய்சுகமாயிரு

புன்னாகவராளி

துண்டுவெட்டிப்பாக்குதின்று அண்டைவெட்டிபேர்த்தையா
கண்டனடிக்கட்டளையில் மூண்டிருக்குபார்த்தையா

மோகனம்.

காணியில்லாதவனொரு மாணியில்லாதவன்போலே
தோணிநானும்தோணாது சோணிநடந்தாலுமென்ன
பெண்டாட்டியில்லாச் சுகமில்லவோமனங்
கொண்டாட்டங்கொள்ளா துதைச்சொல்லவோ

ஆரபி.

எருவிட்டுழுதவயல் மறுவெட்டுதேவையில்லை
எதுவெட்டினாலுந்தாங்குங் கருவிட்டுப்பாக்கவேணுந்துரையே
நிலம்பாராதபேர்வட்குப் புரையேயிதுவல்லாமல்
வேறேயுண்டாயிறையேஇந்தவூ நக்குளிதுநல்லவிரையே
அப்பப்பா-இகத்திற்கு

அசாவேரி.

மூலைக்கால்விளைந்தாலும் சேலைக்குத்தானும்
உடனதாகூலிக்குத்தானும் குழந்தைபாலுக்குக்காணுமல்லவோ
கூருக்குளிந்தநிலைஞ்சப்பையே நீவாரிவிடவேணுமிந்தகருப்பையே

சாவேரி.

வாரிக்காலைச்சுற்றிப்பாரு கோரையைபிடுங்கிநம
தேரியைவுழுகச்சொல்லு வீரியைநடுகச்சொல்லு
செட்டியார்குளத்தருகே முட்டிருக்குப்பேர்த்தையா
வெட்டியானகத்தருகே திட்டிருக்குப்பார்த்தையா

புன்னாகவராளி

எல்லாமுனதுபொருப் பெல்லாமுனதுகசு
பல்லாமல்வேறேகதி இல்லை இல்லை
கட்டியடிக்கட்டளையில் விட்டதுமுளைத்ததா
பொட்டைத்திடல்குட்டையிலே நட்டதுபலித்ததா
காடுவெட்டிநஞ்சைபண்ணு மாடுகட்டிவைக்கோல்போடு
பாடுபட்டுசெய்தானென்று வீடுகட்டிவாழலாம் (நந்தா)

வசனம்.

இப்படிச்சொல்லும்வேதியரை பண்ணையைப்பார்க்க வாருமெ
ன்று நந்தனார் கூப்பிடுவார்.

விருத்தம்.

பண்ணை யாவையும் பாருமென் றழைத்திடப் பரிந்து
கண்ணு லாவிய வேதியன் களிப்புற நந்தன்
கண்ணு லாவும்பொன் னம்பலக் கூத்தனைப் பரவி
எண்ணி லாவருங் காதல் கொண்டிருந்தனர் தாமே.

வசனம்.

சேவலமாகிய நீசன் சிவகணங்களாலே ஒரு ராத்திரியில்நடவு
நட்டு அறுப்பறுக்கும் வயலை வேதியர்கண்டு ஒன்றுந்தோன்றமல்
உலகவாசனையற்று நின்றார்.

வசனம்.

நந்தனார் அம்பலவாணனைக் கொண்டாடிக் கூத்தாடுவார்

கடுக்கா.

நந்தனா னந்தபரிதமானார்
நந்தனாரும் ஆனந்தமாகினார்
சொந்தமானவயல் வந்துபார்க்கையில்
விந்தையாச்சுபல பந்தம்போச்சுது
சிந்தைதீரவே யந்தரங்கத்திலே (நந்தனார்)
நீசச்சாதியென்று பேசிப்பேசுமிந்த
தோஷிவேதியனு மாசையாகவே
தேசமெற்றுந்தில்லை வாசமாகுமட
ராஜமூர்த்திக்கு தாசனென்றுவரும் (நந்தனார்)
வாரும்வாருமிதைப் பாரும்பாருஞ்சிவ
னுரேவந்துசெய்யுங் காரியங்களிது
பாரின்மீதிலினை யாருமில்லையென்
றாரிலுள்ளபெரியோருஞ்சொல்லச்சொல்ல (நந்தனார்)
சித்தமீதிலொரு குத்தமேதுமில்லை
சுத்தமானவித யத்திலுள்ளசிவ
பத்திபண்ணிவரு சித்தியாகிவர
முத்திதேடிவரு பத்தனென்றுசொல்லும் (நந்தனார்)

வசனம்.

வேதியர் நந்தனுரைப்பார்த்து சிவபத்தரை அபசாரம்பண்ணி னேனென்று மிகவுங்குழைந்துசொல்லுவார்.

இராகம்-பியாகடை-அடைதாளச்சாப்பு.

பல்லவி.

நந்தனுரேயுன்றன் பெருமையின்றுகண்டேன்
நானென்வினையையிண்டேன்.

அநுபல்லவி.

வித்தையைக்குறியாமல் விழலனுணறியாமல்
விப்புக்குக்கச்சுகட்டி விசினேயெனையாளும் (நந்தனுர்)

சரணங்கள்.

அறியாமைனத்தினுலே ஏதேதோபேசியுன்றன்
அருமையைத்தெரியாமற்போனேனே மெத்த
சிறியோர்செய்தபிழை பெரியோர்பொறுப்ப ரென்று
செப்பும்வார்த்தையுமக்கேகணவானே இந்த
முறையுணர்ந்தோர்க்கென்ன நான்சொல்லத் தோணும்
மூடன்மேற்கிருபைவைத்து முழுதுங்காத்திட வேணும்
நிறைவுற்றவருட்பெறறோர்க் கேதுநிகராங் காணும்
நினைக்குமுன்னடிவணங்காதோன்வந்துயர் சேணும்

நந்தனுரே.

நேற்றுப்பொழுதளவுஞ் சும்மாவிருந்ததிந்த
நிலங்கள்முற்றும்பயிர்கள் முளைத்துக் கதிக்கச்
சாற்றுங்கதிர்கள் முத்திச்சாய்ந்து அறுவடைக்குத்
தக்கதாயிருக்குதேமிக்க-விளைத்து உமது
ஆற்றல்தனக்குநிகராவரோ யாவரும்
அய்யாவுனதுநல்ல வருளால்நலமே பெரும்
நாற்றிசையோர்களும் நாடிப்பணிய வரும்
நாயேன்களிக்கமனம் நயந்துகிருபை தரும்

நந்தனுரே.

தூண்டைகளுங்கலப்பைக் கோலுங்காரும்விதையுங்
கொட்டத்திலிருக்கநீர்செய்தீரோ அந்த
அண்டர்பணியுந்தில்லை யாண்டவனே யுமக்கு
அடிமையாளாகிவந்துசெய் தாரோ

துண்டத்தனத்தாலென்றெண்டுக்கும்மைக் கொண்டேன்
தொல்லுலகத்துள்ளோர்யாருமேசக் கண்டேன்
தொண்டனைனுமக்குத்தோதங்களை விண்டேன்
சொல்லும்பணிகள்செய்து சுகப்படத்துணி வுண்டேன்

நந்தனரே.

வசனம்.

என்றுவேதியர் நந்தனரைப்பார்த்துப் பின்னுஞ்சொல்லுவார்.

இதுவும்வேதியர்சொல்.

விருத்தம்.

கறைபடுங் கண்டன் றளைக் கருத்தது பெறவேநோக்கிக்
குறையறும் நந்தனரைக் குலமது கீழென்றெண்ணி
மறைபுகல் பெருமையாலே வருத்தினேன் கொடியனென்று
இறைபடு மனம்போ லஞ்சி யேங்கிய யாற்றுவானே.

இராகம்-புன்னாகவராளி-ரூபகதாளம்.

சுத்தமெத்தனைசெய்தபோதிலு மூர்தன்சித்தத்தில்வினையாதே-சிவ
பத்தனென்றறியாமல்பதறிவார்த்தைகள் சொன்னபாவந்துலையா
புலையர்கள்பரகதிதேடும்படியவர் புண்ணியஞ்செய்வாரோ-உன்னை
கலிதீரக்கண்ணாரக்கண்டபேர்களெல்லாங் காட்சிபெறுவாரோ
உருவமனதரியுவொருவனுலகாதென் றுலகம்மொழிபாதோ-அது
திறமாச்சுதினியுந்தன்ஜென்மசபலமாச்சு தெய்வமுமிரங்காதோ
ஜாதியிலிழிகுலஞ்சாஸ்திரங்கிசையாது சந்தேகப்படலானேன்-இப்
ஆதிசிதம்பரரகசியம்பாரென்று அனுப்பிவிடலானேன்.

வசனம்.

இப்படிவேதியர்மிகவும்பரவசமடைந்து நடந்த நாளைப்போவார் கனவிலே ஈசன்வந்து கருணைசெய்தாரென்றார், அதற்குநாளைப்போவாரைப்பார்த்து வேதியர் சொல்லுகின்றார்.

இராகம்-எமுனாகலியாணி-ஆதிதாளம்.

நந்தாவுன்கனவினி லெப்படிவந்தார்
வரந்தந்தாரெந்தாய் (நந்தா)
சந்தனமுஞ்சனகாதி முனிவர்தொழுஞ்
சச்சிதானந்த மூர்த்தியல்லவோ (நந்தா)
ஆதிமுடிவிடை யாதபராபரஞ்
சோதியல்லவோசீச சாதியென்றறிந்தும் (நந்தா)

அண்டாண்டரிறை யின்றசபாபதிக்
கொன்றும்பேதமில்லையென்றுதெளிந்தது (நந்தா)

வசனம்.

வேதியர்நான்செய்தபிழையெல்லாம்பொறுத்துக்கொள்ளுவீரென்று சொல்ல நந்தனார் மறுவுத்தரவு கூறல்.

இராகம்-தெண்டகம்-எதுகுலகாம்போதி.

வேதியர்-ஏழைபார்ப்பான் செய்திடும்பிழையை
பேற்றுக்கொள்ளாதே நான்
இனமறியாதவன் முன்புத்திகாரனென்பதும் பொய்யோ

நந்தனார்-பொய்யாகியவிந்த வுலகத்தைப்பார்க்கும்
புண்ணியவானே நான்
புலையனுஞ்சஅடிமையல்லவோ புத்திசொல்லுமையே

வேதியர்-புத்தியுண்டு வித்தையுண்டு
பத்திகிடையாது வாயால்
புலம்பினதாலென்னமன மடங்காதுபேதங்கிடையாது

நந்தனார்-கிடைக்குஞ்சிதம்பர தெரிசனமென்று
கிருபைசெய்யுமையே நான்
கீழ்க்குலமல்லவோநாயினுங்கடையோன்கீர்த்திசெய்விப்பீரோ

வசனம்.

பரமபத்தனாகியநீயே எனக்கு அடிமை வேலைசெய்பவன்போல்வந்தபடியினாலே என்பிறவிப்பிணி தொலைந்ததென்று சொல்லுவார்.

விருத்தம்.

அவப்பொழுதுபோனதன்றி மறைமுடிவையுளங்கனிய வறிவினுன்னித், தவப்பொழுதுங் கணப்பொழுதுகண்டறியாப் புரவியெனைச் சார்ந்தாரன்றோ, சிவக்கொழுந்தி னடிமையென்றுபெயரிட்டு வேலைகளைச் செய்ததாக, பவக்கடலைக் குளப்படிபோல்தாண்டிவரச் செய்ததுன்றன்பத்தி தானே.

ஆனந்தக் களிப்பு.

நந்தாநீசிவ பத்தன்-உன்னை
நம்பாமலேமோசமானேனான் பித்தன் (நந்தா)

பூமிக்குள் நீயொரு சித்தன்-இந்தப்
பூமிக்குநானொரு சாஸ்திரப்பிர சித்தன்
காமிக்குள்ளேவெகு மத்தன்-உன்னைக்
கண்டுதெரிசித்தபேர்களே முத்தன் (நந்தா)

படித்துமென்னவெங்கள் — வேதம்-அதில்
பார்த்ததில்லையிந்தபகவனற் — றீதம்
எடுத்துச்சொன்னாய்சிவ — போதம்-அதை
ஏற்காமற்போச்சுதுயென்பிடி — வாதம் (நந்தா)

தெவிட்டாததேசாகம — பாணி-உன்றன்
தேகமுழுதிலுஞ்சிவன்றிரு — மேனி
பகையாகியவொரு — கூனி-போலே
பழுத்தேனானுலும்பேயத்தும — ஞானி (நந்தா)

பலசாகரந்தாண்டிச் — சென்றாய்-உள்ளே
பார்த்துணர்ந்துபரமானந்தங் — கொண்டாய்
தவமாமுனிபோலே — நின்றாய்-தில்லைத்
தாண்டவராயனைக்கண்டால்நீ — கண்டாய் (நந்தா)

வசனம்.

இப்படிவேதியர்சொல்லும்போது நந்தனார்மனமகிழ்ந்து கைகால்நடுங்கிறபறைச்சுற்றிவந்துதலைவணங்கினனுக்கு அன்னங்கொடுத்து ஆடையளித்து இத்தனைநாளுங்காப்பாற்றின பெரியவரே உங்களுக்கடிமைவேலைசெய்யுமென்னை இப்படிப்பெருமையாய்ச்சொல்லவேண்டாமென்று சொல்லுவார்.

இராகம்-கலியாணி-ரூபகதாளம்,

பல்லவி.

அய்யாசொல்லு — வேனோ-உம
தடிமைப்பறையன் — தானே

அநுபல்லவி.

மெய்யாகவேயிந்தமேதினிவாழ — வோர்கள்
வேலைசெய்யூழியர்தம்மையோதாழ் — வார்கள் (அய்யா)

சரணங்கள்.

வேம்புக்குயர்ந்தமதுரங்கள் — பூட்டினும்
வீறுமதன்குணமமாறுதெத — நாட்டினும்
ஆசபுத்திக்காரனென்றாலேயாவ — னுண்டோ
அய்யனருளையல்லாமலும்மேவ — லுண்டோ (அய்யா)

பேவுக்கிரைத்தண்டுமேருவைத் — தாங்குமா
விசங்கதிர்முன்பின்னும்பூச்சி — யோக்குமா
ஆவசழிலதெல்லாமையன் — றன்னாலே
ஆசாதெனாறெல்லைனவாச்சுது — என்னாலே (அய்யா)

முன்னமேசெய்தவினையின்வ சத்தாலே
மூடப்புலையனாய்மேவி யதனாலே
இன்னல்படுவதுடனின்னமும் ஏண்டா
ஏந்திக்கொள்ளுமென்றனைக்கெடுக்க வேண்டா (அய்யா)

வசனம்.

நந்தனார் தனது ஆண்டையாகிய வேதியரைப்பார்த்து தங்களுடைய திருவாக்கினால் என்னையுமிப்படிப்புகழலாமாவென்று மிகவும் வணக்கமாய்ச் சொல்லுவார்.

இராகம்-அமிர்தகல்யாணி,

பல்லவி.

சின்னசாதியல்லவோசிதம்பரம்பேய்வருகிறேனான் (சின்ன)
அன்னைதந்தைஒருவரில்லேபடைக்கலமென்னையாளவேணும் (சின்)
ஈரமில்லாதநெஞ்சமாகிபிறைச்சிதின்றுவுடல்பெருத்த (சின்ன)
அல்லும்பகலுமதுவையுண்டுவறிவுமயங்கியாட்டங்கொள்ளும் (சி)

வசனம்.

இப்படிச்சொல்லியநந்தனாரைப்பார்த்துவேதியர்சொல்லுவார்.

இராகம்-பைரவி திரிபுடைதாளம்,

பல்லவி.

ஆருக்குப்பொன்னம்பலங் கிருபையிருக்குதோ
அவனேபெரியவனாம்

அநுபல்லவி.

பாருக்குள் வீடுகள் மாடுகளாடுகள்
பணமிருந்தாலவன் பெரியவனாவானோ (ஆருக்)

சரணங்கள்.

வேதபுராணங்க ளோதினாலென்ன
வேலைக்குழ்பணி மாதராலென்னகாரியம்
சாதனையாக வாராதொருநாளும்
மண்ணாசைபெண்ணாசைபொன்னாசைபொல்லாது (ஆருக்)

பாணன்மதங்க னடங்கவேசெய்தகோ
பாலகிருஷ்ணன் தினந்தொழும்பொன்னம்பல
வாணனென்றுதா வாய்விருமபாதவன்
வானவராகிலுந் தானவன்சின்னவன் (ஆருக்)

பொன்னம்பலஞ் சிபத்தியுள்ளவன் பெரியசாதி,சிவபத்தியில்லாதவன் பார்ப்பானுயிருந்தாலுஞ்சின்னசாதி,ஆனபடியினாலே திருப்புன்கூரி லுனக்காகப்பரமசிவன்நந்தியைவிலக்கித்தரிசனங்கொடுத்து, நீ குளம்வெட்டினதும் ஒருராத்திரிகாலத்திலேநாற்பதுவேலி நிலமும் நடராஜமூர்த்தியேவந்து நடவுநட்டதும்,பார்க்கும்போது நீயே மகாப்புண்ணியபுருஷனென்று சொல்லவேணுமேயல்லாது வேறில்லை, நீ யிதுவரையி லெனதுவார்த்தைகளைத் தட்டினதுமில்லை, ஆகையால் எனக்கு குருவாகி நின்று உபதேசம் பண்ணென்றுமின்னுஞ் சொல்லுவார்

இராகம்-தெண்டகம்-ஆதிதாளம்.

பல்லவி.

நந்தா நீ குருவுபதேசம்-நவிலிடவேணும்
நான்கடைத்தேற (நந்தா)

அநுபல்லவி.

நொந்தாலுங்கதிபெற மாட்டேன்
நேயினும்பிறவிக்கடலிடை வீழ்வேன் (நந்தா)

சரணங்கள்

மந்தாரப்பூவெடுத்தாளுர் மலரடிசாத்திவாழவென்னறியு
சிந்தாமல்வரந்தரவேணும் சிதம்பரரகசியந்தெரிந்திடவே (நந்தா)
வைத்தார்கருணைக்கடலுள் மனதிற்சென்றுதீர்த்தம்புரிந்து
ஒழுந்தாசைதுணங்க ஞானிமைமரிடன்வந்தாழியஞ்செய்ய (நந்தா)
பெறுநீ பெரியவனுந்தன் பெருமையைநானறிவேனேழுடன்
நந்தாமல்லேபாசமதானேன் நயப்பிக்கைசொன்னேன்துறக்கதிபெறவே

விருத்தம்.

வேத மோடருஞ் செய்திடும் நூற்களை விதித்தும்
ஆதருசிறுனே னடியவர்க்கஞ்சின மடையும்
பாதகம்புரிந் தேனென்று நந்தனைப்பரவிம்
ஏதம் நீரவே வேதிய ருபசரித் திருந்தார்.

வசனம்.

இப்படிச் சொல்லிய வேதியர்வார்த்தையைத்தள்ளப்படாமையால் சுற்றிலுந்திருந்தவர்களிலொருவரை நோக்கிச் சொல்லுகிறாப் போலே சொல்லுகிறார்.

இராகம்-புன்னாகவராளி-ஆதிதாளம்.

பல்லவி.

ஐயேமெத்தகடினம்-உனக்கடிமை
ஐயேமெத்தகடினம்.

அநுபல்லவி.

பொய்யாத பொன்னம்பலத் தையை யிருக்குமிடம்
நையாத மனிதர்க்குவுய்யாது கண்டுகொள்ளும் (ஐயே)

சரணங்கள்.

பாலகிருஷ்ணன்பணிந்திடுஞ் சிலகுருசிதம்பரம்
மேலெல்லைகதஆசையாலே காணத்துப்போவனென்று
சாத்திரம் நல்ல க்ஷேத்திரம் நிற்பாத்திரஞானநேத்திரங்கொண்டு
வாசியாலே மூலக்கனல் வீசியேசுழன்றுவரப்
பூசைபண்ணிப் பணிந்திடு மாசறக்குண்டலியைவிட்
டாட்டுமே மனமூட்டுமே மேலோட்டுவழிகாட்டுமேஇந்த
மானபிமானம்விட்டுத் தானாகின்றவர்க்குச்
சேனாதிபதிபோலே ஞானாதிபதியுண்டு
பாருமே கட்டிக்காருமே உள்ளே சேருமே அதுபோதுமேஅங்கே
சங்கையறவேநின்று பொங்கிவருமபாலுண்டு
அங்கமிலாப்பாரிகொண்டுதங்கபொம்மைப்போலவே (இந்த)
நில்லுமேபரதுஞ்சொல்லுமே ஞானஞ்சொல்லுமேயோகம்வெல்லுமே
அட்டாங்கம்பண்ணினாலுங்கிட்டாங்குபண்ணிபது
கிட்டாதுகிட்டவரவொட்டாதுமுட்டியா
பாயுமே மூளைதேயுமே அதுவோயுமே உள்ளதோயுமே வேத
மந்திரத்திலேபோட்டு யெந்திரத்திலேபார்க்குந்
தந்திரத்திலேயுமில்லை அந்திரத்திலேஅவ
தானமே அதுதானமே மலங்கினமே பேசாமோனமே அந்த
முப்பாழுந்தாட்டிவந்து அப்பாலேநின்றவர்க்கு
இப்பார்வைகிடையாது அப்பா திருநடன
மாடுவார் தாளம் போடுவார் அன்பர்கூடுவார் இசைபாடுவார்இது
கண்டாருங்கிடையாது விண்டாருஞ்சொன்னதில்லை
யண்டாண்டகோடியெல்லா மொன்றாய்சமைத்திருக்கு
மல்லவோ பறையன் சொல்லவோ அங்கேசெல்லவோ நேரமாகு
தல்லவோ (ஐயே)

விருத்தம்.

வானமேவிய வும்பர்கள் வாழ்த்திய மறையைக்
கானமேசெயும் வேதிய ரேயுமக் கடிமை
ஈனமாமிழி குலத்தினி லெய்திய நந்தன்
ஞானமாதிகொண் டேயவ ரருளுற நினைந்தார்

வசனம்.

இப்படிநந்தன்சொல்லவேதியர்கேட்டுதிவ்விய ஞானமடைந்து நந்தனைப்பார்த்துசொல்லுகிறார்

இராகம்-சாமா-ஆதிதாளம்.

பல்லவி.

சிதம்பரம்போய்நீ வாருமையா நான்
செய்தவெல்லாமபசாரமையா (சிதம்பரம்)

அநுபல்லவி.

சிதம்பரம்போவீர் பதம்பெறுவீர்வேறே
சிந்தனைவேண்டாம் நந்தனே இனிமேல் (சிதம்பரம்)

சரணங்கள்.

எத்திசையிலுமுமக் கிணைசொல்லவும்போமோ
பத்தியேமுதலென்று பழகியபெரியவர் (சிதம்பரம்)
சித்தமுட்டெளிந்து தெய்வமேநீயென்று
பத்தியும்வந்தது பொய்யிதுவல்லவோ (சிதம்பரம்)

இப்படிசொல்லிய வேதியரை நந்தனார்சுற்றிவந்துதலைவணங்கி ஒடுங்கிவணக்கத்துடன் தூரவிலகி நின்றுவேதியரை ஆசிர்வாதம்பண்ணச்சொல்லுவார்.

இராகம் ஒரடியுமிரண்டுவார்த்தை துக்கடா

நந்தனார்.	வேதியர்.
சிதம்பர தெரிசனங்கிடைக்குமோ	கிடைக்கும்
ஜென்மசாபல்யமாமோ	ஆகும்
பதபெருந்தவசரியறிகிலேன்	அறிவீர்
பரமசிவனருள்செய்வாரோ	செய்வார்
சாதியில்தாழ்ந்தவனல்லவோ	அல்ல
சாத்திரமுறைமைக்குஞாயமோ	ஞாயம்
ஆதியம்பலதெய்வம்நாடுமோ	நாடும்
ஆனந்தமடைவேனோவையரே	அடைவீர்

வசனம்.

வேதியர் நந்தனருக் காசிர்வாதம்பண்ணியனுப்பியபின்பு நந்தனருடைய குணாதிசயங்களை கொண்டாடுவார்.

விருத்தம்.

அடியவர்கள் மனமிடியப் பேசினனுண் டபராத மனந்தங்கோடி-
படுநரகில் வீழ்வாரென் றெனவுரைக்கும் பாவமதுபலித்ததென்று
குடிகுடிக்குக்கொடைநடுங்கிநீர்வடிந்துசிதம்பரத்தேதுதிகள்செய்து
படிபுகழுந் திருத்தொண்டர் குணமெல்ல முலகறியப்பகருவாயே.

இதுவுமது.

சாத்திரக் குப்பை யெல்லாந் தள்ளினேன் பதறுபோலே
காத்திரஞ் சுத்த மாக்க கனிந்திடு முள்ளம் பக்தி
மாத்திரமிருந்தாற் போது மற்றொன்று மில்லை சைவ
க்ஷேத்திர முழுதுஞ் சுற்றிச் சேருவேன் றில்லை யென்றார்.

இராகம்-சௌராஷ்டிரம்-ஆதிதாளம்.

பல்லவி.

எந்தநேரமும் நந்தனைசிந்தித்தா
னந்தமாகி யிருந்தனரந்தணர் (எந்த)
பந்தந்தீரவே யிந்தவுருவாகி
வந்துதோவரந் தந்துதோ சிவனென்று (எந்த)

வசனம்.

விட்டுதோ இந்த வீட்டுக்கவலைகள்பட்டுதோ பவசாகரஞ்சோழித்திட்டுதோ முத்திவெள்ளங்கரைபுரண்டிட்டுதோ வென்றுஎத்தி தொழுது, எந்நேரமும்வேதியரிப்படியேசிவபத்திபண்ணிக்கொண்டுஆனந்தமடைந்தார் அப்படியிருக்க நந்தனர் ஆதனூரைவிட்டுசிதம்பரம் வருகிறார்.

இராகம்-லாவணி-ஆதிதாளம்.

நந்தன்சிதம்பரம்வருகிறார் ஆதனூரைவிட்டுக்
கொள்ளிடந்தாண்டி யப்பால்வருகையிலே
தொண்ட ரங்கம்பரவசமாய் எங்கும் பொங்கிச்சிவமயமாய் (நந்தா)
அந்தக்கரணவிருத்தியழிந்து
அநேகசென்மவாசனையை
யனல்கொண்டுதகித்தாரேசஞ்சிதவினைதயென்றுவெறுத்தாரேநந்தா

குண்டசேத்திரைக்கொண்டு
கிளம்பிமண்டலம்புகுந்து
சஞ்சரித்துக்கொண்டார்குறையாவமிர்தமுண்டார்கிளையார் (நந்த)
அநாதிமாயகற்பிதமிந்த
நாமரூபாதிபிரபஞ்சமெல்லா
மழிந்துபோமென்றார் குறைகட லொழிந்துநரையென்பார் (நந்த)
சைவத்தலங்களிற்றெய்வமிதுவே
சத்தியம்பண்ணுவேன் நான்பறையன்
சதுர்மறைகேட்டிலையோ மிக்க ஷண்மதங்கேட்டிலையோ (நந்த)
எப்போதுநடராஜமூர்த்தியின்
இணையடிதொழுதார்க்கிலையே
னிந்திரபதவிகளோ திரும்பியும் வந்தவர்காணிலரோ (நந்த)
ஈசன்சருணநேசமிலாதவ
னெத்தனைவேதங்கற்றாலு
மெட்டாப்பெருங்கொம்புநெருக்கித்தொட்டால்செங்கரும்பு நந்த
ஆதனூரிலொருபுலையனுக்காக
அம்பலநாடகமாடுவாரோ
அருந்தவம்புரிந்தேனே கனவில் வருந்தியு மிருந்தேனே (நந்த)
அரகரசாம்பசதாசிவனேபொன்
னம்பலத்தாடியதேசிகனே
ஐயேயுன்னடிமை மனது னையே னுன்னுடைமை (நந்த)
செழித்துவியனுலகெட்டிச்சிகரங்க
ளோங்குந்தெரியுதுகாணேயே
தில்லைத்தலமென்பார் அன்புடன்சொல்லப்பலமென்பார் (நந்த)
குதிப்பாரொருதரங்களிப்பார் கண்ணீ
ருதிர்ப்பாரானந்தலகிரியால்
கொண்டாடிப்பாரே குறவை நன்றாய்ப்படிப்பாரே (நந்தா)
பாரளந்தகோபாலகிருஷ்ணன்துதி
பாடுந்திருவடிபணிவேனே
பரகதியடைவேனே பூமியில் மறுபடிவருவேனே (நந்த

வசனம்.

நந்தனார் ஆதனூரைவிட்டுக் கொள்ளிடத்தருகில்வரும்போது சொல்லுகிறார்.

இராகம்-முகாரி-அடைதாளம்.

பல்லவி.

கொள்ளிடக்கரைபோனான் நந்தன்
கோபுரங்களைக்கண்டான்

அநுபல்லவி.

பள்ளச்சாதியிலும் பறைச்சாதியென்று
உள்ளமுருகியவர் வெள்ளங்கரைபுரள (கொள்)

சரணங்கள்

ஓடத்தின்மேலேறி நந்தன் ஓங்குமகிழ்ச்சிமீறி
நாடவெவரும்நல்ல நடனக்கூத்தாடியே
நண்புடன் கெதிபெறலாமென் றுறுதிகொண்டு (கொள்)

அக்கரைபோனானே நந்தன் ஆநந்தங்கொண்டானே
சிக்கெனவோங்கிய சிதம்பரேசனைக்காணச்
சிந்தைமகிழ்ந்துசிவ தியானஞ்செய்துக்கொண்டு (கொள்)

திருவாதிரைத் திருநாள் செய்யுந் தினமல்லவோவிந்தநாள்
திருநடராஜமூர்த்தி திருமுகந்தனைக்காணச்
சித்தங்களிப்பேனே னென்றுறுதிகொண்டு (கொள்)

வசனம்

இந்தப்பிரகாரஞ்சோத்திரஞ்செய்துகொள்ளிடக்கரையைத்தாண்டிவரும்போது தில்லைக் கோபுரத்தைக்கண்டுதெரிசனம்பண்ணுவார்.

இராகம்-தெண்டகம்-ஆதிதாளம்.

பல்லவி.

கோபுரதெரிசனமே-நந்தன் பாபவிமோசனமே

அநுபல்லவி.

தாபங்கள்மூன்றுந் தணிந்துவிடும்நல்ல
சோபனமுண்டாகுஞ் சோதிவிளங்கிய (கோபுர)

சரணங்கள்.

விண்ணணைந்துமே லோங்கியகண்டு நற்
கண்ணுளார்க்கெல்லாங் காக்ஷியளித்திடும் (கோபுர)

அல்லும்பகலு மமரர் துதித்திடுந்
தில்லைக்கிறைவனன் றினமுமகிழ்ந்திடும் (கோபுர)

வசனம்.

நந்தனார் தில்லைத்தலப்பிரபயிருக்குதெற்கு செல்லுகை

இராகம்-நவரோஸ்-ஆதிதாளம்

கண்ணிகள்.

மரங்களில்கூவியசோலைகளும் வாபிட்சுகூபதடாகங்களுந்
தூங்கதிர்மண்டலமெத்தையுந்தெசார்ணசபேசன் தஜமரமும்
நாலுபுறத்திலுங்கோபுரமும் நவமணிசித்திரமண்டபமும்
பிலமுழுந்திருவீதிகளுந் தில்லைவேதியர்மாளிகையும்

பல்லவி.

கண்டேன்கலிதீர்ந்தேன். என்கவலையெல்லாமொழிந்தேன்

அநுபல்லவி.

மண்டலம்புகழுஞ்சபேசன்சந்நிதிவாழ்த்திப்பணிந்தின்றேன் கண்

சரணங்கள்.

தஞ்சமென்றடைந்தேனிந்தச் சடத்தால்நொந்தேன்
அஞ்சேலென்றாமென்றெந்தனுக்குச்சொல்லி யழைத்திலாகாதோ (கண்
அப்பாவுன்சரணந் தில்லைக்கரசேயுன்சரணம்
ஒப்பாரிலாநாடகமயிலுமொளியேயுன்சரணம் (கண்டேன்)

வசனம்.

கோபுரதெரிசனமே என்கிற கீர்த்தனமுதற்கொண்டுசிதம்பரவிலாசமென்றுபேர்.

சிந்து.

சிவன்வேடிக்கை தானென்று நாடிக்கொண்டே தறியாது போயிருந்த செம்பொன்னம்பலத்தாடினைக் கும்பிடவே ஆதனார்தனியிருந்து விடும் அம்புபோலப்பறந் தையம்நீக்கித் தில்லையருகில் வந்தார் மனந்தேறிக்கொண்டார் குறைபாறிக்கொண்டார் கொண்டா மணியோசை

திருநாளைப்போவார் புராணம்.

விருத்தம்.

நாளைப்போவேனென்று நாங்கள்சொல்லத்தெரியாது
நாளைப்பூவாய்ப்பிறவிப் பிணிப்பொழியப் போவாராய்
பாளைப்பூங் கமுகுடுத்த பழம்பதியி னினறுபோய்
வாளைப்போத் தெழுபழனஞ் சூழ்தில்லை மருங்கணைந்தார்

வசனம்.

நாளைப்போவேனென்றுசொல்லி அநேகநாள்கழியச்ச பாநாதராத தரிசனம் பண்ணவேணு மென்னும் ஆசையை அடக்க

கூடாதவராய்ப் பூர்வபுண்ணியாக்குதிலையாமையை உடைய பிறப்பு களால் உண்டாகிய சம்மதத்தினாலேபொருட்டுப்போகின்றவராய்ப் பாவிகளைப் பையிலே பாவிகளாகிய கழுகுமரங்கள் சூழ்ந்திருக்கும் பழமை யுற்ற சம்புவுடையவனிலின்றும் புறப்பட்டு ஆனவரானந்தானது வாழ்ப்பினின்றையாடுமையல்கள்யுடையசிதம்பரத்தின் எல்லையை அடைந் தார்.

இராகம்-காகரப்பிரியை-ரூபகதாளம்.

கெண்டாமணியாடுது கண்டிப்பிணியாடுது

பூதிமணிமீதுடுது	நாடுது கூடுது	(கெண்டா)
பரவசமாகுது	பாவங்கள்போகுது	(கெண்டா)
சென்னமரணுதிகள்	மோகமுந்தீர்ந்தது	(கெண்டா)

சிந்து.

கெண்டாமணிநீவாசை காதில்கேட்டு தென்று ரதைப்பார்க்க வென்றே கொண்டாட்டமாகிவந்தார் கைகைக் கும்பிட்டுடன் நமகம் பிட்டதோ வென்றேமனமகிழ்ந்தார் திருவீதியிலேவந்துகாதலுடன் கண்டார்களையாழி இருகண்களிலானந்தம்பொங்கிடவேகின்றார் மதி ற்புறத்தே வெகுநேத்தியென்றுரிதைப் பார்த்ததில்லைபலிந்தார் பர வசமாம் நல்லபாக்கியசாலி களாக்குமென்றார் இதுதானோ தில்லைப் பதி.

நந்தனார் தில்லையைக்கண்ட வானந்தானுபூதியைச்சொல்லுகின்றார்.

இராக-தெண்டகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

தில்லைத்தலத்தைக் கண்டார் இது சித்துவிலாசமென்றார்-அந்த
எல்லையிலே நின்றார் மனமேதகமாகிக்கொண்டார்)இரு
கண்கள் நீர் வடித்தார் கொரிக்காமவல்லபழுத்தார
கரமிரண்டையுங் குவித்தார் தலைகாலேகோவிருகித்தார-இந்த
ஐம்புலன்களை மறந்தார் பரமானந்தக்கட்டுரைத்தார்-தன
தேகபவ மறந்தார்தில்லைச்சிவமே யென்றிருந்தார்

இராகம்-பியாகு-ஆதிதாளம்.

பல்லவி.

இதுதானோதில்லைத்தலம், இத்தனைகாலுமறியேன்
இதுதானோ தில்லைத்தலம்

அநுபல்லவி.

அதுவோ இதுவோவென் றலைந்திடும்பேயனைக்
கதிதருவேனென்று கைகாட்டியழைக்குது (இது)

சரணங்கள்.

காசினியிலிதை கயிலையென்றெல்லோரும்
பேசக்கேட்டதேயன்றி பேணிப்பார்த்தறிகிலேன் (இது)

வசனம்.

நந்தனார் தில்லையைக்கண்டு கொண்டாடுவார்.

இராகம்-இந்துஸ்தான்-காபி-ஆதிதாளம்.

பல்லவி.

தில்லைதில்லையென்றால் பிறவி
இல்லையில்லையென்று மறைமொழியும் (தில்லை)

அநுபல்லவி.

தொல்லைத்தொல்லையென்றகொடுவினை
வல்லைவல்லையென்றகலுந்திருத் (தில்லை)

சரணங்கள்.

கற்றோர்கற்றோர்களங்கமறுந்திட
பெற்றோர்பெற்றோர்பேசப்பெருமையி
லுற்றோருற்றோர்பொன்னம்பலத்தினில்
தந்தோந்ததோவென்று நடனமிடும் (தில்லை)
வாடிவாடியே மாயனிருவரும்
கூடிக்கூடிகொண்டல்லும்பகலுந்தான்
தேடித்தேடித்திருவடிமுடிகளைப்
பாடிப்பாடிக்கோபாலகிருஷ்ணன்தொழுந் (தில்லை)

துக்கடா-இ-ம்-தேசிகதோடி-ஆதிதாளம்

பல்லவி.

இதுவேதில்லைச்சிதம்பரக்ஷேத்திர-மீசனிருப்பிடமோ

அநுபல்லவி.

மதுரம்பொழிந்திடும் மறையோரிருப்பிடம்
மாமுனிவர்தம் வாழும்பெருமிடம்
பதவிபெருந்தொண்டர் பணிந்துவருமிடம்
பலதெய்வமுந்தொழும் பணிந்துவருமிடம் (இது)

இராகம்-பியாகு-ரூபகதாளம்.

பல்லவி.

ஆடுஞ்சிதம்பரமோ-வையன்கூத்-தாடுஞ்சிதம்பரமோ

அநுபல்லவி,

ஆடுஞ்சிதம்பர மன்பர்களிக்கவே
நாடுஞ்சிதம்பரம் நமச்சிவாயப்பொருள் (ஆடுஞ்)

சரணங்கள்.

ஆருமறியாமல் அம்பலவாணனார்
சீரடியார்பார்க்கச் சேவடி தூக்கியே (ஆடுஞ்)

பாலகிருஷ்ணன்போற்றும் பணிமதிசடையினார்
தாளமத்தளம்போட தாதெய்தாதெய்யென்று (ஆடுஞ்)

விருத்தம்.

தில்லையைக் கண்ட போதே தெளிந்ததென் னுள்ளமெல்லாம்
பதினூழி காலஞ்செய்த பாழ்வினை தொலைந்துபோச்சு
நல்லரு ணடனங் காட்டும் நாயனார் சிற்ச பைக்குள்
சொல்லுவார் மகிமை செப்பச் சேடனா லாகா தென்றே.

வசனம்.

இப்படியே தில்லையைக் கொண்டாடி தில்லையைப்பாராதவரே பாவியென்றார்.

இராகம்-சவாயி-சாப்புதாளம்,

கண்ணிகள்,

மார்கழி மாதத்தி லாதிரை நாளையில் வந்து சிதம்பர தேசிகனை
பாராத பாவிகட் கேதுமில் லையிந்தப் பாரில்வந்துபிற வாதவரே
வானிற் றெருந்திரு மாளிகை மண்டப மாமதிலுந்தில்லைமாநகரம்
காணக்கிடைக்காதப்பாயிந்தபாக்கியங்காதிற்கேட்டவண்ணங்கண்
டதுவே, ஆதிபராபர மாகிய தில்லைப் பொன்னம்பலவன் வளர்சந்
நிதியில் நாதமுழங்கிடமுழங்கேட்குது வானந்தநாடகமெல்லையைநானறி
(யேன்.

வசனம்.

நந்தனார் சிதம்பரக்ஷேத்ரத்தால் சிவலோகங்காணுரென்பவர்

இராகம்-சாவேரி-ரூபகதாளம்,

கண்ணிகள்.

சிதம்பரம்வந்து தெரிசிபாதசென்மமில்லையென்னுமேயி
மனதிலெண்ணினார் பாதபூசைசெய்தி பரனம்பண்ணினார்

பறையனுக்குமிந்தத்தலத்தைப் பார்த்தபின்புமோட்சபதவி
பலித்ததல் லவோ-பாவிஜெனன-மறுத்ததல்லவோ
தொண்டிகொண்டதங்களயர்பெருமையெல்லாம்சொல்லிச்சொல்லித்
துள்ளித்தாவினர்-ஞானவிளையை-யள்ளித்தாவினர்
பூதலந்தனிலிதுவேதெய்வமென்று நந்தனுனந்தக்கடல்
பொங்கிப்பாடினர்-புண்ணியத்தல-மென்றுதேடினர்

இராகம்-தண்டகம்-சாப்புதாளம்.

அரகரசங்கர வண்ணாமலையம்பலத்
தானேநானுந்த னடைக்கலமென்று
உருகித்துதியாரோ-வானந்தம்
பெருகிப்பதியாரோ

முத்தியளிக்குந்திருமூலத்தானரைக்கண்டு
பத்திபண்ணுதவன் பாமரனல்லவோ
பாருக்குசுமையாச்சு-அவனிருந்து
மாருக்குச் சுகமாச்சு

மங்கையர்மோகமாய் மயங்கித்தினந்தோறு
மங்கம்புளகிதமா யவரிடுமேவல்கொண்
டாழிக்குழைத்தாரே-அன்யாயமாய்
நாளையுங் கழித்தாரே

வீசிநடைநடந்த மெய்யும்பொய்யாகவே
ஓசையடங்கும்பொ தொருவருமங்கில்லை
தூசியும்போகாதே-காதறுந்த
ஊசியும் வாராதே

சிவசிதம்பரமென்னு தில்லைவெளியினின்று
பவசாகரம்வென்று பரமபதமடையும்
தவநெறிபொருந்தாரே பொருந்தின
மவரையும் வருந்தாரே

சாத்திரங்கற்றாலுஞ் சதுர்முறையுணர்ந்தாலுஞ்
சூத்திரம்பெற்றாலுஞ் சொன்னேனகங்கார
மாத்திரம்போகாதே கருணைக்குப்
பாத்திர மாகாதே

சரணுகதமென்று சார்ந்தடிபணியாமல்
வருணாசிரமவிதி வழுவாதிருக்கினுஞ்

சொன்னதிகள்விடுமோ-சிரவண
மன்னதிகள் படுமோ

அஷ்டசித்திகள்பெற்று வாண்டாயிரங்காலம்
மட்டிருந்தாலுமென் மரணபயமெய்திடும்

நஷ்டசென்மமாச்சே-மனிதசென்ம
மெட்டிவீணாய்ப்போச்சே

மூப்பாருந்தாண்டி மூலத்தீமூட்டிக்கொண்
டப்பாலேநின்று லாணந்தங்காணலா

மொப்பாரில்லையடா-ஊடுருவி
நிற்பா ரில்லையடா

ஆலமிடறடக்கி யம்பலக்கூத்தன்கோ
பாலகிருஷ்ணன்தொழும் பரமசிவனேயென்று

பாடிப்படியாரோ-பருவத்தில்
தேடிப்படியாரோ

வசனம்.

நந்தனார் சிவபத்தி பண்ணுதவனை நிந்தனைசெய்து இன்னமுஞ் சொல்லுவார்.

இராகம்-சுருட்டி சாப்புதாளம்.

கண்ணிகள்.

வானோர்புகழ்தில்லை வனநாதர்வாழும்
ஞானசபையைப்போற்றி நமச்சிவாயவென்று

சொல்லாதவன்-கல்வி-கல்லாதவன்-வெகு-பொல்லாதவன்

கனிபுகழ்சிவ காமவல்லியைக்கண்டு
பாசமகலும்நெறி பாராதவன்சுத்தப்

பதருச்சு-ஆட்டின தறுச்சு-கிருமிக்-கெதிருச்சு

ஆட்டுக்காலேச்சற்றே கேட்டுவாங்கியுள்ளே
நாட்டிக்கொள்ளாதவன் மாடுக்குவமையென்று

நாடாரே-கண்டு-கூடாரே-என்னுந்-தேடாரே

அம்பலவாணரு ருகில்வந்துகையால்
கும்பிட்டிறைஞ்சாத குருடர்களுக்குத்திற

மதியேது-பரகதியேது-பண்ணும்-விதியேது

நாக்கிருந்துஞ்சிவ நாமத்தைநவிலாமல்
சாக்குப்போக்குப்பேசுஞ் சண்டியவனைக்கால

னடியானே-கட்டிப்-பிடியானே-நையா-விடியானே

வேதாந்தநூற்களை விவகரித்துணர்ந்தாலும்
ஏகாந்தபக்தியொன் றில்லாதவனுள்ள

முருகாது-கள்ளங்-கருகாது-வெள்ளம்பெருகாது

ஆத்திமதியஞ்சடை யழகனுடியகூத்தைப்
பார்த்துக்களிக்காத பாவிமனிதர்க்கொன்றும்

பலியாது-வினை-சலியாது-சீலம்-பொலியாது

பாலகிருஷ்ணன்தேடும் பாதரசத்தைக்கண்டு
சீலமுடனேயுண்டு செமிக்காதவன் துன்பம்

துலையாது-இன்பம்-நிலையாது-ஜன்மம்-கலையாது

வசனம்.

நந்தனர், சிதம்பரம்பாராத கண்படைத்தாரை முகத்தைக்கெடுக்கவந்த புண்படைத்தாரென்று சொல்லுவார்.

இராகம்-ஆனந்தகளிப்பிலே-ஒருபேதம்.

காணுதகண்ணென்னகண்ணே
வீணுனகண்மயிர்கண்ணதுபுண்ணே (காணுத)

சொல்லும்பொருளிறந்த துரியவடிவமாகி
யல்லும்பகலுமற்ற வானந்தப்பேரொளி (காணுத)

பசியாமருந்தளிக்கும் பரமரகசியத்தி
லசையாமலேயாடு மம்பலநாதனைக் (காணுத)

ஊராருமறியாம லொளிகண்டுபிசகாமல்
ஈராருகாற்கொண்டு எழும்பியமண்டபம் (காணுத)

அண்டத்துளடங்காத வாசவலேயைப்பூட்டி
பிண்டத்துளடங்கிய பேரின்பதெப்பத்தைக் (காணுத)

நாசிநடுவிருந்து நாதனேதானென்று
பேசாமற்பேசிய பெருமையையொருநாளும் (காணுத)

என்னையானறியேனென் றிகழ்ந்திடும்பேயனை
தன்னந்தனியனுக்கித்தருவனென்றழைத்தாரைக் (காணுத)

சோற்றுக்குருத்தியிதைச் சுமந்ததினுலென்ன
ஆத்திமதியஞ்சடை யழகனமருங்கோயில் (காணுத)

சீலக்கமலமுக்ச் சிவகாமிமனமகிழ்
கோலக்கனகன்றில்லைக் குழகனுடியகூத்தைக் (காணுத)

பாலகிருஷ்ணன்தொழும் பாதத்தைபணிந்தொரு
நாளினும்பிறவாத நம்பிக்கவழிதேடி (காணுத)

வசனம்.

நந்தனார்பத்திபண்ணுதலன்முத்திபெறுவேனென்றுசொல்லுகிறார்,

இராகம்-தெண்டகம்-ஆதிதாளம்.

கண்ணிகள்.

வேதம்படித்ததும் சாஸ்திரங்கற்றதும் மெய்யினில்நீறுபூசுவதும்
ஆதிசிதம்பரதேசிகன்திருவடிக் காளாகுலென்றானந்தம்

உடனே தலையும்பவடபந்தஞ்சொன்னேன்சொன்னேன்சொன்னேன்
ஊனுறக்கமுதலாகியநான்கு முண்டேயுலகில்யாவருக்கும்

ஆணவமலநீத்தர்களறிவாரகத்தைச்சுருக்கிக்கொள்ளுவாரே(னேன்
சுகத்தைப்பொய்யா தள்ளுவாரேசொன்னேன்சொன்னேன்சொன்

அருந்தவமாமுனியாகிலும் நல்லாராசை பொல்லாரறியாரோ
வருத்தப்படுத்திமனதையயக்கி வைத்திடுமன்னமயக்கோசம்

உற்றுப்பார்த்தாலதுநேசம்சொன்னேன்சொன்னேன்சொன்னேன்
அரவணைகோபாலகிருஷ்ணனல்லும்பகலும்பணிந்தேற்றும்

திருவடிசாருநதமென்றெண்ணித் தெளிந்தார்க்கன்றோபரபத்தி
ஒழிந்தார்க்கன்றோவரமுத்தி சொன்னேன்சொன்னேன்சொன்
[னேன்.

திருநாளைப்போவார்புராணம்.

விருத்தம.

இப்பரிசா யிருக்கவெனக் கெய்தரிதென் றஞ்சி
யப்பதியின் மதிற்புறத்தி னாராத பெருங்காத
லொப்பரிதாய் வளர்ந்தோங்க வுள்ளுருகிக் கைதொழுதே
செப்பரிய திருவெல்லை வலங்கொண்டு செல்கின்றார்.

வசனம்.

இந்தப்பிராமணர்களுடைய வீடுகள் இத்தன்மையாயிருக்க, எனக்கு அவ்விடத்திறகுப்போகுத லரிதென்றுபயந்து அந்தஸ்தலத்தின்மதிலின்பறத்தில் அளவற்றபோன்பு சமானமில்லாமல்வளரமனமுருகிக்கும்பிட்டுக்கொண்டு செல்லுதற்கரியஎல்லையைவலஞ்செய்துக்கொண்டு போவார்.

விருத்தம்.

அம்மை யாந்தில்லை மாநகர் மருங்கிடை யணைந்து
சும்மை யிட்டிரு விழிகளில் நீரறச் சொரிந்து
விம்மி யேசிவ னார்சரி தங்களை விரித்துக்
கொம்மை விட்டவர் பாடியு மானந்தற் கொண்டார்.

வசனம்.

நந்தனார் தனக்கிந்தபாக்கியங் கிடைத்ததென்று கொண்டானடிக்கிறார்.

இராகம்-உசேனி-ரூபகதாளம்,

பல்லவி.

கொண்டானடிக்கிறார்-தில்லைக்
கோயிலைக்கண்டு தாவித்தாவி (கொண்)

அநுபல்லவி.

அண்டரண்டந்தொழு மம்பலநாதனைக்
கண்டாரைக்கண்டு கொண்டோமென்றுநன்றாய் (கொண்)

சரணங்கள்.

அஞ்சலிகொண்டுகளித்து அரகரவென்றுஜெபித்து
குஞ்சிதபதத்தைத்துதித்துக்குரவைகள்பாடிக்குதித்து (கொண்)
இருகண்களில்நீர்பெருக இறைஞ்சிமனதுருக
அருமைச்சிவகதிதருக அம்பலவாணன்வருக (கொண்)

இதுவுமது.

இராகம்-சௌராஷ்டிரம்-ஆதிதாளம்.

பல்லவி.

கொண்டானடித்தாரே-நந்தனார் கோயிலைக்கண்டுத்தாவித்தாவி
கொண்டானடித்தாரே

அநுபல்லவி.

அண்டர்மகிழ்ச்சியாலே அரனேயென்றுமென்மேலே (கொண்டா)

சரணங்கள்.

பண்டுநான்செய்ததே யோகம் அதனாலுநற்
கொண்டுவந்தேன்மானிட தேகம் ஆகவே இந்தப்
புண்டரீகப்பதவை போகம் கண்டேனென்போல
மண்ணிலெவருக்குண்டு யோகம் என்றுதுதித்துக்
கொண்டாடிமிவர் புகழைக்
கூறவருமேயுற் சாகம் (கொண்டா)
வஞ்சமனதையொரு மித்து நினைத்தொழாத
பஞ்சபாதகப்பேரை டுத்து உலுத்தர்களைக்
கெஞ்சியவர்களைய டுத்து உழாமலே

சஞ்சமலர்ப்பதங்கொ டுத்து ஆண்டருளென்று
வஞ்சிசிவகாமிதொழும்
மணவாளனைத் தித்துக் (கொண்டா)

ஒருநாற்புறமதிகள் சொலிக்க ஊரெல்லைச்சுற்றி
வருவார்திரும்புவார் களிக்க சிரசின்மேலே
இருகைகுவித்துவாழ் வளிக்க வேண்டுவாரிந்தத்
திருநாளைப்போகுவார் மிருக்க ஆகையாலிந்தப்
பெருவாழ்வடைவாரிவர்
பேதமில்லையே புரைக்க (கொண்டா)

வசனம்.

இப்படி நந்தனுர் வீதியைச்சுற்றி சந்நிதியில்வந்துதடிவிழுந்தா ற்போ லுடல்படியப் பணிந்து புழுதியடப் புரண்டுஆனந்தமடைக் கூ திருத்தசபைதெரிந்து தெரிசனம்பண்ணுவார்.

இராகம்-லாவணி-ஆதிதாளம்.

சபாதெரிசனங்கண்டான் நந்தனுஞ்
சபாதெரிசனங்கண்டான்-சணிதபி
ரபாவமாகிய சபாபதியிருக்கும் (சபா)
சதாகாலமும்வேதங்கள் மொழிந்திடுஞ்
சிவாகாரமாய்செழித்து வளர்ந்திடுந்
தில்லைமூவாயிர முனிவர்கள்கூடும்
அல்லும்பகலு மவரவர்நாடும் (சபா)

வசனம்.

நந்தனுர் தெற்குவீதியில் நின்று சபாபதியை நோக்கித் துதி பண்ணுவார்.

இராகம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.

ஜெயஜெகதீசா-அதிசுந்தரகுஞ்சிதபாதா-ஓஜெயஜெகதீசா

அநுபல்லவி

தில்லையைபக்கண்டேன் தேறித்தெளிந்தேன்
எல்லையிற்நின்றே னினிப்பிறவேன்காண்
எனக்கினியார் கரும்புபோ லினிக்குதுபார்வீடு
ஆசாபாசத்தைவேரறவெட்டி பானந்தத்தின்முழங்காட்டி.

னைக்குமிறையாருக்குங்கிடையாது இந்தக சம்பாருக்குனிமையேது
சாருந்தமென்றிங்கே வந்தேன்சாமியாருக்கு
டமைபடைந்தேன்ஜென னுதிகளான்மிகநொந்தேன்
வேறொருதெய்வங்களை வருந்தேன் (ஜெய)

சரணங்கள்.

தென்றிசைக்கோர்வந் தழைத்திடும்வேளையில்
பெண்பிள்ளைகள் பேயோட்டம
நடத்திசெதிய பெருக்கூட்டம்
காதும்கமுனர்திண்டாட்டம் ஒருநம்பிக்கைதாளும்
காவனக்கருள்புரிந் தாருமேவென்று
கனவிலாகினும்வாருந் தட்டியெழுப்பிக்கவலைகளைத்தீரும்
அடிமையென்று மனதாகிழ்ந்துவாரும்
தில்லைவெளியில்வாடா வென்றுசேரும்னுய் (ஜெய)
அரகரசங்கரனே பொன்னம்பலத்தாண்டவனே
பரமதயாபரமூர்த்தியென் றடிபணிந்தேன்மனங்கனிந்தேன்
சாதியில்சின்னவனுனுல்முன் வீதியில்வந்தேனுகாதோ
பாதகஞ்செயினும் சிதம்பரமென்று
பகர்ந்தால்பழவினை போகாதோ
தீநிலாவெருந் தவத்தார்வந்தால்
தெரிசனஞ்செய்வேன் போகாதோ
ஆதிபராபரமாகியவுனைக்கொண்டாடிவேன் பாடுவேன்தேடி
[வேன்நாடுவேன் (ஜெய)
அபாரமாகியசமுசாரம் சதாவிஷபகாமதிகோரம்
உபாயமறிந்துகரையேறப்படாது செகதிசாமாய்
விலாசகாமிதமிந்தஜெகம் அனேகசஞ்சிதவாசனைகள்
விவேகமென்கிறபாவனையால் நிவாரணம்பண்ணும்பெரியோர்கள்
பண்ணியதொழிலின்பலனறிவார் பாலகிருஷ்ணன்தொழுங்கழல
[ணிவார்
என்னியபடியேதவமுறுவர் எனதுனதென்றமுறையிடுவார்
சபாபதிபண்ணியகமாதிக்கிருந்தியறுபடாதபேதைகளைவிடாதேயும்
நிராசபாபதிவெகுகிருபாநிதியுன்பிரதாபமதியென்சுவாவம்பறையன்

விருத்தம்.

வாட்டிவொருடல்வேர்பதமுனிடைவருந்தி
ஈட்டிவார்மூலக்காரணமதிமலைடைமுகட்டின்
மாட்டுறைசசிலையருந்தியவில்லையன்றன்னைத்து
னாட்டிக்கால்சத்திறைதந்திசிம்பலைத்தாரே.

இ-ம்-இந்துஸ்தான்-காபி-ஆதிதாளம்.

பல்லவி.

நாதாந்தரீபாடியபாதம் தக்திக்தெய்தத்திக்தெய் யென்றாடியபா
ஆதாரவாக பதஞ்சலிமாமுனிக் கானந்தநாடக மாடுந்திருவடி [தம்
ஆகமவேத புராணங்களோதிய யோகிகளாமே தேடுந்திருவடி ()
இந்தைமகிழ்ந்து குவிந்திடவேபதி சுந்தராஞ்சிதபாதம் [தம்
பாராளந்திடுங்கோ பாலகிருஷ்ணன் துதிப் பாடிப்பாவிப்பணியும்பா

வசனம்.

நந்தனார் பிறவிப்பிணிக்கஞ்சி துதிபண்ணுவார்.

இ-ம்-லாவணி-ஆதிதாளம்.

அம்பலவாணவுன் சரணமடைந்தேனேழை
ஆதரித்தாளுவதுன்பார மல்லவோசொல்லவோ
எடுத்திடுஞ்சென னங்களைக் கெழுதத்தொலையாதெய்பாடு
இன்னமும்பிறந்திடுவேனோ நடேசனேஈசனே
ஆசையெனும்பெருங்காட்டிலே யாற்றுமுழுமுடன்
அகலவிடாதேயும்நம்பினே னுன்னையையனேமெய்யனே
பாராளந்தகோபாலகிருஷ்ணன் பணியுமலர்ப்பாதம்
பாவியென்னுள்ளுறவே கருணைபாருமேவாருமே

வசனம்;

அம்பலத்திலாடும் நடனத்தை வர்ணித்துச்சொல்லுவார்.

இ-ம்-சங்கராபரணம்-ரூபகதாளம்.

பல்லவி.

ஆடியபாதா இருவர்கள் காணும்விநோதா

அநுபல்லவி.

ஆடியபாதா வயனுமாலுந்தினம்
தேடியுங்காணுமற் றிரைமறைவாக
தித்தித் தித்தித் தித்தித் தித்திடென்று (ஆடியபாதா)

சரணங்கள்.

வீரவெண்டையுஞ் சிலம்பசைந்திட
மேவுஞ்சடையும் புலியசைந்திட
சாருந்தொண்டர்கள் மனங்குவிந்திடச்
சாலோகாதி பதவியுந்
தந்தோம் தந்தோம் தந்தோம் தாமென்று (ஆடியபாதா)

வேதமுனிவர்கள் பாடவுஞ்-சன
காதியோகிகள் கூடவும்-வெகு
நாதமெங்கினு மூடவுந்-திரு
நந்திமத்தளம் போடவுந்
தருந்தருந் தருந்தருந் தருந்தருந் தருமென்று (ஆடியபாதா)
பாலகிருஷ்ணன் துதிகள்செய்திடப்
பண்ணவர்கள்பூ மாரிபெய்திடச்
சீலமுள்ளசிவ காமிமகிழ்ந்திடத்
திருச்சிற்றம்பலத் தரசனுந்
தாந்தாந் தாந்தாந் தாந்தாந் தாமென்று (ஆடியபாதா)

வசனம்.

நந்தனார் அடிமைத்திறங்காட்டிச் சொல்லுகின்றார்.

இ-ம்-தெண்டகம்-ஆதிதாளம்.

அறிந்தறியாமலேசெய்தபராதமையா-என்னை
ஆண்டவனே தில்லைத்தாண்டவராயா அடிமையுன்சரணம்
பருகியவண்டபகிரண்டங்கள் கடந்திடுமத்தாவுன்சரணம்
பதஞ்சலிக்காகநடம்புரியுந்திரு வம்பலக்கூத்தாவுன்சரணம்
நடுவுமாதியுமந்தமுமொன்றுமிராத நிராமயனேசரணம்
பொங்குமானந்தக்கடலேவெளியே யறிவின்னறிவேயுன்சரணம்
என்றும்நித்தநிரஞ்சனநிஷ்கள நிர்க்குணரூபாவுன்சரணம்
கருதிநின்மகிமைகண்டோதரியாத கடையேனுன்சரணம்
எள்ளுக்குளெண்ணெய்போ லெங்குநிறைந்தயீசாவுன்சரணம்
எட்டிரண்டுமறியாதவன் கனகசபேசாவுன்சரணம்

வசனம்.

இப்படி அநேகவிதமாய் கொண்டாடி உட்புகுந்து தாண்டவம்பாராத குறைகொண்டு சுவாமியை நானுள்ளே வரலாமோவென்று கேட்கிறார்.

இ-ம்-தஞ்சை-ரூபகதாளம்.

பல்லவி

வருகலாமோவையா-உன்ற
னருகில்நின்றுகொண்டாடவும்பாடவும் (வருக)

அநுபல்லவி.

பரமகிருபாநிதி யல்லவோ-யிந்தப்
பறையனுபசாரஞ் சொல்லவோ-உந்தன்
பரமானந்தத்தாண்டவம் பார்க்கவேநானங்கே (வருக)

சரணங்கள்.

பூமியிற்புலையனுகப் பிறந்தேனே-நான்
புண்ணியஞ்செய்யாமல் இருந்தேனே
சாமியுஞ்சந்நிதி வந்தேனே-பவ
சாகரத்தையு மீறந்தேனே—கரை
கடந்தேனே சரணா மடைந்தேனே-தில்லை
வரதாப்ரதாபமும் பாபமுந்தீரவே (வருக)

வசனம்.

இப்படி திருநாளைப்போவாரென்றும் கீர்த்திபெற்றநந்தனார் தில்லையில்வந்து கொண்டாடும் பத்திமார்க்கத்தை ஆதிசேடனுலு மனுவளித்துச் சொல்லக்கூடாது பத்திஞான வைராக்கிய சாஸ்திரங்களை குடியிருக்கும் ஊரின்பேர் சொல்லக் கேட்டறியாத வேதையாகிய கோபாலகிருஷ்ணனென்னும் பெயர்கொண்ட என்று சொல்லத்தகுமா ஏதோ காறுனாறக் கூறியதால் பெரியோர்கள் பிழைபொறுக்குங் கடமையென்று சொல்லி வணங்குகிறார்.

சிந்து.

இதுதானோதில்லைப்பதி-என்று-எக்களித்தாராடிக்கொக்கரித்தார்
ஐயரவுஞ்சந்நிதியைக்-காண-வாசைகொண்டெழுந்தேநேசமுடன்
தெருவிற்பொடித்துளோ—அள்ளித்-தேகமுழுதிலுந் தாகமுடன்
தரித்தார்திருநீறாய்—நாலு-சாஸ்திரவேதங்கள்பார்த்துணரும்
பெரியோரிருக்குமிடம்.

வசனம்

நந்தனார் அந்தத்தில்லைத்தலம் இப்படியிருக்குதென்று சொல்லுகிறார்.

இ-ம்-செஞ்சுருட்டி-தாளம்-ஆதிதாளம்.

ஆனக்கள்வேதியர்கள்சிவனடியார்கள்கூட்டம்-மனோ
வைராக்கியப்போதும்வினையின்றியோகிமுனிகளுட்டம்-பூ
சைகளிதுவைசைசெய்துவீதைப்போற்றுவார்களாட்டம்—அதி
லோகமாகவெங்கேயாகிலும்வெளியேபோகவேனுமையே
இங்கிருக்கலாகாதையே இங்கிருக்கலாகாதையே
காலிப்பனறாயனிவ்வேளையிலேயாமெங்ஙனகித்திசனத்தாலதோ
பாதகமலங்களைத்தொடப்போமோ
பாவமென்னைப்பிரிந்துதொலைப்போமோ

ஆகாதாகாதையே-இங்கே-ஆகாதாகாதையே
வேள்விசெய்யும்புகை மேலுமெழும்பிப்போகுதையே
புண்ணியவான்கள் புரியுந்தவமுடன்
ஆசாரிவனென்று ஆடிப்பாடிக்கொண்டு
பரிவுடன்றனையிர் தட்சணைவருமிடம் (ஆகாதாகாதையே)
மணிபாடுதுவெகு சனங்கூடுது-வீதி
வலமாகுது திருப் பதம்பாடுது-உள்ளே
நடமாடுதுபணி விடைபோகுது-பர
வசமாகுதுமெத்தப் பயமாகுது-இங்கே (ஆகாதாகாதையே)
தீண்டாதேயிங்கே வேண்டாதேசம்மா
இரையாதேயிங்கே திரியாதேயென்னைப்
பாராதேபடி யேறாதேயுள்ளே
போகாதேவா லாகாதேயென்பார் (ஆகாதாகாதையே)

சிந்து.

பெரியோரிருக்குமிடம்-இந்தப்-பேயனிருப்பதுஞாயமல்ல
நாறேபறைச்சாதி-இல்லை-நாதன்தெரிசனமாதரவாய்ப்
பண்ணப்படுபாவி-இந்தப்-பாரிலிருப்பதுசீரலவே
என்றேகுளத்தோரம்-புக்கி-ஏங்கினார்துயர்நீங்கிகின்றார்
ஓயாப்பெருங்கவலை-கொண்டு-உள்ளங்குழைந்திடவெள்ளமனக்
கண்ணீர்கரைபுரள-இரு-கைதொழுவாரவர்மெய்தொழுதார்
கீழேபுரண்டழுதார்.

திருநாளைப்போவார்புராணம்.

விருத்தம்.

செல்கின்ற போழ்தந்தத் திருவெல்லை பணிந்தெழுந்து
பல்குஞ்செந் தீவளர்த்த மயில்வேள்வி யெழும்புகையு
மல்குபெருங் கிடைபோது மடங்களு நெருங்கவுங்கண்
டல்லுந்தங் குலநினைந்தே யஞ்சியணைந் திலர்நின்றார்.

வசனம்.

திருநாளைப்போவார் சிதம்பரத்துக்குப்போனபொழுது அந்த வெல்லையைக்கண்டு நமஸ்கரித்து எழுந்து விருத்தியாகச் செவ்வ அக்கினியைவளர்த்தி ஆகுதிசெய்கின்றயாகத்தால் உண்டாகியபு கையும் மிகுந்த பிராமணப்பிள்ளைகளின் கூட்டம் அடிக்கடி வேத மோதுகின்ற மடங்களையுங்கண்டு குறைந்தாகிய தம்முடைய குல த்தை நினைந்து உள்ளே போவதற்குப் பயந்து போகாமல் நின்று விட்டார்.

இதுவுமது விருத்தம்.

நின்றவரங் கெய்தரிய பெருமையினை நினைப்பார்முன்
சென்றிவையுங் கடந்தூர்சூ ழெழிற்றிருவா யிலைப்புக்கா
குன்றனைய மாளிகைக டொருங்குலவும் வேதிகைக
ளொன்றியமூ வாயிரமங் குளவென்பா ராகுதிகள்.

வசனம்.

சிதம்பரத்தெல்லையில் நின்றுகொண்டிருந்த திருநாளைப்போவார் தாம் உள்ளே அடையக்கூடாத் அக்கோயிலின் பெருமையை நினைப்பாராகில் முதலில் அந்தவெல்லையுங்கடந்து ஊரைச்சுற்றியிருக்கு மதிலின் திருவாசலை அடைந்தார் அங்கே திண்ணைகள் பொருந்திய மலைகள்போலுயர்ந்த மூவாயிரம்வீடுகள்தோறும் ஓமங்கள்செய்யப்படுகின்றனவென்று சொல்லிக்கொள்வார் சுவாமியைப்பூசிக்கின்ற தில்லைமூவாயிரவருடைய வீடுகளை மாளிகைகள் மூவாயிரமென்றூர் வேதவிதிப்படி யாகுதிசெய்யும் பிராமணர்களுடைய வீதியில் தாம் போகக்கூடாதபடியால் அதைநினைந்து தன்குலத்தையிகழ்ந்து இங்கிருக்கலாகாதென்று அவ்விடம்விட்டு ஒருகுளத்தருகில்வந்து சுவாமியைப்பாராதசென்மம் ஏன்படைத்தாயென்று தாழப்புரண்டழுவார்.

இ-ப்-சரசாங்கி-ரூபகதாளம்.

பல்லவி.

இந்தச்சடலம்வந்தவா றேதென்றறிகிலேன்
நானேதென்றறிகிலேன்

அநுபல்லவி.

சந்ததமுந்தில்லை யம்பலத்தானைச்
சிந்தித்துமாயச் சிக்கறுக்காமல் (இந்தச்)

சரணங்கள்

அங்கமலங்களைப் போக்கிடுஞ்சிவ
கங்கையிலாடிக் களங்கமறாமல் (இந்தச்)

ஆடும்நடனங்கண் டானந்தமாகிப்
பாடிப்படித்துப் பணிந்துகொள்ளாமல் (இந்தச்)

அஞ்சக்கரத்தை யெடுத்துருவேற்றி
வஞ்சப்பிறவி மயக்கறுக்காமல் (இந்தச்

பாலகிருஷ்ணன்றொழும் பாதத்தைக்கும்பிட்டேன்
சீலமுள்ளமூர்த்தி சித்திபெறுமக் (இந்தச்)

இ-ம்-தன்னியாசி-ஆதிதாளம்.

பல்லவி.

கனகசபாபதிதெரிசனம் ஒருநாள் கண்டால்கலிதீரும்

அநுபல்லவி.

ஜனகமகாமுனி கைதொழுதேத்திய
தினகரகோடிதே சோன்மயமாகிய (கனகச)

சரணங்கள்.

மனதிலொடுங்கிய கல்மிசப்போக்கும்
மாயப்பிணியதனை மறுவடிவாக்கும்
ஜெனனமரணசமு சாரத்தைநீக்கும்
திருவடிநிழலிலே கூட்டியேகாக்கும் (கனகச)

சுருதிமுடிகளிலும் சொல்லிக்கொண்டாடும்
தூயவெளியையொளி யாகவேகூடும்
தருமநெறியுந்தவ றுதுளாநாடும்
ததிங்கணத்தோமென்று தாண்டவமாடும் (கனகச)

பற்பலயோசனை செய்வதுந்தொல்லை
பரகதியடையவு பாயமுமில்லை
அற்புதமாகவே தானொருசொல்லை
அணியுங்கோபால கிருஷ்ணன்பணியுந்தில்லை (கனகச)

இ-ம்-கரகரப்பிரியை-சாப்புதாளம்.

பல்லவி.

கட்டைகண்டத்தேறவேணுமே கனகசபாபதிநடனம்
கண்டுகளிக்கவந்த நந்தனார் (கட்டை)

நட்டைகண்டதே நட்டமோசென்மம்
கெட்டதல்லவோ யிஷ்டமறியேன் (கட்டை)

முத்தியளிக்கும் பத்தியிலேயென்
சிற்றம்பலவன் சித்தமறியேன் (கட்டை)

வசனம்.

தேகம்படைத்தால் சிவபத்திபண்ணவேண்டுமென்று நந்தனார் சொல்லுவார்.

௯-ம்-தண்டகம்-ரூபகதாளம்.

கண்ணிகள்.

தேகம்வந்தவாறுசொல்லவோ சிதம்பரேசனடியைத்
தினமுந்தொழுதிருப்ப தல்லவோ
இந்தவிஷயசுகத்தைநாடுமோ பாவிமனக்குரங்கு
மிருப்பிடங்காணுமோ லோகமோ
தில்லைத்தலத்தைக்கண்டுபோச்சுதே உள்ளேசென்றுநடன
தெரிசனம்பண்ணுமல் போச்சுதே
மறையவென்றுசென்மம்போகுமோ பாழ்விஷயாலின்னம்
பாரில்வந்துபிறக்க லாகுமோ
அடிமையென்றுவந்தேனுய்யுமோ ஒன்றையுமறிந்திலே
னம்பலத்தெய்வமென்ன செய்யுமோ
பார்த்ததெல்லாமழிந்துபோகுமோ கோபாலகிருஷ்ணன்
பணியும்பரமன்கருணை வேணுமோ

வசனம்.

சிதம்பரதெரிசனங் கண்டவருக்குச் சென்மமில்லையென்பார்.

இ-ம்-மோகனம்-ரூபகதாளம்.

பல்லவி

தெரிசனங்கண்டார்க்கு மறுசென்மமில்லை
வரிசையுடனம்பலவன் வாழ்கின்றதில்லை (தெரிச)

அநுபல்லவி.

இரவுபகலிடைவிடாதேகாத பத்தி
இன்பமுறுமானந்தம்பொங்கிவரும் நத்தி
பாவிவருமவனைருகிலணிமாதி சித்தி
பணிந்துவந்துசிற்றம்பலத்தைவலஞ் சுத்தி(தெரிச)

சரணங்கள்.

சொப்பனமென்றிவ்வுலகந்தோன்றிவரும் வேதம்
சொன்னததுநீயென்றபடியாகும் போதம்
அற்புதமிர்தக்கமொழிதானவைகை நிதம்
அனவரதந்திருநடனமாடி வரும் பாதம்(தெரிச)
அல்லும்பகலோயாதவடியார்கள் கோஷ்டி
அரகராவென்றமிர்தபானமதைப் போட்டி
தில்லைவாழந்தணர்கள்கைபிடித்தாள் கூட்டி
இக்கொலவேதிரைதிறந்துபாரவெளியைக் காட்டி(தெரிச)

நஞ்சுண்டகண்டனுக்குக்கொன்றைமலர் சாற்றி
நல்லதிருசாந்தனியும்பிகையைப் போற்றி
குஞ்சிதபந்தனதும்மை திலுற வேத்திக்
கோபாலகிருஷ்ணன்பெரும்நடராஜ மூர்த்தி(தெரிச)

வசனம்.

நந்தனார் தனக்கு தெரிசனங்கொடுக்க அம்பலவாணர் எப்போது வருவாரோவென்று விசாரப்படுவார்.

இ-ம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி

எப்போதுவருவாரோ எந்தன்கலிதீர
எப்போதுவருவாரோ

அநுபல்லவி.

எப்போதுவருவாரோ எந்தன்கலிதீரச்
செப்பியதில்லைச் சிதம்பரதேவன் (எப்போது)

சரணங்கள்.

கற்பகம்வந்து நாதனைத்தேடும்
கற்பனைகள்முற்ற காட்சிதந்தாள (எப்போது)
அற்பசுகவாழ்வி லானந்தங்கொண்டேன்
பொற்பதத்தைக்காணேன் பொன்னம்பலவாணன் (எப்போ)
பாலகிருஷ்ணன்போற்றிப் பணிந்திடுமீசன்
மேலேகாதல்கொண்டேனே வெளிப்படக்காணேன் (எப்)

இ-ம்-துக்கடா-ஆதிதாளம்.

வருவாரோ அருள்புரிவாரோ—எந்தன்
மனதுசலிக்குது நானென்னசெய்வேன்
அரகரசங்கர வம்பலவாணன்
ஆதரிக்கத்திருப்பாரோ ஒருக்கால்வருவாரோ

வசனம்.

நந்தனார் தான் சின்னஜாதியானதால் வருவாரோ வாராரோ வென்று சஞ்சலப்படுவார்.

இ-ம்-சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.

வாராமலிருப்பாரோ ஒருக்கால்
வருவாரோவறியேன்

அநுபல்லவி

வாராமலிருப்பாரோ பதஞ்சலிமுனிக்குப்பொற்
பாதங்கொடுத்தபர மேஸ்வரன்றானென்று (வாராம)

சரணங்கள்.

கனவினில்வந்து கழனிமுழுதுங்கட்டு
மனதுமகிழ்ந்துபின்னை வாவென்றுசொன்னவர் (வாராம)
கலக்கமறவேயவர் காலுக்குக்கும்பிட்டு
குளத்தங்கரையிலநின்று கூப்பிடும்வேளையில் (வாராம)
அல்லலறுத்துப்பர மானந்தமேதரும்
தில்லைத்தலத்தைக்கண்டு தெரிசனம்பண்ணியும் (வாராம)

வசனம்.

நந்தனார் இதுவரையில் வாராதபடியினாலே இனிமேல் தில்லைத்தலத்தை விடாமற்சுற்றிவந்து தேகத்தைத் தள்ளுவோமென்று நிச்சயம் பண்ணுவார்.

இ-ம்-செஞ்சுருட்டி-ஆதிதாளம்.

பல்லவி.

இன்னம்வரக்காண்கிலேன் என்னசெய்குவேனவர்

அநுபல்லவி.

இன்னம்வரக்காண்கிலேன் தில்லைபொன்னம்பலவாணனை [ரே
பண்ணையுட்கட்டென்னையு மிங்கேவாவென்றுசொன்னார் மறந்தா

சரணங்கள்.

சொல்லும்பொருளுமந்த சோதியேமகிழ்ந்துவாழுந்
தில்லையைவிடாமற்சுற்றித் தேகத்தைமாற்றிக்கொள்வதான்ற ( )
பாலகிருஷ்ணன்போற்றும் பாதச்சிலம்புகுலுங்க [ந்தானை
சோலையுடனேகண்டேன் குறைகள்தீர்ந்துதென்றுசொல்லவு

வசனம்.

நந்தனார் இப்படிச்சொல்லிக்கொண்டு கண்ணீர்சொரிந்து பு
ரண்டழுகிறார்.

சிந்து.

மேழுபுரண்டழுவார் - ஒன்றுங்-கேள்விமுறையில்லையோ நாதாவென்றே தலைகுனிந்தார்-எந்தன்-வேதனையைக்கண்டு ஆதரிக்குந் தெய்வமில்லையோ தோ-பாவி-சித்தந்தெளிய விரகதிங்குவா வென்றழையாரோ - விண்ணில்-வானவர்கள்போற்றும் மூணமிலா கனகசபைநடனங்-கண்டு-காயங்களித்திட நாயடியேன் வருந்தித் தவிக்கிறேனே-எந்தன-வாறுதருசு வினையே அடடா இதென்னசென்மம்

வசனம்.

இந்தப்பிராமணர்களுடைய வீடுகள் இத்தன்மையாயிருக்க எனக்கு அவ்விடத்திற்குப்போவது அரிதென்று பயந்து அந்தஸ்தலத்தின் மதிளின்புறத்தில் அளவற்றபேரன்பு சமானமில்லாமல் வரை மனமுருகி கும்பிட்டுக்கொண்டு சொல்லுதற்கரிய எல்லையை வலஞ்செய்துகொண்டு போவார்.

விருத்தம்.

சாதிபேதமுன் குணங்குறியாவையுந்தள்ளி
ஆதிபாதநான் கூவினேன் றிசைதனிலணைந்தும்
மாதவம்புரிதொண்டர்கள் பணிதிரண்மறைக்கக்
கோதிலாதொருதொண்டிப் பாவிக்குக்குறையோ.

வசனம்.

இப்படிசரணாகதியென்று உன்னைநம்பிவந்து நான்பப்படலாமா சிவனே சிவனே யென்று பெருங்குரலிட்டு தனக்கு சென்மம் போதும் போதுமென்று சொல்லுவார்

இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

போதும்போதுமையா எடுத்தஜென்மம்
போதும்போதுமையா

அநுபல்லவி.

மாதவமுனிவர்கள் வந்திக்குந்தில்லை
வனத்திலனுதினமும் வளருமம்பலவா (போது)

சரணங்கள்.

கோத்தாமெனியும்புழு ஒத்தைதகரம்புகளும்
காத்தமலங்களுறு மூத்திரக்கும்பியும் (போது)

சந்ததமுமடியேன் யெந்திரம்போலேதான்
வந்தெழும்வகையிலும் நொந்துமிருந்தேன் (போது)
சொழுதகவாளிகள்போலே யுறுத்துமிரும்புமல்லை
வயிற்றிலிருந்துபடும் வருத்தமென்சொல்வேன் (போது)
மாதர்கள்மீதினில் மையல்கொண்டேங்கினுள்
வேதனைகொண்டு வெறும்பயலானேன் (போது)
அண்ணன்கோபால கிருஷ்ணன்பணியுந்திரு
வம்பலமேவும்பொன் னம்பலவாணா (போது)

வசனம்.

ஜென்மமேகஷ்டம் அதிலும புலையனாய்ப்பிறப்பது மிகவுங்கஷ்டமென்று, நந்தனார் சொல்லுவார்.

இ-ம்-கரகரப்பிரியை-ரூபகதாளம்.

பல்லவி.

இந்தஜென்மம்வேண்டாம் இனி
எந்தஜென்மம்வந்தாலும்வரட்டும்

அநுபல்லவி.

நந்திரடியினில் மந்திரங்கள்சொல்லி
வந்தனங்கள்செய்து சிந்தைதமகிழாத (இந்த)

சரணங்கள்.

வேதமறிந்தவர் பாதம்பணிந்தவர்
போதமடைந்திடாத் தீதடைந்தேன்பாவி (இந்த)
பாவிப்பறையாநீ தூரவிலகென்று
ஆவிதனித்திடப் பாரிலுரைத்திடும் (இந்த)

திருநாளைப்போவார்புராணம்.

விருத்தம்.

இப்பரிசா யிருக்கவெனக் கெய்தவரி தென்றஞ்சி
யப்பதியின் மதிற்புறத்தி லாறாத பெருங்காத
லொப்பரிதாய் வளர்ந்தோங்க வுள்ளுருகிக் கைதொழுதே
செப்பரிய திருவெல்லை வலங்கொண்டு செல்கின்றார்.

இ-ம்-ஆகிரி-ரூபகதாளம்.

பல்லவி.

தில்லைவலஞ்சுற்றினர் சிதம்பரத்
தெல்லைவலஞ்சுற்றினர்

அநுபல்லவி

தில்லைவலஞ்சுற்றினர் தேவருமறியாத
எல்லைவாசல்கடந் திருளறவேண்டி (தில்லை)

சரணங்கள்.

சாதிக்குறையைத்தானே சந்ததமுநினைந்து
வேதனைக்கொண்டுள்ளம் வெதும்பியேவாடி
பாதிப்பிறையணியும் பரமசிவனைக்கண்டு
போதமடைந்தபரி பூரணமாக (தில்லை)
மோகவலைக்குட்சிக்கி முழுமூடனாகவே
யோகமேரிலையென்று புத்திகெடாமலுமை
பாகனைவேண்டிநற் பரவசமாகியே
ஏகாசத்திற்றன்னை யிருத்திச்சுகிக்கவே (தில்லை)
ஓராறுதாண்டியே வுண்மணிக்கோட்டைகள்
சீராறுங்காணாத சிதம்பரரகசியம்
ஈராறுகால்கொண்டு யிருத்திப்புலனைந்து
பேராறுபெருகியே பெருவெளியான (தில்லை)

வசனம்.

இப்படித் தில்லைத்தலத்தை விடாமல் சுத்திவந்தால் தன்னிடம் சுவாமி வருவாரென்று மனதைப்பார்த்துச் சொல்லுகிறார்.

இ-ம்-யமுனகலியாணி-ஆதிதாளம்.

பல்லவி.

வருவார்வருவார்மனமே நீமயங்கா
திருசொன்னேன் சொன்னேன் (வருவார்)

அநுபல்லவி.

வேணதுதருவார் கருணைபுரிவார் தில்லைத்திருவம்பலவன்
பசித்தியுந்தருவார் சாதியில் பறையனென றுபாரார்-நீயதை
உறுதிகொள்ளவேணும் மெய்யன்புடனே
ஆரவென்றெருதாஞ் சொன்னாலும்போதும் (வருவார்)

வசனம்.

நந்தனார் தன்னை ரட்சிக்கும் சமயம் இதுதானென்று சொல்லுவார்.

இ-ம்-தசனாரி-ஆதிதாளம்.

பல்லவி.

இதுநல்லசமையமையா யெனைரட்சிக்க
இதுநல்லசமையமையா

அநுபல்லவி

இதுநல்லசமையமையா யென்னைரட்சித்தாளும்
சசமகேச நடேசசபேசா (இதுநல்ல)

சரணம்.

பாலகிருஷ்ணன்போற்றும் பாதங்களைக்காட்டி
சிவமுளமுத்தி சேருவதற்காக (இதுநல்ல)

வசனம்.

நந்தனார் இவ்வளவுசொல்லியும் இரங்காமற்போகவேண்டிய தென்னவென்று சொல்லுவார்.

இ-ம்-பியாகு-ரூபகதாளம்.

பல்லவி.

இரக்கம்வராமற்போனதென்ன காரணஞ்சுவாமி
இரக்கம்வராமற்போனதென்ன

அநுபல்லவி.

கருணைக்கடலென்றுமென்றன் காதில்கேட்டுநம்பிவந்தேன் (இரக்)

சரணம்.

ஆலமருந்தியண்டருயிரை யாதரித்தவுன தகீர்த்தி
பாலகிருஷ்ணன்பாடித்தினமும் பணிசதிகோடீரஜமூர்த்தி
பழிவெகுதன்காரணசெய்கிலும் பாவிக்கிஞ்சிதம்பரமென்று
மொழிகற்றவர்வழிபெற்றவர் கனகசபாபதியின்னம் (இரக்)

கலிநிலைத்துறை

அண்ட மானதி யானையும் வென்றிக ளனைத்துங்
குன்றி லாத்தவம் புண்ணிய மாமனை ருளித்துமு
வின்றி டாமலே யீசனுக் களித்தவி வேகம்
மன்று ளாடிய பாதத்தி லேமனம் வருமே.

வசனம்.

நந்தனார் மகாபுண்ணியசாலிகளுக்கு முத்திவருமேயன்றி தனக்கு வாராதென்று சொல்லுவார்.

இ-ம்-தஞ்சரி-ஆதிதாளம்.

சாதியிற்சாம்பனிடம் புலையனுக்குபாசதியோ வேத
சாஸ்திரநான்கினு மோதரியாததுவிதியோ
நல்லோர்க்கனைத்தகனே வகைதெய்வ தருந்திடதேகம் மன்றுள்
நடனதெரிசனங் காணவென்றாலநிமோசகம்
எந்தவழியைபக்கன் மேடறவதாநாயம் செக
தீசனுக்கன்றோ தெரியுமந்தவுபாயம்
சிதம்பரம்போவேனென் றுரைபாதபாவி இந்த
சென்மமெடுத்துவீ ணாசைத்தவிக்குதென்னாவி

வசனம்.

நந்தனார் இப்படி நான் ஈனசாதியாயிருந்தபோதிலும் உம்முடைய சரணாரவிந்தபதத்தை மறந்தவனல்லவென்று சொல்லுகின்றார்.

துக்கடா—இ-ம்-மணிரெங்கு-ரூபகதாளம்.

கண்ணிகள்

எப்படிக்கெட்டாலுமுந்தன் பொற்பதமறவேன்காணும்
எப்படிக்கெட்டாலுமுந்தன்
அற்புதமாகியதில்லை யம்பலவாணரேயென்
சொற்பனத்திலுமையன்றி மெய்ப்பொருளாகவும்வேண்டேன்
தப்பிதமெத்தனைசெய்கினும்
கைப்பிடித்தாண்டுகொள்ளும் (எப்படி)

திருநாளைப்போவார்புராணம்

கொச்சகக்கலிப்பா

இவ்வண்ண மிரவு பகல் வலஞ்செய்தங் கெய்தரிய
வவ்வண்ணம் நினைந்தழிந்த வடித்தொண்ட ரயர்வெய்தி
மைவண்ணத் திருமிடற்றார் மன்றினடங் கும்பிடுவ
தெவ்வண்ண மெனநினைந்தே யேசறவி னொடுந்துயில்வார்

வசனம்

இந்தப்பிரகாரம் இராப்பகலாக வலம்வந்துகொண்டு உள்ளே போகக்கூடாததன்மை நினைந்து வருத்தப்பட்டயர்வுபொருந்திய அடியவர்வேசாரி கரியநிறமுள்ள கழுத்தினையுடைய சுவாமி கனகசபையில் ஆடுகின்ற கூத்தைஎப்படி தரிசிக்கலாமென்று விசனத்தோடும் நித்திரைசெய்வார் சற்றுநேரம் நித்திரைசெய்து பிறகு மறுபடியும் எழுந்து சொல்லுவார்

இ-ம்-கன்னடபியாகு-ஆதிதாளம்

பல்லவி

விருதாச்சென்மமாச்சே வந்தும்
விருதாச்சென்மமாச்சே

அநுபல்லவி

சதாகாலமுமையன் சந்நிதானத்திலிருந்து
நிதானம்பெறாமல் (விருதா)

சரணங்கள்

முத்தியளித்திடும் மூர்த்தியைக்கண்டு
பத்தியைப்பண்ணிப் பதமடையாமல் (விருதா)
பொற்கழலசையப் பொதுவிலிருந்து
தக்கவராடுந் தன்மையைப்பாராமல் (விருதா)
தில்லைக்கதிபதி தெரிசனங்கொடுத்து
எல்லையில்லாவென் றிரங்கியழைத்தும் (விருதா)

வசனம்

சுவாமி தனது பதவிக்கு யோக்கியமல்லவென்று தள்ளுவாரோ கொள்ளுவாரோ அப்படித்தள்ளினாலும் தில்லையிலேதானே என்தேகத்தை விடுவதேயன்றி திரும்பிப்போக மாட்டேனென்று சொல்லிப்புலம்புகிறார்

இ-ம்-புன்னாகவராளி-ரூபகதாளம்

பல்லவி

தள்ளுவாரோ எந்தனைக்கைக் கொள்ளுவாரோ

அநுபல்லவி

தள்ளிவிட்டாள்நான்போகேனே தனித்திருக்குஞ்சமயமல்லே
அள்ளிவிட்டேனென்னை யப்பனல்லவாணனெறுக்கால் (தள்)

சரணங்கள்

எனதுனதென் றபிமான மிசையறுத்திடைப்பண்ணி
பனமிறந்தது வெளியில் மருவாதபாவியென்று (தள்)
நாறுமிந்தப்பொய்யுடலை நானென்னினைந்தன்று
தூறுபட்டதுன்பமெல்லாந் துலைத்திடுதென் றுயிர்வெந்தும் (தள்)
பாலகிருஷ்ணன்தேடிவரும் பாதமலர்நான்கண்டேன்
வேல்விழியாள்மோகந்தொலைப்பிக்கைப்பற்றினேனென்று (தள்)

சிந்து.

அடடா இதென்ன ஜென்மம்-என்று-அந்தனூருமெல்லை சுற்றிவந்
திரவுபகலோயாமல்-இதை-ஈசன்கண்டுவிசு வாசமுடன் [தார்
பாலகிருஷ்ணன் பணியும்-திருப்-பாதமுள்ளதில்லை நாதனிவன்
கனவிலுருவாகி

திருநாளைப்போவார்புராணம்.

விருத்தம்.

இன்னறரு மிழிப்பிறவி யிதுதடையென் றேதுயில்வா
ரன்னிலைமை யம்பலத்து ளாடுவா ரறிந்தருளி
மன்னுதிருத் தொண்டரவர் வருத்தமெல்லாந் தீர்ப்பதற்கு
முன்னணைந்து கனவின்கண் முறுவலொடு மருள்செய்வார்.

வசனம்.

இப்படித் திருநாளைப்போவாரென்னும் நந்தனார் இரவுபகலோயாமல் தில்லைத்தலத்தைச்சுற்றிவருவதால் தேகவருத்தமடைந்து வருத்தத்தினால் மயங்கிச்சாய்ந்து நித்திரையடைந்தார் அந்தநித்திரையிலே நடராஜமூர்த்திவந்து காட்சிதந்து சொல்லுவார். எனக்கு மிகவும் பிரியமுள்ள நந்தனே உம்மிடத்தில் நம்முடைய பத்தர்களாகிய வேதியர்களை வரச்சொல்லுவோம் அவர்கள்முன் நீர் அக்கினிப்பிரவேசமாகி யெழுந்து மறைபிடித்து வேதியர்களுடனே சபாபிரவேசம் பண்ணுமென்றுரைசெய்து ஐயன் அந்தர்த்தானமானார். நந்தனார் கனவில் காட்சியானதைக்கண்டு களித்து விழித்தெழுந்து அளவில்லாதசந்தோஷங்கொண்டு நன்றியறிந்து சுவாமியைத் தோத்திரம்புரிந்து சொல்லுவார்.

இ-ம்-தெண்டகம்-ஆதிதாளம்.

பல்லவி.

சந்நிதிவரலாமோ சுவாமி தெரிசனந்தரலாமோ

அநுபல்லவி.

இல்லறவாழ்வாம் பனிமூடி
இருந்தேனன்றோ மிசவாடி
அல்லும்பகலும் கொண்டாடி
அறியேனைக் சபைநாடி (சந்நிதி)

சரணங்கள்.

விதியிலேசற்றே வந்திருந்தேன்
வேடிக்கைபார்த்துக்கொண் டங்கிருந்தேன்

சாதியிற்றாழ்ந்தவனென் றறிந்தேன்
தனித்திருப்போமென்றிங்கே வந்தேன் (சந்நிதி)
காலால்வீசிக்கனல் மூட்டி
கலைமதிமண்டலமே லோட்டி
பாலாறுபெருகவேயெனைக் கூட்டி
பார்த்தனுமில்லைநான் தோட்டி (சந்நிதி)

வசனம்.

நந்தனார் தான்கண்ட சொற்பனத்தை கொண்டாடுவார்.

இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்

பல்லவி.

சொற்பனங்கண்டுகொண்டேன்-அதிசயச்
சொற்பனங்கண்டுகொண்டேன்

அநுபல்லவி.

சொற்பனங்கண்டுகொண்டேன்-எல்லாங்
கற்பனையென்றறிந்தேன்-வேத
தற்பதவாக்கியமேவுருவாகிய
வற்புதநடனம்புரிய-இன்று (சொற்)

அம்பிகைமணவாளன்-மான்மழு
வணிந்திடுஞ்செந்தோளன்-செம
பொன்னம்பலந்தனிலாட-மத்தளம்
பேர்டமறைகள்பாட-கொண்டாட (சொற்)

மண்டலத்தோராசை-தீர்ந்து
மண்டபமணிமேடையாசை-சேர்ந்து
மனதுகனிந்துருக-மறலி
கருக-வரந்தருக-வருக (சொற்)

மங்கையர்மேலாசையில்லை-தாரையும்
வருந்தியழைக்கும்பொல்லா-காகிய
மாயைப்பணிவையும்-வெல்ல
பருந்துசொல்ல-வழியிற்செல்ல-நல்ல (சொற்)

பண்ணவர்முரசடிக்க-பதஞ்
சலிவியாக்கிரமாவர்பந்துதிக்க-மாயன்
கோபாலகிருஷ்ணன்-களிக்க
உடுக்கையெடுக்க-உ தசந்துறக்க-சிறக்க (சொற்)

வசனம்.

நந்தனார் தான்கண்டகனவு நிசமோ பொய்யோவென்று சந்தேகப்படுவார்.

இ-ய்-சூரிகாந்தம்—சாப்புதாளம்.

பல்லவி.

கனவோ நினைவோ கண்டது விளே

அநுபல்லவி.

மனதிலுறுதிகொள்ள வழியொன்றுங்காணேன் (கனவோ)

சரணங்கள்.

சித்திரைதனிலொரு சித்தனுருவாய்வந்து
முத்திதருவேனென்று நத்திப்பேசினதுண்டு (கனவோ)
ஆருமிகழ்ந்துதள்ளும் நாறும்புலையனென்னை
பாரும்பரமபதஞ் சேருமென்றழைத்தது (கனவோ)
கிட்டநெருங்கிவந்து தட்டியெழுப்பியொரு
வெட்டவெளியைக்காட்டி கட்டளையிட்டது (கனவோ)

வசனம்.

நந்தனார் தான் கனவிற்கண்டதுபோலே சுவாமி வருவாரோ வாராரோவென்று சஞ்சலப்படுவார்.

சாமராகம்-ஆதிதாளம்

பல்லவி.

வருவாரோவரந்தருவாரோ—எந்தன்
மனதுசலிக்குதையோவிப்போது

அநுபல்லவி.

திருவாருந்தென்புலியூர் திருச்சிற்றம்பலவாணன்
குருநாதனாகவந்தெந்தன் குறைதீர்க்கக்கனவுகண்டேன்
இருவினைப்பிணிகளைக் கருவறுத்திடுகிறேன்
பயப்படாதேயென்று சொன்னவர் (வருவாரோ)

சரணங்கள்

மலரயனாலும்வழுத்தறியா மகிமைபெறுநடராஜன்
கறையூருஞ்சேவடியை நம்பினவனல்லவோ
அநுதினஞ்சிவ சிதம்பரமென்ற
அடிமையென்றருள் புரிந்திடவிங்கே (வருவாரோ)

பணிமார்புஞ்செஞ்சடையும் பார்க்கமனமுவந்து
பணியுங்கோபாலகிருஷ்ணன் துதிபரமதயாநிதி
பவக்கடலைக்கடி பெருகுதுநிலைக்குமே
மலைக்குது கறையேற்ற (வருவாரோ)

வசனம்

நந்தனார் இப்படி அனேகவிதமாய் வருவாரோ வாராரோவென்று பலவிதமாய்க் கொண்டாடுகிறார்.

திருநாளைப்போவார்புராணம்

விருத்தம்

இப்பிறவி போய்நீங்க வெரியினிடை நீமூழ்கி
முப்புரிநூன் மார்பருடன் முன்னணைவா யென்னமொழிந்
தப்பரிசே தில்லைவா ழந்தணர்க்கு மெரியமைக்க
மெய்ப்பொருளா குனருளி யம்பலத்தே மேவினார்.

வசனம்.

நந்தனார் கனவிலேவந்து சொல்லிய நடராஜமூர்த்தி தில்லை மூவாயிரம்பேர்கள் கனவிலே சொல்லுவார் பத்தர்களே எனக்கு மிகவுமபிரியமுள்ள திருநாளைப்போவாரென்னும் நாமத்தைக்கொண்டு என்னைக்காணவேண்டுமென்று தன்னை காணிக்கைகொண்டு சாதியிற்றாழ்ந்தவனென்று மிகவும் குறைகூறிக்கொண்டு இங்கே வரலாகாதென்று பயந்துகொண்டு என்னைத்தவிர மற்றதெல்லாம் அநித்தியமென்று பத்திபண்ணிக்கொண்டு முத்தியடையவேண்டுமென்று தில்லையைச்சுத்திக்கொண்டு தெற்கு குளத்தங்கரையில் நின்று ஆடிப்பாடி ஆனந்தங்கொண்டிருக்கிறார் அவரை என்னைப்போல் நினைந்து நீங்களெல்லாரும்போய் அக்கினியில் மூழ்கச்செய்து அழைத்துவாருங்களென்றுசொல்லி சுவாமிமறைந்தார் இப்படிக்கண்ட கனவை மூவாயிரம்பேர்களும் பேரம்பலவாசலில்வந்து ஒருவர்க்கொருவர் பேசிக்கொள்ளுவார்கள்.

இ-ம்-சங்கராபரணம்-அடதாளம்.

கண்ணிகள்.

அதிசயமொன்றுகேளப்பா தீட்சதரே
அர்த்தராத்திரிபோதிலென்னே என்றன்
மதிபரவசமாகத் துதிமருவுமம்பல
வாணன்கனவில்வந்தான்
வானவர்தவமெனக்குமிகு வண்ணமாகக்கனவில்
வார்த்தையைத்தந்தாரென்கோடி ௨.௧

யாஸ்தமாகுமுன்ன மருட்படிக்கு
வமைப்பதுத்தமமென்றுரோடி
அப்போதங்குவந்த அப்பண்ணுதீட்சதர்
ஆமாமிதுவும்நிச்சயந்தான் என்கோன்
செப்பியசொற்படிச் செந்தீவளர்த்திடச்
செய்யவேணுமேவசியந்தான்
அவசியமென்றிதீர் காரியந்தெரியாமல்
ஆருக்கடுக்குமோர்புலையன் சிறந்த
தவசிரேஷ்டர்சூழுந் தலத்தில்வருவதற்குத்
தலைபத்தோ அவன்வந்தாலலைவன்
பத்தியுள்ளவனை பரமனுக்குயிர்த்தோழன்
பதஞ்சலிபுலிப்பாதர்சாட்சி இவன்
சித்தத்தின்படிசெய்து செனனக்கரைகடப்போம்
தெளிவீர்நீங்களிந்தச்சூட்சி
என்றாங்குசிவ சங்காதீட்சதர்
இன்னமுந்தாமசமேதோ நீசன்
ஒன்றுந்திருச்சந் நிதிக்குவருவதற்கு
வொருக்காலுங்கட்குத்தகாதோ
சொல்லுமென்றாரவ ராமென்றுருங்கட்குச்
சித்தத்திலுள்ளசந்தேகம் தெளிய
அல்லும்பகலுமோர யாமலேசாஸ்திர
மாராய்பவற்குமனோற்சாகம்
தரும்படிப்பேசிச் சந்தேகந்தெளிவது
தக்கதென்றுரைத்தமொழியே நம்பி
பெருங்கூட்டமாகவே கூடிச்சென்றாரவர்
வேதமறத்தக்கவழியே

வசனம்.

தில்லை மூவாயிரவர்கள் சாஸ்திரிமார்களிடத்திற் சந்தேகந் தெளிதல்.

விருத்தம்.

மறைக்கிழவ ரிவ்விதஞ்சென் றார்களாங்கே
மனுவிக்ய விகளாசிர் வாதஞ்செய்து
வந்தகா ரியமேதா வுரைப்பீரென்ன
மன்றுளா னவர்தங்கள் கனவிற்றோன்றி

குறைந்தமதிப்புலைச் சாதியில்வந்துதித்தோன்
கோதிலானந்தனெம்போ னவனல்லன்பன்
கூறுமில்லூரெல்லைவலம் வருவான்நாளை
கொணர்ந்தவனைத்தீமூழ்கச் செய்தோரப்பால்

முறைமையொடுசேர்ந்திதியில் நம்முன்பாக
விடுக்கவென்றுவருளிச்செய் தவர்மறைந்தார்
மூதுணர்ந்தோர்க்கிதுதெரியச் சொல்லவந்தோம்
மொழியுமாறுத்தரய்யா தென்றார்நீதி

அந்தவன்றோமத்தப் படிக்கேசெய்வ
தழகாகுமென்றார்பின் மகிழ்ச்சியாலே
அந்ததில்லைமாநகரத் தெல்லைசுற்றி
யாவர்நந்தனைத் தேடுவாரே.

திருநாளைப்போவார்புராணம்.

விருத்தம்.

தம்பெருமான் பணிகேட்ட தவமறையோ ரெல்லாரு
மம்பலவர் திருவாயின் முன்பட்ச முடனீண்டி
யெம்பெருமா னருள்செய்த பணிசெய்வோ மென்றேத்தி
தம்பரிவு பெருகவருந் திருத்தொண்டர் பாற்சார்ந்தார்.

வசனம்.

தமது பிராணனாகிய சபாநாதரிட்ட கட்டளையைக்கேட்ட தவமபொருந்திய பிராமணர்களெல்லாரும் அம்பலவாணனது கோயிற்றிருவாசலின் முன்புகூடிப் பயத்தோடு நம்முடைய ஆண்டவரருள்செய்த ஊழியத்தைச் செய்வோமென்று வணங்கி அன்புமேற்பட்டிருக்கும் திருநாளைப்போவாரைத் தில்லைமூவாயிரவர்கள் தேடவருகிறார்கள்.

இ-ம்-நாதநாமக்கிரியை-ஆதிதாளம்.

பல்லவி.

தொண்டரைக்காணகிலேனே தில்லையில்வந்த
தொண்டரைக்காணகிலேனே

அநுபல்லவி.

அண்டசராசர மெங்கும்படியளந்து
மன்றாடிய மன்னவர்க்கடிமை (தொண)

சரணங்கள்.

சொல்லும்பொருளுமற்றுச் சோதிமயங்கொண்
டல்லும்பகலுமற்ற வம்பலவாணன் (தொண)
அஷ்டதிசையும்பரி பூரணமாகவே
மட்டிலாதுவளர்ந் தோங்கியநாதன் (தொண)
வாசியடங்கிடு வணைவழிகண்டால்
தேசிகவடிவுடன் தெரிசனந்தந்திடும் (தொண)
பாலகிருஷ்ணன் பணிந் தேத்தியபாதன்
கோலச்சிலம்பணியுங் குண்டலநாதன் (தொண)

இ-ப்-இந்துஸ்தான்-காபி-ரூபகதாளம்.

பல்லவி.

திருநாளைப்போவார் தெரிசனங்காணத்
தில்லைமூவாயிர முனிவர்கள்வருகிறார்

அநுபல்லவி

பத்திவெள்ளமது கரைபுரண்டோடும்
பரமானந்தக் கடல்முழுகட்டும் (திருநாளை)

சரணங்கள்.

அரகரசங்கரா சிவனென்றுசொல்லும்
அநித்தியசடதுக்க மாயத்தைவெல்லும் (திருநாளை)
அடியவரேமெத்தப் பெரியவரென்று
அம்பலவாண ரருள்விடைகொண்டு (திருநாளை)

இதுவுமது-சிந்து.

இ-ம்-சௌராஷ்டிரம்-ஆதிதாளம்.

பல்லவி

தேடித்தேடித்திரிந்தார்பாரு நந்தனார் தம்மைத்
தில்லைமூவாயிரவர்யாரும்

அநுபல்லவி.

நாடுஞ்சதுர்வேதப்பிர சாசனை
நங்கைசிவகாமிப்பிரா ணேசனை
ஆடும்பதநடன சபேசனை
ஆவலாகத்தொழுதேவரும் நேசனை (தேடி)

சரணங்கள்.

தாமரைமலர்த்தடமும் மாதர்களாடிக்
காண்டாடித்திடமும் அன்னமளிக்க
டானந்தங்கூறுமடமும் சோர்பரஅந்
டாளர்வாழுங்காடிடமும் அந்திருத்திரச

சாதிமுதலானபலவாடை பல்லாயிர
ஓதியுலாவிவருமேடை மனுவிக்கியான
நீதியுணர்ந்தோர்தெருமாடை இன்னமும்பல
மந்திரிகளாகுந்திணைமேடை உன்னதமாகக்
கோங்குமிகுந்ததருகெங்குமணத்திடுஞ்சோலை கருப்பஞ்சோலை
தங்குமுயர்ந்தாசித்திவ்வாழையின்சோலை தாழையின்சோலை
தெங்குமிலுப்பையுமொன்றுபொருந்தியசோலை மாவினைச்சோலை
துங்கமதானபலாக்கமுகோங்கியசோலை மற்றுள்ளசோலை
எங்குஞ்சுற்றிப்பார்த்துமறையோர்கள் தங்கள்தங்களகமே
நதிதவமும்
பொங்கரவணிந்தசிவசங்கரன் கிருபையிதென்றேயோங்க
கூக்குரலிட்டே
சங்கையறச்சென்னியிற்கரங் களைக்குவித்தெங்களைத்தாங்க
மனமுவந்து
அங்கேயெங்கள்பங்கினி லிருந்துமேழைகள்வருத்தம்நீங்க
கிருபைசெய்வதற்கு
உன்னதேகடனென வுவந்துகொண்டாடி
உரியவேதமந்தி ராதிகள்பாடி
முன்னைஞ்சொன்ன நந்தனார்வரவைநாடி
மூனுங்கோடைக்காற் றெனவிரைந்தோடி (தேடி)

வசனம்.

இந்தப்பிரகாரம் தில்லைமூவாயிரவர்களுந்தேடி அனுந்து ஓரிடத்தில் யாவருங்கூடி சுவாமியைத் துதிசெய்வதாக நிச்சயஞ்செய்து தோத்திரஞ்செய்கிறார்.

இ-ம்-கலியாணி-அடதாளம்.

பல்லவி.

உனதுமகிமையை யொருவரறிவார்களோ
உலகிலுன்னோரரையனே

அநுபல்லவி.

பன்னகசயனனும் பதுமாசனமேவுகனும்
பார்க்கவவற்குமெட்டாத யோகனே
பகரரியமலைமகளோர் பாகனே (உனது)

கனவிலேவந்தெங்களுக்குச்சொன்ன — அந்த
காரணமறிந்ததிகாலையிலேயெ — ழுந்த
இனத்தார்நாங்கள்யாருமிசைந்தொழுமித் — இந்த
எல்லைமுழுதுந்தேடியிளைத்தோமெங்களுக்கந்த
இணையில்லாதநந்தனரு — மகப்பட
இல்லையென்னசெய்வோம் — ஸ்திரப்பட (உன்னது)

அடையலர்திரிபுரமனலாகவே — முடித்த
அன்பாகமான்மழுவுங்கையிலே — பிடித்த
விடைப்பாகனேகாளிவெட்கும்படி — நடித்த
மெய்யாதுயர்தவிர்த்தாளையாவென்றே — படித்த
வாறுநீயறிந்தருள்செய் — யையனே
வனசங்காபதசரணத் — துய்யனே (உன்னது)

அன்னைசிவகாமியனுதினம்வளர் — தில்லை
யம்பொன்னகர்வருவோர்க்கொருதுய — ரில்லை
உன்னையன்றியுலகத்துக்குப்பொரு — ளில்லை
யுத்தமனேயெங்கட்குரியதுணையு — மில்லை
ஓதுநந்தனார்தம்மைவரச் — செய்யும்
ஊழின்வினைதவிர்த்தவர்க்குவருட் — செய்யும் (உன்னது)

வசனம்

இவ்விதமாகச் சுவாமியைத்துதித்துத் தில்லைமூவாயிரவர்களனைவரும் நந்தனாரைத்தேடி யலுத்துவருமார்க்கத்தில் ஓருப்புறமாக நின்றுக்கொண்டிருந்த நந்தனார் வேதியர்களைக்கண்டு தூரவிலகிநின்று தலைவணங்கிச் சொல்லுவார்.

விருத்தம்.

திட்டமுடனடிபணிந்துமனமொடுங்கித்தவம்புரியுந்தில்லைமன்றுள்
நட்டமிடும்நடராஜன்கனவின்கண்சொன்னமொழிநம்பிக்கொண்டு
இட்டமுடன்திருநாளைப்போவரிடம்வேதியர்களேகும்போது
கிட்டிநெருங்காதேயுமென்றேறவிலகியோர்வார்த்தைகேளீரென்றார்

இ-ம்-செங்கலா-ரூபகதாளம்.

பல்லவி.

கிட்டநெருங்கிவரவேண்டாஞ் சுவாமிகள்காதில்
கேட்டபேர்க்குப்பாவம் வருமெனதுஜென்மம் (கிட்ட)

அநுபல்லவி

சிட்டர்புகழுந்தில்லைதன்னில் செறிந்துவாழும்வேதியர்கள்
இஷ்டமதுவல்லவேயென்று சொல்லவேணுமோபுலையன் (சிட்ட)

சரணங்கள்.

உலகினிற்கடைச்சாதியெந்தனுக் குவமையாருமில்லையே
பலவிதத்துஷ்கருமஞ்செய்து பாரில்வந்தபுலையனையே (சிட்ட)
வேலைசெய்துவுடம்புவளர்க்க வேணுமிந்தநாயடியேன்
தோலுமெலும்புமுதுகில்சுமந்து வல்லயுப்புலையனையே (சிட்ட)
செத்தமாடிழுப்பதென்று சேவகம்பரம்படித்துமெல்லை
சுத்திவந்துதமுக்கடித்துச் சுடலைகாக்கும்புலையனையே (சிட்ட)

வசனம்.

இப்படி வணங்கிச்சொல்லிய திருநாளைப்போவாராகிய நந்தனைப்பார்த்து வேதியர்கள் சொல்லுவார்கள்.

இ-ம்-சுருட்டி-ரூபகதாளம்.

பல்லவி.

சாதியிலுயார்ந்தாலென்ன இந்தப்பேரும்பெருமையுமில்லையே

அநுபல்லவி.

சாதிபெருமைகொண்டதாலே சங்கரனாருகில்வந்து
ஆதரவுடன்வரங்களீந்து அழைப்பாரோசேர்ப்பாரோ (சாதி)

சரணம்.

அளிபெருகவேயீசன்கழலை யறிவிலுன்னியடிபணிந்து
தெளிந்திடாதபேரைமுத்தி தேடுமோநாடுமோகூடுமோ (சாதி)

வசனம்.

இப்படிச்சொல்லியபின் தாங்கள் வந்தகாரியம் பேசுவார்.

திருநாளைப்போவார்புராணம்.

விருத்தம்.

ஐயரே யம்பலவ ரருளாலிப் பொழுதணைந்தோம்
வெய்யவழ லமைத்துமக்குத் தரவேண்டி யெனவிளம்ப
மையுமனத் திருத்தொண்டர் நாளுய்ந்தே னெனதொழுதார்
தெய்வமறை முனிவர்களுந் தீயமைத்த படிமொழிந்தார.

வசனம்.

ஐயரே நடேசருடைய கட்டளையால் இப்போது வெவ்வியதாகிய அக்கினியைமூட்டி உம்மை அதில் மூழ்கும்படிக்குச்சொல்ல வர்கோவென் [illegible] திருநாளைப்போ

வார் அடியேன்கடைத்தேறினேனென்று அவர்களைத்தொழுதார் தெய்வீகமாகிய வேதத்தையுணர்ந்த பிராமணர்களும் நீவளர்ந் தோமென்றுசொல்ல நந்தனார்கேட்டு சந்தோஷமடைந்து நானினை றைக்குத்தான் முத்தனானேனென்று வேதியர்களைப்பார்த்துச் சொல்லுவார்.

இ-ம்-பியாகு-ஆதிதாளம்.

பல்லவி.

கண்டேன் கலிதீர்ந்தேன் பவக்
கடற்கரையேறிவந்தேன்

அநுபல்லவி.

சோதிமறைமுடியுஞ் சொல்லிறந்திடுமீசன்
பாதம்பணிவிடைசெய் பாக்கியவானும்மைக் (கண்)

சரணங்கள்.

எல்லையைக்காணுமுன்னே யிருள் விலகுமுங்கள்
சொல்லைக்கேட்குமுன்னே துன்பங்கள் தீர்ந்திடக்
கள்ளங்கருகச்செய்யுங் கண்ணுதலேயுங்கள்
உள்ளங்குடியாய்க்கொண்டா ருங்கள் தெரிசனம் (கண்)

வசனம்.

நந்தனார் தான்சின்னசாதியாயிருந்தபோதிலும் தெய்வமிரங் கிற்றெனறு சொலலுவார்.

இ-ம்-தனாசரி-ஆதிதாளம்.

பல்லவி.

எனக்குமிரங்கிற்றோ நான்மெத்த ஏழைசாதியல்லவோ

அநுபல்லவி.

தனக்குள் தானயிருந் தகிலப்பிரபஞ்சமுந்
தனக்குள்ளடங்கிய பொன்னம்பலவன்கிருபை (எனக்கு)

சரணங்கள்.

அல்லும்பகலு மருந்தவஞ்செய்கினு
மறியாவொருவரு மம்பலத்தெய்வம் (எனக்கு)
நான்மறைமுடிவும நானறியேனென்று
ஓதியவுண்மை யுலகமறிய (எனக்கு)

வசனம்.

நந்தனார் என்னதவஞ்செய்தேனோ இவ்வுலகின்கண்யாருக்கு ங்கிடைக்காதபாக்கியங் கிடைத்ததென்று சொல்லுவார்.

இ-ம்-ஆகிரி-ரூபகதாளம்.

கண்ணிகள்.

அம்பலவாணனைத் தென்புலியூரானை
நம்பிப்பணிகின்றேனே-அர்ச்சனைசெய்து-கும்பிட்டிருக்கின்றேனே
இல்லைப்பதியில்வந்து எல்லைகடந்தேனென்று
அல்லலறுக்கின்றேனே-சஞ்சிதவினை-யெல்லாம்வென்றத்தேனே
தாண்டவமாடின ஆண்டவன்சேவடி
வேண்டித்துதிக்கின்றேனே-பக்கணங்களைத்-தாண்டித்துதிக்கின்றேனே
வார்த்தெனைத்தனைத்தன் றெந்தவேளையுமாயுஞ்
சிந்தைகுழைகிறதே-சேர்ந்தவனென்று-தன்னைத்தருகிறதே
தென்றமிழ்ப்பாடி யுள்ளமுருகியுள்ளில்
கள்ளங்கருகிறதே-கருத்திலெட்டா-வெள்ளம்பெருகிறதே
ஆசைவலையைப்போட்டு மோசப்படுத்துஞ்சீவ
பாசங்குலைத்தாரோ-அளவிடாத-கிலேசந்துலைத்தாரோ
பெண்டூரிமொழுக் கொண்றெனைச்சடைத்
தன்றனைத்தாரோ-கருணைபொங்கும்-கண்ணாலணைத்தாரோ
அடுத்தவர்த்தவனென்று பிடித்தபேய்களையோட்டி [ரோ
தடுத்தாட்கொண்டாரோ-பரமபதங்-கொடுத்தாட்கொண்டா

பெரியபுராணம்.

விருத்தம்.

மறையவர்கள் மொழிந்ததற்பின் றென்றிசையின் மதிற்புறத்துப்
பிறையுரிஞ்சுந்திருவாயின் முன்றுக்கப்பிஞ்ஞகர்தம்
நிறையருளான் மறையவரும் நெருப்பமைக்குழியெய்தி
இறையவர்தாண் மனங்கொண்டே யெரிசூழவலங்கொண்டார்.

வசனம்.

நந்தனார் இப்படிபிராமணர்கள் சொல்லியபின்பு தென்றிசையிலுள்ள மதிலின்புறத்திலே சந்திரனைத் தவழ்ந்து போகும்படி உயர்ந்திருக்குந் திருக்கோபுர வாசலுக்குமுன்னே சுவாமியின் ஸைந்த திருவடியைப்போற்றிக் கட்டளையாலே வளர்த்திருக்கின்ற நெருப்பின் குழியை அடைந்து சடையருடைய திருப்பாதத்தை மனதில் தியானித்து அக்கினியைச் சுற்றி வலமாக வந்தார்.



நடராஜர் சிவகாமியம்மையார் சந்நிதிமுன் அக்கினிகுண்டத்தீயில் நந்தனார்
முழ்கி முனிவடிவாகி மோக்ஷமடைந்தும் தீக்ஷதர்கூட்டம் தோத்திரம் செய்தல்

இதுவுமது விருத்தம்.

கைதொழுதுநடமாடுங்கழலுன்னியழல்புக்கார்
எய்தியவப்பொழுதின்கண் ணெரியின்கணிம்மாயப்
பொய்தகையுருவொழித்துப்புண்ணியமாமுனிவடிவாய்
மெய்திகழ்வெண்ணூல்விளங்கவேணிமுடிகொண்டெழுந்தார்.

வசனம்.

நந்தனார் கையிற்கும்பிட்டு நடனஞ்செய்கின்ற நடேசருடைய திருப்பாதங்களை மனதில் உறுதியாக நினைத்து அக்கினியில் புகுந்தார் அப்படிச்செய்தபோது அந்த நெருப்பில் இந்த உலகசம்பந்தமாகிய நிலையில்லாத உடலத்தை யொழித்துப் புண்ணியஞ் செய்கின்ற பெருமைபொருந்திய பிராமணமுனியின்வடிவமாய்த் தேகத்தில் பூணூல்விளங்கச் சடைமுடியோடும எழுந்தார்.

இ-ப்-மோகனப்-ஆதிதாளம்.

பல்லவி.

யாகோற்பவமானார் நந்தனார் அரனருளால்
யாகோற்பவமானார்

அநுபல்லவி.

யோகமாதவரும் போகவாழ்வினரும்
வேகமாய்ச்சுக மாகவந்துதொழ (யாகோற்)

சரணங்கள்.

சிவனாருரைத்தவாக்கியம் சித்தத்திலெண்ணிச்
சிறந்ததேமிக சிலாக்கியம்
தவறுதநேசபாக்கியம் பொருந்திவிடந்
தன்னைக்கொண்டதே யோக்கியம்
தவனனோடுவுயர் கவனமேவிவரு
மேவருங்காந்தருவ ரெவருங்கண்டுதொழ (யாகோற்)
கைகளைச்சிரமேற்பதித்து சிவமேயென்று
கனகசபையைத் துதித்து
செய்யகுண்டத்தைவெடித்து கதிரவன்போற்
செனித்தாரதிலே நடித்து
சித்திமுற்றுப் பாம்புபுலி
பக்தியாய்ச்செழும் பதத்தைக்கண்டுதொழ (யாகோற்)

காதிற்குண்டலமிலங்க முப்புரிநூலுங்
கதித்துமார்பிடமலங்க
ஓதுஞ்சடைகள்துலங்க ஆவலைவிட்டு
ஓடியேவினை கலங்க
ஏதமற்றசதர் பேதமின்றிதொழ (பாகேசற)

திருநாளைப்போவார்புராணம்.

விருத்தம்.

செந்தீமேலெழும்போதுசெம்மலர்மேல்வந்தெழுந்த
அந்தணனைபோற்றோன்றினாரந்தாதுந்துபிநாதம்
வந்தெழுந்ததிருவிசும்பில்வானவர்கண்மகிழ்ந்தார்த்துப்
பைந்துணர்மந்தாரத்தின்பனிமலர்மாரிகழ்பொழிந்தார்.

வசனம்.

சிவந்தநெருப்பினின்றும் எழுந்தபோது செந்தாமரைப்புஷ்பத்தின்மேல் உதயமாயெழுந்தருளும் பிரமாவைப்போல் பிரகாசித்தார் பெருமைபொருந்திய ஆகாயத்தில் அந்தரதுந்துபியின் கோஷ்டமானது உண்டாயிற்று. தேவர்கள்சந்தோஷமாய் ஆரவரித்து அழகாயிருக்கின்ற கற்பகவிருட்சத்தின் குளிர்ச்சிபொருந்திய மலர்களை வருஷமாக சொரிந்தார்கள்.

பெரியபுராணம்.

விருத்தம்.

திருவுடையதில்லைவாழந்தணர்கள்கைதொழுதார்
பாவரியதொண்டர்களும்பணிந்துமனங்களிபயின்றார்
அருமறைசூழ்திருமன்றுளாடுகின்றகழல்வணங்க
வருகின்றார்திருநாளைப்போவாராமறைமுனிவர்.

வசனம்.

ஞானசம்பத்தையுடைய தில்லைவாழும் பிராமணர்கள் கைகூப்பினார்கள் பாவுதற்கரிய மற்றசிவபத்தர்களும் தொழுது மனத்தில் களிப்படைந்தார்கள் வேதங்கள் முழங்குகின்ற கனகசபையில் ஆடுகின்றபாதத்தை வணங்கும்பொருட்டுத் திருநாளைப்போவாராகிய ஒருவேதமுனிவர்வருகையில் ஆனந்தத்தாண்டவத்தை வர்ணித்துச்சொல்லுவார்.

இராகம்-தேசிகதோடி-ஆதிதாளம்.

பல்லவி.

தாதெய்தெய்யென்றாடுவார் - அவர் - தத்தித்தெய்யென்றாடுவார்

அநுபல்லவி.

ஆதிபராபரமாகியசித்து
ஆனந்தங்கொண்டொரு காலையெடுத்துத் (தாதெய்)

சரணங்கள்.

அண்டசராசரமெங்கும்நடுங்க
ஆதிசேடனார்முடிகணெருங்க (தாதெய்)

சிலம்பெருகியமுனிவர்கொண்டாட
திங்களுஞ்சூடியசெஞ்சடையாட (தாதெய்)

பார்புகழுந்தில்லைச்சிதம்பரநாதன்
பாலகிருஷ்ணன்பணிந்தேத்தியபாதன் (தாதெய்)

இராகம்-எமுனாகலியாணி-ரூபகதாளம்.

பல்லவி.

சபாபதியைப்பாடு-மனமே-தினமுங்கனக (சபாபதி)

அநுபல்லவி.

சபாபதியைப்பாடு சந்ததமுநீ கொண்டாடு-நல்ல
சாதனங்களைத்தேடு பவசாகரந்தள்ளிப் போடு (சபா)

சரணங்கள்.

உலகமெல்லாமாய மென்றறுதிக்கொள்வது ஞாயம்
தெரியாதுசம்பிரதாயம் அந்தபாரம்பரைவுள்ள ஞாயம் (சபா)

பாம்பின்வாயின்வேகம் அதுபோலவிஷய போகம்
சாற்றும்அறிவில்லாதேகம் உனக்கேதுக்கிந்த மோகம் (சபா)

பாலகிருஷ்ணன்போற்றும் பதம்பாதங்கள் குடிமாற்றும்
பரமானந்தவெளிதோற்றும் உரவாதுக்கே யிருந்தோம் (சபா)

இராகம்-யமுனாகலியாணி-அடதாளம்

பல்லவி.

ஆனந்தக்கூத்தாடினார்-அம்பலந்தனிலே-பொன்னம்பலந்தனிலே

அநுபல்லவி.

ஆனந்தக்கூத்தாடினார் அயனும்மாலும்பாடினார்
அந்தரங்கமாய்ச் சிந்தித்தபேர்க்கருள்
தந்தோந்தந்தோமென்று தொந்தொந்தந்தோமென்று (ஆனந்)

சரணங்கள்.

பதஞ்சலிமாமுனியை — நோக்கிப்
பார்த்தபேர்கள்குறையைப் — போக்கி
இதமிதமென்றறிவை — நீக்கி
எமபாதக்காலைத் — தூக்கி (ஆனந்)

மத்தளந்தாளமதிர — முழங்க
வளரும்பிறமதகணங்க — ளிலங்க
தத்திமிதக்கிடதோமென் — றிலங்க
சபையுந்துலங்கச்சதங்கை — குலுங்க (ஆனந்)

பாலகிருஷ்ணன்பணியும் — பாதன்
பார்த்தபேர்கள்வரப்ர — சாதன்
ஞாலம்புகழுஞ்சீல — போதன்
சுந்தரத்தூதன் அம்பிகை — நாதன் (ஆனந்)

வசனம்.

இப்படி ஆடிய தாண்டவதெரிசனங் கொடுக்க இன்றைக்குத்தான் சித்தமிரங்கிற்றோவென்று சொல்லுவார்

இராகம்-யமுனாகலியாணி-ஆதிதாளம்.

பல்லவி.

சித்தமிரங்கிற்றோ யான்முன் செய்தவமுத்திற்றோ

அநுபல்லவி.

அத்தாபரிசுத்தாவுன் னுடல்காணவந்தேன்
என்னையாண்டுகொள்ளிதுவேசமயமுன்னுடல்காணவந்தேன்

சரணங்கள்.

சாதிமுறைபேசக்கும்-என்னைச்-சதுர்மறையவராக்கும்
போதா-தில்லைநாதா-வுன்னுடல்காணவந்தேன்
என்னையாண்டுகொள்ளிதுவேசமயமுன்னுடல்காணவந்தேன்
பாலகிருஷ்ணன்போற்றும்-பாதா-பதஞ்சலிபாரோத்துஞ்
சீலா திரிசூலா-வுன்னுடல் காணவந்தேன்
என்னையாண்டுகொள்ளிதுவேசமயமுன்னுடல்காணவந்தேன்

சிந்து.

சன்னிதிவாசலில்வந்து-காட்சிகொடுத்துக்கடாட்சித்தபின்
மரிபிரிவிடைமுழுகி-மெருகு-இன்பமெய்யருகியவன்பருடன்
[illegible]-தில்லை-வேதியர்கண்டுதொழுகாதலாய்
அங்கமபுளகிதமாய்ச்-செம்பொன்.

வசனம்.

திருநாளைப்போவாராகிய முனிவர் அக்கினியிற் குளித்தெழுந்து கனகசபையில் வந்து மனமுருகி ஆனந்தம் பெருகி எம்மாண்டவராகிய நடேசமூர்த்தியைத் தோத்திரஞ் செய்கின்றார்.

தேவாரம்.

பாளையுடைக்கமுகோங்கிப் பன்மாடநெருங்கியெங்கும்
வாளையுடைப்புனல்வந்தெறி வாழ்வயற்றில்லைதன்னுள்
ஆளையுடைக்கழற்சிற்றம் பலத்தாடல்கண்டாற் [னே
பீளையுடைக்கண்களாற்பின்னைப் பேய்த்தொண்டர் காண்பதென்

பொருவிடையொன்றுடைப் புண்ணியமூர்த்திபுலியதளன்
உருவுடையம்மைமலைமங்கை மணாளனுலகுக்கெல்லாந்
திருவிடையந்தணர்வாழ்கின்ற தில்லைச்சிற்றம்பலவன்
றிருவடியைக்கண்டகண்கொண்டு மற்றினிக்காண்பதென்னே.

தொடுத்தமலரொடுதூபமுஞ் சாந்துங்கொண்டெப்பொழுதும்
அடுத்துவணங்குமயனொடுமாலுக் குங்காண்பரியான்
பொடிக்கொண்டணிந்து பொன்னாகிய தில்லைச்சிற்றம்பலவன்
உடுத்ததுகில்கண்டகண்கொண்டு மற்றினிக்காண்பதென்னே.

வைச்சபொருணமக்காகுமென் றெண்ணிநமச்சிவாய
வச்சமொழிந்தேனணிதில்லை யம்பலத்தாடுகின்ற
பிச்சன்பிறப்பிலிபேர்நந்தியுந்தியின் மேலசைத்த
கச்சைகண்டாற்பின்னைக் கண்கொண்டுகாண்பதென்னே.

செய்ஞ்ஞின்றநீலமலர்கின்ற தில்லைச்சிற்றம்பலவன்
மைஞ்ஞின்றவொண்கண்மலைமகள் கண்டுமகிழ்ந்துநிற்க
நெய்ஞ்ஞின்றெரியும்விளக்கொத்த நீலமணிமிடற்றுக் [னே.
கைஞ்ஞின்றவாடல்கண்டாற் பின்னைக்கண்கொண்டுகாண்பதென்

ஊனத்தைநீக்கியுலகறிய வென்னையாட்கொண்டவன்
றேனொத்தெனக்கினியான்றில்லை சிற்றம்பலவனெங்கோன்
வானத்தவருய்யவன்னஞ்சை யுண்டகண்டத்திலங்கும்
ஏனத்தெயிறுகண்டாற்பின்னைக் கண்கொண்டுகாண்பதென்னே

தெரித்தகணையாற்றிரிபுரமூன்றுஞ் செந்தீயின்மூழ்க
வெரித்தவிறைவனிமையவர்கோமா னிணையடிகள்
தரித்தமனத்தவர்வாழ்கின்ற தில்லைச்சிற்றம்பலவன்
சிரித்தமுகங்கண்டகண்கொண்டு மற்றினிக்காண்பதென்னே.

[illegible] 8

[illegible] 9

[illegible] 10

[illegible] 11

[illegible] 12

[illegible] 13

[illegible] 14

[illegible] 15

[illegible] 16

பண்ணினிசையாகிநின்றாய்போற்றி பாவிப்பார்பாவமறுப்பாய்போற்றி
யெண்ணுமெழுத்துஞ்சொல்லானாய்போற்றி யென்சிந்தைநீங்காவிறைவாபோற்றி
விண்ணுநிலனுந்தீயானாய்போற்றி மேலவர்க்குமேலாகிநின்றாய்போற்றி
கண்ணின்மணியாகிநின்றாய்போற்றி கயிலைமலையானேபோற்றிபோற்றி 17

இமையாதுயிராதிருந்தாய்போற்றி யென்சிந்தைநீங்காவிறைவாபோற்றி
யுமைபாகமாகத்தணைத்தாய்போற்றி யூழியேழானவொருவாபோற்றி
யமையாவருநஞ்சமார்ந்தாய்போற்றி யாதிபுராணனாய்நின்றாய்போற்றி
கமையாகிநின்றகனலேபோற்றி கயிலைமலையானேபோற்றிபோற்றி. 18

மூவாய்பிறவாயிறவாய்போற்றி முன்னமேதோன்றிமுளைத்தாய்போற்றி
தேவாதிதேவர்தொழுந்தேவேபோற்றி சென்றேறியெங்கும்பரந்தாய்போற்றி
யாவாவடியேனுக்கெல்லாம்போற்றி யல்லனலியவலந்தேன்போற்றி
காவாய்கனகத்திரளேபோற்றி கயிலைமலையானேபோற்றிபோற்றி. 19

நெடியவிசும்பொடுகண்ணேபோற்றி நீளவகலமுடையாய்போற்றி
யடியுமுடியுமிகலிப்போற்றி யங்கொன்றறியாமைநின்றாய்போற்றி
கொடியவன்கூற்றமுதைத்தாய்போற்றி கோயிலாவென்சிந்தைகொண்டாய்போற்றி
கடியவுருமொடுமின்னேபோற்றி கயிலைமலையானேபோற்றிபோற்றி. 20

உண்ணாதுறங்காதிருந்தாய்போற்றி யோதாதேவேதமுணர்ந்தாய்போற்றி
யெண்ணாவிலங்கைக்கோன்றன்னைப்போற்றி யிறைவிரலால்வைத்துகந்தவீசாபோற்றி
பண்ணாரிசையின்சொற்கேட்டாய்போற்றி பண்டேயென்சிந்தைபுகுந்தாய்போற்றி
கண்ணாயுலகுக்குநின்றாய்போற்றி கயிலைமலையானேபோற்றிபோற்றி. 21

சிந்து.

அம்பலமேவிய சம்பிரமத்தைக் கண்டோ மிந்நிலையால்

விருத்தம்.

தில்லைவா ழந்தணரு முடன்செல்லச் சென்றெய்திக்
கொல்லைமான் மறிக்கரத்தார் கோபுரத்தைத் தொழுதிறைஞ்சி
யொல்லைபோ யுட்புகுந்தா ருலகுய்ய நடமாடும்
எல்லையினைத் தலைப்பட்டார் யாவர்களுங் கண்டிலரால்.

வசனம்.

சைவபுராணமாகிய பெரிய புராணத்தில் திருநாளைப்போவார் நாய
னாரென்று பிரசித்திபெற்ற சேக்கிழார் சுவாமிகள் சொல்லியிருப்பதாவ
[illegible]யில் நந்தமுனியென்று வழங்குகின்ற நாளைப்போவார் தில்லைமூ
வாயிர முனிவர்களோடுகூட பொன்னம்பலம்வந்தார், அதற்கப்பாலவ
ரைக் கண்டவர்களில்லை யென்று பெரிய புராணம் பாடியருளிய சேக்
கிழார் சுவாமிகள் சொன்னது அந்தத் திருநாளைப்போவாரென்று

முனிபாவலர் புரட்டாசிமாதம் உரோகிணி நட்சத்திரத்தில் கனக சபையில் வந்து கற்பூரச் சோதியைப்போல் தோன்றிய சிவசாரூப்பிய நிலைத யடைந்தாரென்று உபமன்னிய மகாரிஷி பண்ணிய பக்தவிலாச த்திலேயும் சொல்லப்பட்டிருக்கின்றது.

இதுவுமது விருத்தம்.

அந்தணர்க ளதிசயித்தா ரருமுனிவர் துதிசெய்தார்
வந்தணைந்த திருத்தொண்டர் தம்மைவினை மாசறுத்துச்
சுந்தரத்தா மரைபுரையுந் துணையடிக டொழுதிருக்க
வந்தமிலா வானந்தப் பெருங்கூத்த ரருள்புரிந்தார்.

வசனம்.

மறையோர்கள் ஆச்சரியப்பட்டார்கள் அரியமுனிவர்கள் ஸ்தோத்திரஞ் செய்தார்கள் முடிவில்லாத ஆனந்தத்தாண்டவஞ் செய்தருளுகின்ற சபாநாதர் தமது கட்டளையால் வந்தடைந்த திருநாளைப்போவார்க்குத் தீவினையாகிய களங்கத்தை நீக்கி அழகாகிய தாமரை மலரை யொத்த இரண்டு பாதங்களையுந் தொழுதிருக்கும்படியாகத் திருவருள் புரிந்தார்.

விருத்தம்.

மாவிடம்பு விடுத்தீயின் மஞ்சனஞ்செய் தருளியெழுந்
தாசின்மறை முனியாகி யம்பலவர் தாளடைந்தார்
தேசுடைய கழல்வாய்த்துத் திருநாளைப் போவாரும்
மாசகல முயன்றுதிரு நடனங்கண்டு மகிழ்வுற்றார்.

வசனம்.

தமக்கு முன்னிருந்த உடலமாயையாக நீங்கும்பொருட்டு அக்கினி யாகிய திருமஞ்சனமாடி யெழுந்து குற்றமற்ற பிராமணமுனி வடிவ மாகி நடேசருடைய திருவடியை யடைந்தவராகிய திருநாளைப்போவா ருடைய பதத்தைப் புகழ்ந்து தீவினையாகிய கயிறு அறும்படி தில்லைமூ வாயிரவர்கள் போற்றிசெய்துக் கொண்டிருந்தார்கள்.

வாழி விருத்தம்.

பங்கயமாதர்வாழி பார்மகளுமையாள்வாழி
செங்கண்மாலயனும்வாழி தேவர்கள்குருவர்வாழி
தங்குநான்மறையோர்வாழி தாரணியரசர்வாழி
பொங்குநூல்வல்லார்வாழி போதவென்னெஞ்சும்வாழி.

மங்களம்.

இராகம்-அசாவேரி-ஆதிதாளம்.

பல்லவி.

திருநாளைப்போவாருக்கு ஜெயமங்களம்-எங்கள்
தில்லைமூவாயிரவர்க்குச் சுபமங்களம்

அநுபல்லவி.

இருடிகளிருவரி தரிசுதி சபமென
விருகரமுடிமிசை மருவத்துதிசெய்கண
பாவுமும்பர் சம்பிரமங்கள் துதித்திடும்
பரமனுடம்பலத்தில் கதித்திடும்(திருநா)

சரணங்கள்.

திருவாசகமும் திருக்கோவையாரு னவற்கும்
சீர்காழியிலுதித்த சிறந்தசம்பந் தருக்கும்
ஒருமாதிடத்திற் றூதுக்குவந்துவிடுத் தவற்கும்
ஒருவரொப்பில்லாத்திருநாவுக்கர சருக்கும்
உரிமறைக்கு-முபர்கலைகட்கும்-உரைபதிக்கு முளைபதிக்கும்
ஓதுசந்திரசூரியர் முனிவர்களுக்கும்
தீதிலாதபாவலர்முதலினை வர்க்கும்(திருநா)

திருநாளைப்போவாரென்னும்

நந்தனார் சரித்திரக் கீர்த்தனை.

முற்றிற்று.



உ

கடவுள் துணை.

சிதம்பரக்கும்மி.

விநாயகர் துதி.

சீர்மேவுந்தில்லையம்பலத்தில் அன்பு
சேரக்கும்மிதமிழ்ப்பாடக்
கார்மேவுமேலைக்கோபுரவாசல்
கற்பகப்பிள்ளையார்காப்பாமே. ௧

முக்குறுணிவிநாயகர் துதி.

சர்க்கரைமோதகந்தேங்காயுங்கொண்டு
சந்நிதிமுன்பாகத்தான்படைத்து
முக்குறுணிப்பிள்ளையாரைவேண்டி
முழங்கிக்கும்மியடியுங்கடி ௨

சுப்பிரமணியர் துதி.

கோலமயிலின்முதுகேறிவந்து
கும்பமுனிக்குவருட்செய்யும்
பாலசுப்பிரமணியன்பீஜாட்சரத்தைப்
பாடிக்கும்மியடியுங்கடி ௩

கங்காதேவிக்குக்கைகூப்பியாருங்
கையிலெடுத்துள்ளேபானம்பண்ணி
தங்காமற்சிவகாமிசந்நிதி
சார்ந்துகும்மியடியுங்கடி ௪

கருதுஞ்சுருதிக்கெட்டாதசிவ
காமசுந்தரிவாசலிலே
விருதுபேசியசிறுகுழந்தைகள்
வேதம்படிக்குதுபாருங்கடி ௫

நாலுப்புறத்திலுகோபுரமாமதி
ணடுவிலெங்கினுமாளிகையாம்
காலோராயிரங்கொண்டொருமண்டபம்
கட்டியிருக்குதுபாருங்கடி ௬

தூயமறைமுதலாராய்ந்துமிங்கே
துலங்கியமூவாயிரவர்
ஞாயம்பொருந்தியதேவசபைவந்து
நாடிக்கும்மியடியுங்கடி ௭

சாந்துபொட்டுதளதளென
சந்தனவாடைகுமுகுமெனக்
கூந்தலழகிக்காரியெல்லாங்காலைக்
குளித்துக்கும்மியடியுங்கடி ௮

அஸ்தகடகம்பளப்பளென்னசொல்லும்
அரைஞாண்மாலைதளதளென்ன
விஸ்தாரமாகநின்றுகொண்டுகையை
வீசிக்கும்மியடியுங்கடி ௯

கைதனில்விபூதிப்பையுங்கொண்டு அவர்
கண்டத்தில்ருத்திராட்சமாலைபூண்டு
வைதீகபூசைகள்செய்கின்றதீக்ஷதர்
வாழக்கும்மியடியுங்கடி ௰

கோவிலுக்குநாலுபேர்களுண்டா அவர்
குறித்தமுறையாய்ப்பூசைசெய்ய
பாவித்தபின்பவர்வேறொருவர்வசப்
படுத்துவாரென்றேகும்மியடி கக

ஆண்டுக்குள்ளாறபிஷேகமுண்டாம்பின்னும்
அதிலேரெண்டுதிருநாளாம்
வேண்டிவந்தார்கள்கலிதீருமென்று
விரைந்துகும்மியடியுங்கடி க௨

பூமிபுகழ்ந்திடுந்தில்லைப்பதியது
பூலோகக்கயிலாசமென்று
தாமரைப்பூவினில்வாழ்கின்றலட்சுமி
தாயார்சந்நிதிபாருங்கடி க௩

மூலஸ்தானத்தைக்கண்டாயேநல்ல
முத்திபிதுவென்றுகொண்டாயே
காலெடுத்தாடியகீர்த்தசபேசரைக்
கண்டுதெரிசிப்போம்வாருங்கடி க௪

தில்லைமாகாளியோடாடிவர அவள்
சித்தங்கலங்கித்தலைகுனிந்தாள்
வெல்லுவதெப்படியென்றிருகாலை
விண்ணிலெடுத்தார்பாருங்கடி க௫

நெற்றியில்வேர்வைமுத்துதிர்ந்துமெத்த
நேத்தியதாய்ப்பாரந்தோடிவர
பத்தியுடன்பொன்னம்பலவாணனைப்
பணிந்துகும்மியடியுங்கடி ௧௬

சித்தியென்றீசனடம்புரியமெய்த்
தேவர்கள்பூமழைதான்சொரிய
மக்களங்கொட்டியேகோபாலகிருஷ்ணனை
வாழ்த்திகும்மியடியுங்கடி ௧௭

சிதம்பரமென்றுசொல்லாமல்விச்
சித்திரக்கூடமென்றுசொல்லி
விதங்கொண்டாடுமையங்கார்கள்வந்து
நின்றிருக்கின்றார்கள்பாருங்கடி ௧௮

காணிக்கைகொண்டுவாருங்கடியிந்தக்
கனகசபையைப்பாருங்கடி
மாணிக்கவாசகர்புகுந்தவாசலை
மதித்துக்கும்மியடியுங்கடி ௧௯

அன்னமுடன்பால்தேன்கனியும்செய்யும்
அபிஷேகமுண்டெந்நாளும்
பொன்னம்பலந்தனிற்சந்த்ரமௌளியைப்
போற்றிக்கும்மியடியுங்கடி ௨௰

முத்தியளித்திடுஞ்சந்நிதிக்குச்சொல்லும்
மேளமுந்தாளமுமேதுக்கடி
சத்தம்பெருகியகண்டாமணியோசை
சந்நிதிக்கேர்வையாம்பாருங்கடி ௨௧

புட்டுவடையுந்தேன்குழலும்மணம்
புத்துருக்குநெய்ச்சம்பாவும்
சட்டப்படிதவறாமலேயன்
சந்நிதிக்கேர்வையாம்பாருங்கடி ௨௨

சுற்றிவந்துச்சியைப்பாருங்கடிநல்ல
சோதிமயக்கம்பொன்பதடி
தத்துவங்கள்தொண்ணூற்றாறுங்கூடிச்
சமைந்தசபையைப்பாருங்கடி ௨௩

[illegible]திகள்கண்ணுக்குச்செப்போடுஉற்றுப்
பார்த்தாற்பத்தரைமாற்றுத்தங்கம்
[illegible]வபாடியமாணிக்கவாசகர்
கோவிலழகையும்பாருங்கடி ௨௪

அஞ்செழுத்தாலேமதிலுண்டாம்பர
மானந்தக்கும்பமுமங்குண்டாம்
அஞ்செழுத்துப்படிக்கப்பாலேபிர்ம
மானந்தத்தாண்டவம்பாருங்கடி உரு

கோடியுகந்தவஞ்செய்தாலுமிந்தக்
கோவிலைப்பார்க்கமுடியாது
ஆடியபாதத்தைக்கண்டாருக்கிணை
யாரென்றுசொல்லுவோம்பாருங்கடி உசு

நெற்றியிலேதிருநீறணிந்துஎன்றும்
நிஷ்களமாகியசிற்சபையில்
நித்திக்கவேசிவநாமத்தைபூசிக்கும்
தீக்ஷதர்கூட்டத்தைப்பாருங்கடி உஎ

வெட்டவெளியிற்றிரைதிறந்துயார்க்கும்
வேதியர்தீபமுங்காட்டிவர
சட்டமுள்ளசிவசிதம்பரமென்று
சாய்ந்துகும்மியடியுங்கடி உஅ

தில்லைவெளிதனைக்கண்டேண்டிஎன்
தேகம்பரவசங்கொண்டேண்டி
அல்லலறவாசல்நின்றேண்டிமிக்க
ஆனந்தத்தாண்டவம்பாருங்கடி உகூ

ஆகாயலிங்கத்தைக்கண்டேண்டி இங்கே
யாருமறியாமல்நின்றேண்டி
ஏகாந்தமாகவிருந்தேண்டிமன
தேக்கந்துலைந்ததுபாருங்கடி ௩ய

சித்தஞ்சிதம்பரமாச்சுதடிமுன்பு
செய்தவினையெல்லாம்போச்சுதடி
சுத்தப்பிரமமயமாச்சுதடியதைச்
சொல்லத்தெரியுமோபாருங்கடி ௩௧

சாதிபேதங்களற்றேண்டிஇந்தச்
சாஸ்திரமனத்தையும்விட்டேண்டி
போதமயக்கந்தொலைத்தேண்டியன்பு
பொருந்தக்கும்மியடியுங்கடி ௩௨

நாடுந்தைப்பூரணபூசத்திலேதில்லை
நாயகன்குருவாரத்திலே
ஆடியநாடகம்பாம்பும்புலிதனக்
காமென்றுகும்மியடியுங்கடி ௩௩

சஞ்சிதக்கர்மங்கள்விட்டேண்டிபவ
சாகரத்தையொழித்திட்டேண்டி
குஞ்சிதபாதத்தைத்தொட்டேண்டிமனங்
கூர்ந்துகும்மியடியுங்கடி ௫௪

சொல்லும்பொருளைமற்றாயோமுன்
துன்பமனைத்துமொழித்தாயே
அல்லும்பகலையுமற்றாயோதில்லை
யானந்தத்தாண்டவம்பாருங்கடி ௫௫

விதியெழுத்தைக்கிழித்தாச்சுமுன்
விட்டகுறைவந்துதொட்டாச்சு
மதியமிர்தமுமுண்டாச்சுதென்று
வாழ்த்திக்கும்மியடியுங்கடி ௫௬

கோவிலுக்குள்ளேயநேகமுண்டு அந்தக்
குறிப்பறிந்ததைச்சொல்லுவீரே
தேவரகசியம்பள்ளியரைவந்து
தெளிந்துகும்மியடியுங்கடி ௫௭

சண்டேஸ்வரர்தமைப்பாருங்கடி அந்தச்
சந்நிதியிலேகையைகொட்டுங்கடி
மண்டலம்புகழுமழகர்வாசலில்
வாழிபாடுவோம்வாருங்கடி ௫௮

வீட்டுக்கவலைகள்விட்டொழியார்
வீம்புகள்பேசியவீணலைவார்
பாட்டைப்படித்தாலும்சிதம்பரம்வந்த
பலனதல்லவோபாருங்கடி ௫௯

புத்திரபாக்கியமெத்தவுண்டாம்பசும்
பொன்னுமணிப்பூஷணமுமுண்டாம்
பத்தியுடன்கோபாலகிருஷ்ணன்தினம்
பணியக்கும்மியடியுங்கடி

சிதம்பரக்கும்மி

முற்றிற்று.

உ

கடவுள்துணை.

திருச்சிற்றம்பலம்.

அகராதி.

அகராதி முற்றிற்று.
